தமிழ்முரசு

1951 - ஜனவரி

விலை 6 அணா

பொங்கிடும் பால் போல் பொங்குக இன்பம்!

நாட்டுக்கும் சமூகத்துக்கும்
நன்மைதரும் கருத்துக்கள்.
கண் கவரும் காட்சிகள்.
காதுக்கினிய கீதங்கள்.

இத்தகைய சிறப்புகளுடன்
புதிய சமூகப்படங்கள் பல
தயாராகின்றன.

AVM
புரொடக்ஷன்ஸ்
சென்னை. 24.

G.H. RAO



உங்கள் தேவைக்கு வேண்டிய சகல விதமான வெள்ளிப் பாத்திரங்களும் பொன், வெள்ளி நகைகளும் உத்திரவாதத்துடனும் சிறந்த வேலைப்பாடுடனும் திருப்தியான முறையில் தயாரிக்குமிடம் :

A. ராதா அண்ட் சன்ஸ்

பொன், வெள்ளி நகை வியாபாரம்

ஸ்ரீநிவாஸ், மயிலாப்பூர்

ஷோ ரூம் :
94, கச்சேரி ரோடு

ஒர்க் ஷாப் :
100, கச்சேரி ரோடு

'செங்கோல்'

(தமிழரசு இயக்க வார வெளியீடு)

நிர்வாக ஆசிரியர் : ஆ. கோ. வேங்கடராமானுஜம்.

★

பிரதி ஞாயிறு தோறும்
வெளிவந்து கொண்டிருக்கிறது

தனிப்பிரதி விலை இரண்டு அணா

ஆண்டு சந்தா ரூ. ஆறு

★

செங்கோல்' செயலகம்

திருவல்லிக்கேணி, சென்னை—5

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி 5 : : சென்னை 1951 ஜனவரி : : பகுதி 8-9

பொருளடக்கம்

காணிக்கை	....	தலையங்கம்	5
தமிழரசும் சமஷ்டியும்	....	'எழிலரசு'	10
வானத்து நிலா	....	கா. மு. ஷெரீப்	15
சுற்றி நில்லாதே போ!	....	'வானம்பாடி'	17
இந்தியக் குடியரசு வாழ்க!	....	"தேசியவாதி"	21
தமிழ் வளர்த்த போப் ஐயர்	....	நாவலர் ரா. பி. சேதுப்பிள்ளை	28
காதல் நோய்	....	சி. வே.	24
தமிழ் மாகாணம் வருக!	....	தெ. பொ. மீ.	28
புள்ளி விபரம் பேசுகிறது!	....		31
மதிப்புரை	....		32
உபநிஷதங்களும் பௌத்த நூல்களும்		எஸ். வையாபுரிப் பிள்ளை	33
தம்பிக்கு	....	டாக்டர் மு. வ.	36
மார்கழித் திங்களின் மாண்பு	....	"ஞானம்"	40
கடைசிக் கடிதம்	....	ந. சஞ்சீவி	42
கண்கள்	....	கு. மா. பா.	46
கவிதையில் காமரசம்	....	'விளக்கு'	54
இந்தியாவின் பெருமையிலே தமிழகத்தின் முதன்மை —			60
சிலம்பு காட்டும் செந்நெறி	....	ம. பொ. சி.	62

நல்ல அறுவடையை உத்தேசித்துப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்!

நூல் உற்பத்தி பெருகி, விநியோக முறைகள் சீர்பட்டு, உள்நாட்டுத் தேவைகள் பூர்த்தியாகி, ஏற்றுமதி வியாபாரம் வளர்ந்து, நம் நாடு சுபிட்சத்தையும், தொழில் வளத்தையும் காணும் நாளை நாம் என்று கொண்டாடுவது?

மேற்கண்ட இலக்ஷியத்தை அடைய தொழிலதிபர்கள், தொழிலாளிகள், அரசாங்கத்தார், பொதுமக்கள் ஆகிய அனைவரின் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை!

நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய என்றும் பின்வாங்கியதில்லை!

★

பங்கஜா மில்ஸ், லிமிடெட்,

தபால் பெட்டி நெ. 150,
கோயமுத்தூர்

காணிக்கை!

தைத் திங்கள் முதல் நாள், தமிழருக்குப் பொங்கல் நாள் என்பது உலகறிந்த உண்மை. 'பொங்கல் திருநாள்' என்றாலே, தமிழருக்கு இன்ப உணர்ச்சி பொங்கி எழும்; உள்ளம் பூரிப்படையும் இதுபோன்ற ஒரு சிறந்த திருநாள் தமிழருக்கு வேறு இல்லை என்பது வெளிப்படை.

ஆதி மனிதர்களில் ஒரு சாரார், காய் கனி சருகுகளை உண்டு காலங்கழித்தனர்; மற்றொரு சாரார், பறவைகளை யும், மிருகங்களையும் கொன்று தின்று வயிறு வளர்த்தனர். இந்த நிலை நீங்கி மண்ணுக்கு நவதானியங்களையும் விளைவிக் கும் சக்தியுண்டு என்பதைக் கண்டுபிடித்த நாள் தான் பொங்கல் திருநாள். விளைந்த தானியங்களைக் கண்ணாரக் கண்டு, அவற்றைச் சமைத்து வயிறார உண்டு பூரிப்படைந்து புது வாழ்வு பெற்ற நாள் தான் பொங்கல் திருநாள். ஆம்; கேவலம் உணவுக்காக காடுகளில் அலைந்தும், மிருகங்க ளோடு போரிட்டும் மனித சமுதாயம் அல்லலுற்ற நிலை யிலிருந்த பொழுது மண்மகள் அபயம் அளித்தநாள் பொங்கல் திருநாள். இன்னும் சொன்னால் நாகரீக முறைப் படி கருணை என்னும் பண்புக்கு மாறுபாடற்ற வகையில் மனித சமுதாயத்தின் உணவுப் பிரச்னை தீர்ந்த நாள், பொங்கல் திருநாள். பொங்கல் திருநாளைத் தமிழர் மட்டுமே சிறப்பாகக் கொண்டாடக் காரணம் என்ன? ஒருக்கால், நவதானியங்களை விளைவிக்கும் நாகரீகத் தொழிலை முதன் முதல் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களாயிருக்கலாம். அது காரணமாகவே, பொங்கல் நன்னாள், தமிழர் பண்பாட்டோடு கலந்தியங்கும் திருநாளாகி விட்டது போலும்! இதன் உண்மையை ஆராய்ச்சியாளர்கள் அறிவிப்பார்களாக!

பொங்கல் திருநாள் மற்றொரு சிறப்பையும் உணர்த்தி வைக்கிறது. 'ஆதியில், மனிதர்கள், தத்தம் வாழ்வுக்காகத்

தொழிலில் ஈடுபட்டிருந்தனர். என்றாலும் ஒரே இடத்தில், மக்கள் பலர்கூடித் தொழில் செய்யும் பண்பு உழவர் தொழிலிலிருந்துதான் துவங்கியிருக்க வேண்டும். அது மட்டுமல்ல; வள்ளுவர் கூறிய பகுத்துண்டு, பல்லுயிர் ஓம்பும் பண்பு துவங்கிய நாள் பொங்கல் திருநாள். ஆதி உழவன், தன் மனைவி மக்களோடு சேர்ந்து பாடுபட்டுப் பயிர் செய்தான். ஆயினும், அதன் பலனைத் தான்பெற்ற தானியம் தனக்கும் தன் குடும்பத்துக்கு மட்டுமே உரிய தென்று வைத்துக்கொண்டானில்லை. பாடுபட்டுப் பெற்ற தானியத்தை ஐந்துபங்குகளாக்கி; அரசனுக்கு ஒரு பங்கு, தெய்வத்திற்கு ஒருபங்கு; விருந்தினருக்கு ஒருபங்கு; உறவினருக்கு ஒருபங்கு என நான்கு பங்கை பொது நலனுக்கு ஈந்து, எஞ்சிய ஒரு பங்கை தனக்கும் தன் குடும்பத்துக்கு மாக எடுத்துக்கொண்ட நாள் பொங்கல் திருநாள். ஆம்; உலகத்தோடு ஒத்துவாழும் பண்பைத் துவக்கி வைத்த பெருமை உழவர் பெருமக்களுக்கே உரித்தாகும். அந்த உண்மையை இன்றளவும் உணர்த்தி வருகிறது பொங்கல் திருநாள்.

'ஒரே உலக' எண்ணம் வேண்டுமென்று அறிஞர் பலர் அடிக்கடி பேசுகின்றனர். உழவர் திருநாள் அந்த உண்மையைத்தானே உணர்த்துகின்றது! ஒரே உலக எண்ணத்தை, தொன்று தொட்டு இன்றுவரை தோன்றி வந்த புலவர் பெருமக்கள் அனைவரும் வற்புறுத்தி வந்திருக்கின்றனர்.

"உலகு ஆதிபகவன் முதலாக உடைத்து" என்பது திருக்குறளில் முதல் குறள்.

"உலகம் உவப்ப" என்பது திருமுருகாற்றுப் படையில் முதலில் வரும் திருவாக்கு.

"உலகம் யாவையும்" என்பது கம்பராமாயணத்தின் கருச் சொல்.

"உலகெலாம்" என்பது பெரிய புராணத்தின் துவக்கமொழி.

ஆம், உலகம் என்பது தமிழ் இலக்கணம் கூறும் மங்கலச் சொல் மட்டுமன்று; அஃது மக்களை மக்க

ளாக வாழவைக்கும் மாண்புடைச் சொல்லுமாகும். இந்த ஒரே உலக உணர்ச்சியை உழவுத் தொழில்தான் முதல் முதல் உலகுக்கு உணர்த்தி வைத்தது எனலாம், ஆகவே, உழவர் திருநாள் சாதி சமய, இன உணர்ச்சிகளுக்கு அப் பாற்பட்ட சர்வ தேசீயத் திருநாளாகும். இப்படிப்பட்ட ஒரு பெருமைமிக்க விழாவைத் துவக்கி வைத்த தமிழகம் நீடூழி வாழ்வதாக! பொங்கல் திருநாளன்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டியவை பல உள:

புலவர்கள், தமிழ் இலக்கியங்கள் கூறும் செந்நெறி களை, தமிழகத்தில் பட்டி தொட்டிகள்தோறும் பரப்பு வதற்கு திட்டம் வகுக்க வேண்டும்.

தமிழ் அறிவோடு ஆங்கிலப் புலமையும் பெற்ற அறிஞர்கள், தமிழ் இலக்கியங்கள் கூறும் புதுமைகளை-புரட்சிக் கருத்துகளை, வேங்கடத்துக்கு வெளியே உல கம் முழுவதும் கொண்டு செல்ல உறுதி கொள்ள வேண்டும்.

தமிழ் இனத்தின் நல்லெண்ணத் தூதுக் குழு ஒன்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி, தமிழின் பெரு மையை, தமிழ் இனத்தின் பேராற்றலை அங்கெல்லாம் பரப்புவதற்கு பொருள் படைத்த தமிழர்கள் உதவி புரிய முன்வர வேண்டும்.

வரலாற்று அறிஞர்கள், தமிழகத்தின் வர லாற்றை-அது வாழ்வாங்கு வாழ்ந்த காலத்தை உலகில் உயர்ந்தோங்கி வாழும் பெரு நாடுகளின் வரலாற்றோடு ஒப்பிட்டுக் காட்டும் நூல்களை தமிழிலும் ஆங்கிலத்தி லும் எழுத வேண்டும்.

கம்பரோடு ஷேக்ஸ்பியரை, பாரதியோடு ஷெல் லியை, வள்ளுவரோடு சாக்ரட்டீசை ஒப்பிட்டுக் காட்டி தமிழ்ப்புலவர் குலத்தின் சிறப்பை விரிக்கும் ஆராய்ச்சி நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளி யிட வேண்டும்.

உலக சமுதாயத்தின் முன்பு தமிழ் இனத்தார் தலை நிமிர்ந்து வாழ இவை மிகமிக அவசியமாகும். தமிழரசு அமையுங்கால், நமது எண்ணம் ஈடேறுவது திண்ணம்.

என்றாலும், அதுவரை காத்திருக்காமல் இந்த எண்ணங்களைச் செயலாற்ற நன்கு நிறுவப்பட்ட ஒரு தமிழ் இயக்கம் தோன்ற வேண்டும்.

தமிழர் திருநாளையொட்டி வெளிவரும் இம்மலரை, தமிழ் இனத்தின் வீரத்தியாகிகளான வீரபாண்டியக் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் ஆகியவர்களின் ஆன்மாவுக்கும் காணிக்கையாக்குகிறோம்.

'முரசு' வாசகர்களுக்கு

"தமிழ் முரசு", பத்திரிகை வடிவில் வெளிவந்து நான்கு ஆண்டுகள் முடிவடைகின்றன. 1951-ஜனவரி முதல் தேதியன்று ஐந்தாம் ஆண்டு ஆரம்பமாகிவிட்டது. இந்நான்காண்டுகளில் அச்சகம் இன்மை, பொருள் இல்லாக் குறை ஆகிய காரணங்களால், "முரசு" இருமுறை நிறுத்தப்பட்டு, பின்னர் வெளிவந்திருக்கிறது. என்றாலும், எந்தக் கொள்கைக்காக 'முரசு' துவக்கப் பட்டதோ அந்தக் கொள்கைக்காக 'முரசு' முழு மூச்சோடு பணிபுரிந்து வருகிறது - இனியும் பணிபுரிந்து வரும்.

'முரசு' தமிழரசுப் படைக்கு முன்னின்று முழங்கும் ஒரு கருவி. ஆகவே, கழகத்தின் கருத்து எதுவோ, அவ்வழி நின்று பணியாற்றுவதையே, தனது கடமையாகக் கொண்டிருக்கிறது.

'முரசு' தோன்று முன்பு தமிழகத்தின் வடக்கு - தெற்கு எல்லைகளில் வாழும் தமிழர்களிடையே இன உணர்ச்சி குன்றியிருந்தது. இன்று, எல்லைப் பகுதிகளில் உணர்ச்சி வளர்ந்து வருவது மட்டுமல்ல; தாய்த் தமிழகத்தோடு இணைந்தே தீர வேண்டுமென்ற எழுச்சியும், கிளர்ச்சியும் வலுத்து வருகிறது.

'மதராஸ் மனதே' என்று, ஆந்திரர் கூக்குரலிட்ட பொழுது, அவர்களது மண்டையிலடிப்பது போன்று கணத்துக்குக் கணம் பதில் கொடுத்து வந்த பத்திரிகை 'முரசு' ஒன்றேயாகும். "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று 'முரசு' செய்த முழக்கம் நம்மை எதிர்ப்பவர்களின் இதயங்களிலும் கூட பசுமரத்தாணி போல் பதிந்து கிடப்பதாகும்.

'தமிழர்' என்போர் வெறும் ஜனக்கும்பல் அல்ல; மொழியாலும் பண்பாலும், பழக்க வழக்கங்களாலும் மூன்றுகோடி இதயங்களும் ஒன்றுபட்ட ஒரு தேசிய இனமாகும் என்பதை அறிவுக்குப் பொருந்தும் வகையில் நிரூபித்திருக்கிறது 'முரசு'. அதுமட்டுமல்ல; அரசுரிமை பெற்றுவிட்ட தேசியவாதிகள் 'ஒன்றுபட்ட இந்தியா' என்ற கோஷத்திலே, தமிழ் இனத்

தின் உரிமைகளைப் பற்றி பேசு கின்றார்களில்லை. ஆங்கிலேயன் ஆதிக்கத்திற்கு அடிவருடிய கூட்டத்தார் வடவரின் தொடர்பிலிருந்து தென்னாட்டைத் துண்டாட கனவு காண்கின்றனர். இங்கிலையில், சர்வதேச ரீதியில் - இந்திய தேசீய ஒற்றுமைக்குக் கேடற்ற வகையில் "தமிழருக்கும் சுயநிர்ணயம்" என்று கோஷமிட்டது 'தமிழ் முரசு' ஒன்றேயாகும். மற்றும், காவியத் துறையிலும் ஒரு புரட்சிகரமான கண்ணோட்டத்துடன் பணிபுரிந்திருக்கிறது 'முரசு'. வள்ளுவர் குறளையும், இளங்கோவின் சிலம்பையும் அரசியல் கண்ணோட்டத்தோடு மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியைத் துவக்கி வைத்தது 'முரசே'யாகும். இவ்வளவுக்கும் தமிழ் மக்களின் ஆதரவும், தமிழரசுக் கழகத் தோழர்களின் உதவியுமே காரணங்களாகும்.

ஐந்தாவது ஆண்டு துவங்கும் இந்த நேரத்தில் நமது வளர்ச்சிக்குத் துணைபுரிந்த வாசகர்கள், எழுத்தாளர்கள் எல்லோருக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்தில் தமிழரசு தோன்ற வேண்டும். அது தனது உரிமையைப் பறிகொடுக்காமல் பிற மாகாணங்களோடு உறவுகொண்டு வாழ வேண்டும்; பிற மாகாணங்களின் சுரண்டல்களிலிருந்து தமிழகம் விடுபடுவது போலவே, உள்நாட்டுச் சுரண்டல்காரர்களிடமிருந்து தமிழ்ப் பாட்டாளி மக்கள் விடுதலை பெறவேண்டும்; தமிழகத்தின் வடக்கு - தெற்கு எல்லைகள் மீட்கப்பட வேண்டும்; சென்னை நகரம் பறி போகாதவாறு பாதுகாக்கப்பட வேண்டும்; பழைய இலக்கியங்களை, மக்களின் வருங்கால வாழ்கைக்கு வழி காட்டும் வகையில் விளக்க வேண்டும்; புதுப்புது இலக்கியங்கள் செய்து தமிழ் மொழியை வளம் படுத்த வேண்டும்.

இந்தத் திட்டங்களைச் செயலாற்ற 'முரசு' இதுவரை பணி புரிந்து வந்தது போலவே, இனியும் பணிபுரிந்து வரும்.

'முரசு'க்கு தமிழ் மக்கள் முழு மனதுடன் ஆதரவளிப்பர் என்று நம்புகிறோம்.

தமிழரசும் சமஷ்டியும்

—'எழிலரசு'

[மொழிவழி மாகாணங்களைப் பிரித்து, அம்மாகாணங்களுக்கு சுயநிர்ணயம் வழங்கப்பட்டால், மாகாணங்கள் மத்திய அரசுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய அதிகாரங்கள் எவை? மத்திய அரசு எப்படி இயங்கும் என்பனவற்றை கேள்வி—பதில் தோரணையில் விளக்கும் கட்டுரை இது.

—ஆசிரியர்.]

கேள்வி: தமிழரசுக் கழகம் கோருவது பாகிஸ்தானைப் போல் பிரிந்து நிற்கும் தனியரசுக் தமிழ்நாடா? அல்லது, இந்திய யூனியனுக்குட்பட்ட தமிழ் மாகாணமா?

பதில்: கழகம் கோரும் தமிழரசு, பாகிஸ்தானைப் போன்றதுமல்ல. இன்றுள்ளதைப் போன்ற மத்திய ஆட்சிக்குட்பட்ட நிர்வாக மாகாணமுமல்ல. சுயநிர்ணய உரிமைப்படி அமைக்கப்படும் சுயாட்சியுள்ள தமிழரசேயாகும்.

சுயநிர்ணய உரிமை

கழகம் கோரும் தமிழரசுக்கும், பிரிட்டிஷாரின் தயவால் அமைக்கப்பட்ட பாகிஸ்தானுக்கும் எந்த விதத்திலும் ஒற்றுமை கிடையாது. பாகிஸ்தான், மத அடிப்படையில் அமைக்கப்பட்ட நாடு. பிரிக்கப்படவிருக்கும் தமிழகம், மொழி அடிப்படையில் அமைய வேண்டிய நாடு. பாக்கிஸ்தான், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தியக் கூட்டரசில் இணைய விரும்பாத நாடு. கழகம் கோரும் சுதந்தரத் தமிழகம், மொழிவாரி நாடுகளைக் கொண்ட இந்தியக் கூட்டரசில் இணைய விரும்பும் நாடு.

கேள்வி: ஒரே நிலப்பரப்பைக் கொண்ட இந்தியாவில் தமிழகத்திற்கு மட்டும் சுயநிர்ணயம் அளிப்பது எப்படி சாத்தியமாகும்?

பதில்: தமிழகம் மட்டுமல்லாமல், இந்தியாவின் இதர பகுதிகளையும் மொழிவாரி நாடுகளாகத் திருத்தியமைத்து அவற்றிற்கும் சுயநிர்ணயம் வழங்க வேண்டுமென்பதே தமிழரசுக் கழகத்தின் பொதுக் கொள்கை. இந்தியாவின் அமைப்பும் அதற்கு ஏற்றவகையில் அமைந்திருக்கிறது. கேரளம், கன்னடம், தமிழகம், ஆந்திரம், மராட்டா, கூர்ஜரம், ஒரிசா, இந்துஸ்தான் (ஐக்கிய மாகாணம்), பீகார், வங்கம், அசாம், பாஞ்சாலம், காஷ்மீரம் இப்படி மொழிவழி பல நாடுகளாக இந்தியா அமைந்திருக்கிறது.

மாகாண - மத்திய அதிகாரங்கள்

கேள்வி: கழகம் கோருகிறபடி மொழிவாரி நாடுகள் அமைக்கப்பட்டால் அந்த அரசுகள் மத்திய அரசுக்கு விட்டுக் கொடுக்கும் அதிகாரம் எதுவாயிருக்கும்?

பதில்: பாதுகாப்பு, போக்குவரத்து, வெளிநாட்டு உறவு, சுங்கம் ஆகிய நான்கு அதிகாரங்களும் மத்திய சமஷ்டியிடம் விட்டு வைக்கப் படலாம்.

கேள்வி: இத்தகைய குறைந்த அதிகாரங்களைக் கொண்ட ஒரு மத்திய அரசு, பலமற்றதாகவன்றோ இருக்கும்?

பதில்: தாங்கள் கூறுவது தவறு. மத்திய அரசாங்கத்தின் பலம், அதில் சேர்ந்துள்ள நாடுகளின் மனத்திருப்தியைப் பொறுத்ததேயன்றி, அதிகாரப் பட்டியலின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல. வெளியார் படையெடுப்பிலிருந்து இந்தியாவைப் பாதுகாப்பதற்கான அதிகாரங்களைத் தவிர இதர அதிகாரங்கள், மத்திய அரசுக்குப் பலமளிப்பதை விட பலவீனத்தையே உண்டாக்கும் மேலும் இதனுல், மாகாண அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் விரோதமே வளரும்.

தொழில் வளர்ச்சி

கேள்வி: அப்படியானுல், கைத்தொழில், வர்த்தகம், நிதி ஆகிய முக்கிய அதிகாரங்கள் சமஷ்டியின் அங்கங்களான மாகாணங்களுக்கே உரியன அல்லவா?

பதில்: ஆம், ஐயத்திற்கிடமில்லாமல்.

கேள்வி: நீங்கள் சொல்லுகிறபடி அரசியல் அமைந்தால் இந்தியாவின் கைத்தொழில் வளர்ச்சி தடைப்படுமென்றே கருத வேண்டியிருக்கிறது. சான்ருக, இயந்திரத் தொழிலுக்கு இரும்புச் சத்து நிலக்கரி ஆகிய பொருட்கள் தேவை. ஆனுல், இந்த இரண்டு பொருட்களும் மாகாணந்தோறும் இருக்கவில்லை. ஐக்கிய மாகாணத்தில் இரும்புச் சத்தும், பீகார் மாகாணத்தில் நிலக்கரியும் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். நிலக்கரியை மட்டும் வைத்துக் கொண்டுள்ள பீகார் மாகாணமோ, இரும்புச் சத்தை மட்டும் வைத்துக் கொண்டுள்ள ஐக்கிய மாகாணமோ இயந்திரத் தொழிலில் எப்படி முன்னேற முடியும்?

பதில்: இது ஒரு சிக்கல்தான். ஆனுல், இதனை மொழிவழி தேசிய இனங்களின் சுதந்தர உரிமையைப் பறிக்காமலே சீர் செய்ய வேண்டும். அதற்கும் வழி இருக்கிறது. மாகாண அரசாங்கங்களின் சம்மதத்தின் மீது மத்திய அரசாங்கம் ஒரு 'தேசிய திட்டக்கமிட்டி'' அமைத்து இந்தியா முழுவதுக்குமான பொதுத் திட்டத்தை உருவாக்கலாம். அவற்றை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு மாகாண அரசாங்கங்களுக்கே இருக்க வேண்டும்.

கேள்வி: நிதி உரிமை மாகாணங்களுக்கே என்ருல், மத்திய ஆட்சியிடம் மாகாணங்கள் ஒப்படைக்கும் இலாகாக்களின் நிர்வாகச் செலவுக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கும்?

பதில்: ஆம், இது நியாயமான கேள்வியே. மத்திய ஆட்சி தனது இலாகாக்களின் நிர்வாகச் செலவுக்காக குறிப்பிட்ட சில வரிகளின் மூலம் பணம் திரட்டிக் கொள்ள அனுமதிக்கலாம்; அல்லது மாகாணங்களிடம் அதனதன் பொருளாதார பலத்திற் கேற்றவாறு பணம் (கோட்டா) வசூலிக்கலாம். பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதினர் கொண்டுவந்த திட்டம் இந்த வகையில் தான் இருந்தது.

யுத்தகால நிலைமை

கேள்வி: தாங்கள் கூறுவது போன்ற "பலமற்ற மத்திய ஆட்சி"யால் பிறநாட்டின் படையெடுப்பிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்க முடியுமா?

பதில்: நான் கூறுவதெல்லாம் சாதாரண கால நிர்வாகத்தைப் பற்றியதே. யுத்த கால நிலைமை முற்றிலும் வேறுவிதமாயிருக்கும். இந்தியா முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ அந்நியரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானல், அந்த நிலையில் இந்திய சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரம் சாதாரண காலத்தை விட அதிகப்பட்டதாயிருக்கும்; இருக்கவும் வேண்டும்.

கேள்வி: அதற்கு மாகாணங்கள் சம்மதிக்க வேண்டுமே.

பதில்: அப்போது சமஷ்டியில் கலந்துள்ள நாடுகள் அவசியமென்று கருதும் அதிகாரங்களை தாமாகவே சமஷ்டி அரசாங்கத்திடம் ஒப்புவிக்கத் தயங்காது. சோவியத் ருஷியாவில் குடியரசு நாடுகள் பிரியும் உரிமையுடன் கூடிய சுதந்தர நாடுகள்தான். என்றாலும், ருஷியாவின் மீது வெளித்தாக்குதல் ஏற்பட்டபோதெல்லாம், மாகாண அரசுகள் தம்மிடமுள்ள அதிகாரங்களில் பெருவாரியானவற்றைத் தாமாகவே மத்திய அரசிடம் ஒப்படைத்தன. போர் முடிந்ததும், மத்திய அரசாங்கம் மாகாணங்களுக்குரிய அதிகாரங்களை மீண்டும் அந்தந்த மாகாணங்களிடமே திரும்ப ஒப்படைத்துவிட்டது. ஆகவே, இங்கும் அதுபோல நடப்பதற்கு இடையூறு எதுவுமில்லை.

கேள்வி: தாங்கள் சொல்லுகிறபடி பார்த்தால், இந்திய சமஷ்டியானது யுத்த காலத்தில் பலம் பொருந்தியதாகவும் சாதாரணகாலத்தில் பலமற்றதாகவும் இருக்கு மென்றே எண்ணுகிறேன். இது சரிதானே?

பதில்: பொதுவாக தாங்கள் கூறுவது சரிதான். ஆனல் சாதாரண காலத்தில், சமஷ்டி அரசாங்கம் "பலமற்றதாக இருக்கும்" என்கிறீர்களல்லவா? அதில் 'பலமற்றது' என்ற சொல் தப்பெண்ணத்தைத் தருவதாகும்; உண்மையும் அதுவல்ல. சாதாரண காலத்தில் சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரங்கள் ஒரு எல்லைக்குட்பட்டிருக்கு மென்றுதான் கூற வேண்டும்.

மனமிருந்தால் மார்க்கமுண்டு

கேள்வி: மொழிவழி மாகாணங்கள், இப்போதுள்ள குடி

சட்டத்தைக் கொண்டே பிரித்துவிடலாம். ஆனால், அவற்றின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமானால் இப்போதுள்ள சட்டத்தை ரத்து செய்யவேண்டுமல்லவா?

பதில்: இல்லை. இப்போதுள்ள சட்டத்தின்படியே மொழிவழி நாடுகள் தத்தம் அரசியலைத் தாமே வகுத்துக் கொள்ள உரிமை அளிக்கலாம். சான்றாக காஷ்மீர், இந்தியக் குடியரசுச் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு ஸ்டேட். டில்லி பாராளும் மன்றத்திலும் அதன் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அதற்கு அண்மையில் சுய நிர்ணயம் வழங்கப்படவில்லையா?

கேள்வி: எந்த வகையில் சுய நிர்ணயம் அளிக்கப்பட்டது?

பதில்: தேர்தல் மூலம் அரசியல் நிர்ணய மன்றத்தை அமைத்து, காஷ்மீர் இந்தியாவுடன் சேருவதா, இல்லையா? என்ற பிரச்சினை பற்றி அந்த மன்றம் தீர்ப்பளிக்க உரிமை தரப்பட்டிருக்கிறது. காஷ்மீரின் அரசியலையும் அந்த மன்றமே தயாரிக்கும் என்கிறார் ஷேக் அப்துல்லா. ஆகவே, டில்லிக்கு மனமிருந்தால் மார்க்கமில்லாமலில்லை.

கேள்வி: மொழிவழி நாடுகளுக்கு சுயநிர்ணயம் வழங்குவது அவசியமென்றே கொண்டாலும், இந்தியா இன்றுள்ள நிலையில் அது ஒரு அவசரப் பிரச்னையா?

பதில்: நிச்சயமாக அவசரப் பிரச்னைதான். இல்லையேல், டில்லியிலிருந்து அடியோடு பிரிந்து கொள்ள வேண்டுமென்ற அபாயகரமான இயக்கங்கள் வலுவடையும். அதை அடக்கும் ஆயுதசக்தி டில்லிக்கு இருக்கலாம். ஆனால் சுய ஆட்சியுள்ள மொழிவழி மாகாணங்களை அமைப்பதன் மூலம்தான் "ஸ்தான்" வாதிகளை வெற்றிகரமாக முறியடிக்க முடியும்.

கேள்வி: மொழிவழி நாடுகளுக்கு சுயநிர்ணயம் வழங்கவேண்டுமென்பதை கொள்கையளவிலேனும் காங்கிரஸ்மேலிடத்தார் ஏற்றுக் கொள்வார்களா?

பதில்: இந்தக் கேள்விக்கே இடமில்லை. ஏனெனில், கிரிப்ஸ் தூது வந்தபோது காங்கிரஸ் காரியக் கமிட்டி மாகாணங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானப்படிதான் காஷ்மீருக்கு சுயநிர்ணயம் வழங்கியிருக்கின்றனர். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தனித் தனி அரசியல் நிர்ணய மன்றம் அமைத்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பத்தில் இந்திய சமஸ்தானங்களுக்குக் கூட அனுமதி தரப்பட்டதே!

கேள்வி: மாகாணங்களின் சுயநிர்ணயப் பிரச்னை புதிய அரசியலைத் தயாரிக்கு முன்பே கிளப்பியிருக்க வேண்டிய ஒரு பிரச்னை. இப்போது அது காலங்கடந்த பிரச்னையாகவே தோன்றுகிறது.

பதில்: இல்லை. புதிய அரசியல் அமுல் நடத்தப்படும் இப்

போதுதான் அதிலுள்ள தவறு கள் வெளிப்படுகின்றன. இப்பொழுதே மத்திய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்களைப் பற்றி மாகாணங்கள் உள்ளுக்குள் குமுறிக் கொண்டுதான் இருக்கின்றன. போகப் போக மாகாணங்கள் மத்திய அரசின் மீது "ஊடற் போர்" தொடுக்கலாம். அப்போது மாகாணங்களின் சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்படுவது திண்ணம். ஆகவே, 'சந்தர்ப்பம்' தவறிவிடவில்லை.

வீரக்கண்ணகி

○

தமிழரசுக் கழகத் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

எழுதியது

○

அரசியல் கண்ணோட்டத்துடன்
ஆராய்ந்து எழுதப்பட்ட
அரிய நூல்

○

அச்சாகிக் கொண்டிருக்கிறது

விரைவில் வெளிவரும்

வானத்து நிலா

கா.மு.ஷெரீப்

முத்து

★

அக்காள் :

அலம்பி வைத்த தட்டில் தம்பி
கையை வைத்தானோ?—நீ
அழுக்குப் போக மீண்டும் அதை
தேய்க்க வேண்டுமா?
பளபளப்புக் குன்றி ஏனோ
கறைபடிந்துமே—வானில்
பழைய தட்டுப் போல நிலா
தோன்றுது அம்மா?

தங்கை :

காகிதத்தால் கப்பல் செய்து
கடலில் விட்டானோ?—அண்ணன்
காந்திப் பொம்மை ஒன்றை அதில்
காவல் வைத்தானோ?
ஆகாயத்தில் மிதந்து செல்லும்
அழகைப் பாரம்மா—நிலா
யாரு செய்த கப்பல் அதில்
இருப்பதாரம்மா?

தம்பி :

அடுப்படியில் உன்னைப் போல
வேலை செஞ்சுதா?—நிலா

அலம்பிடாத கையைக் கொண்டு
முகம் துடைச்சுதா?

வடுப்படிந்த முகத்திேனாடு
எதிரே வந்திட்டால்—அப்பா?
வைய மாட்டார்? நிலவுக் கேம்மா
இது தெரியல்லே?

அண்ணன் :

தோசை சுடும்போ தடுப்பு
அதிகம் எரிந்ததா?—அந்தச்
சூட்டினாலே தோசை சிறிது
கருகிப் போச்சுதா?
ஆசையோடு நீயதனை
தம்பிக் கீந்தாயா?—அவன்
ஆத்திரமாய்த் தூக்கி வானில்
எறிந்து விட்டானா?

அம்மா :

தோசையல்ல, தட்டுமல்ல,
கப்பலுமல்ல —என்றன்
சொக்கத் தங்கக் கட்டிகளா!
சொல்வேன் கேளுங்க
கூசும் இருட்டைப் போக்குதற்கு
வான வீட்டிலே—கடவுள்
கொளுத்தி வைத்த விளக்காம்—நிலவு
தெரிந்து கொள்ளுங்கள்!

——o——

சுற்றி நில்லாதே போ!

"வானம்பாடி"

சுற்றி நில்லாதே போ—பகையே
துள்ளி வருகுது வேல்!

(1) நெற்றி வியர்வையிலே—எங்கள்
நேர்மைத் திறத்தினிலே—தமிழ்ப்
பெற்றி வளர்த்திடுவோம்—எனப்
பேசுந்தமிழ்த் திருநாள்!—அதில்
முற்றி வளர்ந்திடுபோர்—உயிர்
மூச்சு 'தமிழரசே'—என்று
வெற்றிக்குரல் கொடுத்தே—தமிழன்
வேங்கையென எழுந்தான்!—இனியும் (சுற்றி)

(2) இன்பத் தமிழ்க் கொடியே—நாட்டில்
எங்கும் பறந்திடவே—வீண்
துன்பங் கொடுப்பவரே—தமிழ்த்
துரோகம் புரிபவரே—எங்கள்
தென்பு 'தமிழரசே'—அதை
தேடி மகிழ்ந்திடுவோம்!—என
அன்புத் தமிழ்மொழியால்—தமிழன்
ஆணையிட் டேயெழுந்தான்!—இனியும் (சுற்றி)

(3) பற்று நிறைந்தது போல்—தமிழ்ப்
பாசம் மிகுந்தது போல்—பண்பை
விற்றுப் பிழைப்பவரே—'திராவிட'
வியாபாரச் சந்தையிலே—நீங்கள்
கற்று வளர்வதெல்லாம்—நாட்டைக்
காட்டிக் கொடுப்பதிலே—என
முற்றும் உணர்ந்தவனாய்—தமிழன்
முழக்கம் புரியுகின்றான்!—இனியும் (சுற்றி)

(4) சித்த மிழந்தவராய்—இங்கு
திராவிடம் பேசிடுவோர்—அன்று
சத்தியப் போர்க்கெதிராய்—ஆங்கில
சாதியின் தாள் பிடித்தோர்!—தமிழ்
புத்திக்கு போதை தரும்—வீண்
புரட்டரென்றே யுரைத்து—இன்று
எத்திசை நோக்கிடினும்—தமிழ்
இயக்கம் வளருது காண்!—இனியும் (சுற்றி)

இந்தியக் குடியரசு வாழ்க!

"தேசியவாதி"

★

குடியரசு இந்தியா, தனது இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது.

பிரிட்டிஷ் பேரரசின் பிடியிலிருந்து மட்டுமல்ல; இந்தியாவெங்கும் சிதறிக்கிடந்த அறுநூறு சிற்றரசர்களின் பேயாட்டங்களிலிருந்தும் இந்திய மக்கள் விடுபட்ட நாள் ஜனவரி 26 ஆகும்.

பிரிட்டிஷ் கொடுங்கோல் வகுத்த சட்டங்கள் அனைத்தையும் குழி தோண்டிப் புதைத்து மக்களுக்காக மக்கள் மன்றத்தாரால் தயாரிக்கப்பட்ட அரசியலை அமுல் நடத்தத் துவங்கிய நாள் குடியரசுத் திருநாள்.

அரசர்களைப் பணியவைத்த நாள்

இந்தியாவைப் போன்றே குடியரசு பெற்ற நாடுகள் உலகில் பலவுண்டு. அமெரிக்கா, ருஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகியவை உலகக் குடியரசு நாடுகளில் மிகப் பெரியவையாகும். ஆனால், அங்கெல்லாம் முடியரசர்களை வெட்டி வீழ்த்தி - அவர்களுக்கு ஆதரவு காட்டிய பிற்போக்காளர்களைக் கொன்று, அவர்களது உடல்களைக் 'கோபுரம்' எனக் குவித்து அந்தப் பிணக் கோபுரத்தின் உச்சியில் நின்று தான், குடியரசுச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது.

ஆனால், மக்களைக் கொன்று மண்ணாள விரும்பாத அசோகரைப் பெற்றெடுத்த இந்தியா - தன்னுயிர் போல தனக்கழிவெண்ணும் மன்னுயிரையும் காப்பதையே மதமாகக் கொண்ட இந்தியா - கொலைக்களத்தில் நின்று குடியரசுப் பிரகடனம் செய்யவில்லை. பிரிட்டிஷ் பேரரசரும், இந்தியச் சிற்றரசர்களும் பணிந்து கொடுக்கும் அளவுக்கு மக்கள் சக்தியை வளர்த்து, உயிர்ப் பலியின்றி அமைதியான சூழ்நிலையில் குடியரசுப் பிரகடனம் செய்த நாள் ஜனவரி 26 தான் - இது. உலக வரலாற்றில் காணாத புதுமை.

தீமைகளை எதிர்க்கும் திருநாள்

குடியரசுக் கொடுமைகளுக்கு முடிவு கட்டியது மட்டுமல்ல; சாதி சமயக் கொடுமைகளுக்கும் முடிவு கட்டிய நாள் ஜனவரி 26. தாழ்த்தப்பட்ட மக்களைப் பார்த்தாலும் பாவம்; தொட்டாலும் தோஷம் என்று எண்ணும் மூட நம்பிக்கைக்கு முடிவுகட்டத் துணைபுரிகிறது குடியரசுச் சட்டம்.

ஹரிஜன மக்களைத் தீண்ட மறுப்பது; அவர்களுக்குத் தொழில் செய்ய மறுப்பது; தொழில்களில் அமர்த்திக் கொள்ள மறுப்பது; ஆலயம், சிற்றுண்டிச் சாலை, நடைபாதை, குளம், கிணறு, கல்விக்

கூடம் ஆகிய பொதுவிடங்களில் அவர்கள் பிரவேசிப்பதைத் தடுப்பது போன்ற தீமைகளை ஒழிக்க வாய்ப்பு தருகிறது குடியரசுச் சட்டம்.

ஒரே தொழிலில் ஈடுபட்டிருப்பினும், ஆண் என்பதற்காக அதிக ஊதியமும், பெண் என்பதற்காக குறைந்த ஊதியமும் தரும் கொடுமை ஒழிவதற்குத் உதவிபுரிகிறது குடியரசுச் சட்டம்.

பள்ளிக்குச் செல்ல வேண்டிய பருவத்திலுள்ள சின்னஞ்சிறு பிள்ளைகளைத் தொழிற்சாலைகளில் அடைத்து குறைந்த ஊதியத்திற்கு வேலை வாங்கும் கொடுமையைத் தடுக்க சந்தர்ப்பம் தருகிறது குடியரசுச் சட்டம்.

பிரிட்டிஷ் இந்தியாவில், எழுத்துரிமை-பேச்சுரிமை மட்டுமல்ல, எண்ணும் உரிமையைக் கூட இழந்திருந்தார்கள் மக்கள். அந்தக் கொடுமைகளுக்கு முடிவுகட்டி, எழுத்துரிமையை-பேச்சுரிமையை வழங்கியிருக்கிறது குடியரசுச் சட்டம்.

இந்தியா சீரழிந்ததற்குக் காரணம், மதவாதிகளின் சொற்படி மன்னர்கள் ஆடிவந்தது தான். ஒரே மன்னன், காலையில் சைவன், நடுப்பகலில் சமணன்-மாலையிலே பௌத்தன் என்ற நிலையில் வேளைக்கொரு விதமாக மதம் மாறிய காலத்தில் தான் இந்தியாவின் மீது வெளியார் படையெடுத்தனர். 'உன் மதம்', 'என் மதம்' என மதப் பேய் பிடித்து, மக்கள் சமுதாயம் பல முகாம்களாகப் பிரிந்து நின்று போரிட்ட காலையில்தான், ஆங்கிலேயர் புகுந்தனர். ஆகவே, மீண்டும், மீண்டும் ஆட்சி பீடத்தில் மதவாதிகள் ஆதிக்கம் பெறுமல் இருப்பதற்காக இந்தியா 'சமயச் சார்பற்ற நாடு' எனப் பிரகடனப் படுத்தி விட்டது குடியரசுச் சட்டம்.

ஆதிக்கங்கள் அகல வேண்டும்

குடியரசு இந்தியாவில் இத்தனை சிறப்புகள் இருப்பினும் அடிப்படையிலேயே சீர்கேடுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

ஒரு மாகாணத்தவர், இன்னொரு மாகாணத்தவரை ஆள்வது; ஒரு மொழிக்குரிய நிலத்தில், இன்னொரு மொழியினர் ஆதிக்கம் செலுத்துவது; ஒரு வர்க்கத்தவரின் உழைப்பை, இன்னொரு வர்க்கத்தார் சுரண்டிப் பிழைப்பது போன்ற பல கொடுமைகள் அடிமை இந்தியாவில் அங்கு இங்கு எனதபடி இந்தியா எங்கும் நிலவி இருந்தன. அந்தக் குறைகள் இன்றைய குடியரசு இந்தியாவிலும் தொடர்ந்து நிலவி வருகின்றன. இவற்றைப் போக்காத வரையில் குடியரசு இந்தியா உலகின் முன் தலைநிமிர்ந்து வாழ இயலாது.

இந்தியக் குடியரசுச் சட்டம் அமுலுக்கு வந்த அன்றே, இந்தியா மொழிவாரி நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். மாகாண மொழிகள் அரசாங்க மொழிகளாக மலர்ந்திருக்க

வேண்டும். ஆனால், மேலிடத்தவரின் அக்கறையின்மையும், ஆந்திரத் தலைவர்களின் சிந்தனையற்ற போக்கும் இந்த நிலை ஏற்படாதவாறு செய்து விட்டன. என்றாலும், மொழிவழி நாடுகள் பிரிக்கப்படுவதற்கு குடியரசுச் சட்டத்தில் விதி வகுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு தமிழகத்தில் தமிழரசு அமைக்க, தமிழ் மக்கள் ஒன்றுபட்டு முயற்சி செய்ய வேண்டும்.

இந்தியக் குடியரசுச் சட்டத்தில் மற்றோர் பெருங்குறையுண்டு. அதாவது, இந்தியக் குடியரசு சுதந்திர அங்கங்களைக் கொண்ட சமஷ்டியன்று. வெறும் நிர்வாகப் பிரதேசங்களைக் கொண்ட ஏக அரசேயாகும். இந்தியாவைப் போன்று பல்வேறு தேசீய இனங்களுடைய உபகண்டம் போன்ற நாடுகள் உலகில் பலவுண்டு. சான்றாக, அமெரிக்காவைக் கூறலாம். அமெரிக்கக் குடியரசு சுதந்திர அங்கங்களைக் கொண்ட சமஷ்டியாகவே ஆரம்பமாயிற்று. மாகாணங்களின் விருப்பத்தின் மீது (விரும்பாத மாகாணங்களை விட்டுவைத்து) அமைக்கப்பட்டதே அமெரிக்க சமஷ்டிக் குடியரசு. அங்கு குடியரசுத் தலைவர் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மாகாண அரசுகளின் தலைவர்களும் அப்படியே.

ஆனால், இந்தியக் குடியரசு இதற்கு நேர்மாறான போக்கில் அமைக்கப்பட்டிருக்கிறது. மாகாணங்கள் சமஷ்டியில் சேர விரும்புகிறதா என்பதைப் பற்றி மாகாண வாக்காளர்களையோ சட்டசபை உறுப்பினர்களையோ கேட்கவில்லை. மற்றும் குடியரசுத் தலைவர் மறைமுகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவார்; மாகாண கவர்னர்கள் மத்திய அரசினால் நியமிக்கப்படுவர் என்கிறது இந்தியக்குடியரசுச் சட்டம். சமஷ்டிக் குடியரசின் கொள்கைக்கே புறம்பான இந்தக் குறைபாடுகள் மேலிடத்தாரால் விரைவில் நீக்கப்பட வேண்டும். இல்லையேல், நீக்கப்படுமாறு மக்களால், அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவர்.

ஒரு சில அதிகாரங்களை மட்டும் மத்திய அரசுக்கு தாமே விட்டுக் கொடுத்து, ஏனைய எல்லா அதிகாரங்களுடனும் கூடிய சுதந்தர அரசுகளாக விளங்குகின்றன, அமெரிக்க மாகாணங்கள். ஆனால், இந்தியாவிலோ, 'பலம் வாய்ந்த மத்திய அரசாங்கம்' அமைக்கப்பட்டு, மாகாணங்கள் பலமற்றதாக செய்யப்பட்டுள்ளன. இதனால், உணவுப் பிரச்னை போன்ற மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளைக் கூட சமாளிக்க சக்தியற்றிருக்கின்றன மாகாணங்கள்.

இந்நிலை அகன்று மாகாண அரசுகள் பலமுடையனவாகச் செய்யப்பட்டாக வேண்டும். குறிப்பாகச் சொன்னால், பாதுகாப்பு, போக்குவரத்து, வெளிநாட்டு அரசியல், சுங்கம் ஆகியவை மத்திய அரசுக்கென்றும், மிச்ச அதிகாரங்கள் உள்பட ஏனைய எல்லா அதிகாரங்களும் மாகாணங்களுக்கென்றும் உறுதியாக வேண்டும்.

ருஷ்யாவும் இந்தியாவைப் போன்றே குடியரசு நாடுதான். அங்கு, ஒவ்வொரு மாகாண மும், 'குடியரசு' என்ற பெய ராலேயே நிலவுகின்றன. அந் தக் குடியரசுகள், மொழிவழி பிரிக்கப்பட்ட தனித்தனி நாடு களாகும். ஒவ்வொரு குடியர சும் தனது அரசியலை தானே தயாரித்துக்கொண் டிருக்கின் றது. ஆம்; மத்திய குடியரசு அரசியல் சட்டம் வேறு. மாகாண குடியரசுகளின் அரசியல் சட்டங்கள் தனித் தனியானவை ஒவ்வொரு மாகாணமும் தத்தம் நிலைக் கேற்ப அரசியலைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. அமெ ரிக்கக் குடியரசிலும் அப்படித் தான்.

இந்தியாவில், மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்படா தது மட்டுமல்ல. இப்போதுள்ள மாகாணங்கள் கூட தத்தம் அர சியலைத் தாமே வகுத்துக் கொள்ள உரிமையளிக்கப்பட வில்லை. மாகாணங்களுக்கும், மத்திய அரசுக்குமாக ஒரே சட் டப் புத்தகம் தான் தயாரிக்கப் பட்டிருக்கிறது. இதனால், மொழி, கலாச்சாரத் துறை களில் வடநாட்டு மக்களிலிருந்து பல்வேறு வகைகளில் வேறுபட் டுள்ள தமிழ்நாட்டு மக்கள் குடியரசுச் சட்டத்தைக் குறை கூற வேண்டிய நிலைமை ஏற் பட்டுள்ளது.

குடியரசுச்சட்டம், இந்தியை இந்தியாவின் பொது மொழி யாக்கி இருக்கிறது. பம் பாய், சென்னை போன்ற மாகாணங்கள் மொழி வழி நாடுகளாகப் பிரிக்கப் படாத தால், அங்கெல்லாம் மக்கள் பேசும் மொழிகள் அரசு மொழிகளாக வர வழி இல்லை. ஆங்கிலம் தான் அரசாளுகிறது. இந்த நிலையில் இந்தியைப் பொது மொழியாக்கினால், அம் மொழியோடு எந்தவகையிலும் தொடர்பற்ற தமிழ் மொழியின் வளர்ச்சி குன்றும் என்று அஞ்சுகின்றனர் தமிழ் மக்கள். தமிழ், மாகாண அரசின் மொழி யாக உடனடியாக ஆகிவிடு மானால், அப்புறம் இந்திக்கு எதிர்ப்பு குறைவது திண்ணம்.

இப்படி குடியரசுச் சட்டத் தில் குறைபாடுகள் பல இருக் கின்றன. இந்தக் குறை பாடுகளை உடனடியாக திருத்தி யாக வேண்டும். திருத்துவதற்கு சட்டமும் வளைந்து கொடுக் கிறது.

தமிழ் நாட்டுத் தேசீய வாதி களே தமிழகத்தின் நலத்துக்கு ஏற்ற வகையில் குடியரசுச் சட் டத்தைத் திருத்துவதற்கான கிளர்ச்சியில் ஈடுபட வேண்டும். ஆனால், கொள்கையை ஒப்புக் கொண்டு, அதை அமுல் நடத்து வதைத் தள்ளிப்போடுவது அபாயகரமானது. இதை தேசீய வாதிகள் மனதில் வைத்து விரை வில் பணிபுரிய வேண்டும்.

எத்தனையோ தியாகிகள் உயிர்ப்பலிதந்து உடைமையைப் பறி கொடுத்து தேடித் தந்தது இன்றைய குடியரசு ஆட்சி. இதை நல்ல முறையில் போற்றி வளர்க்க வேண்டியது நாட்டு மக்களின் கடமை.

வாழ்க இந்தியக் குடியரசு!

தமிழ் வளர்த்த போப் ஐயர்

—நாவலர் ரா. பி. சேதுப் பிள்ளை.

தமிழ் நாட்டிலே தலைவராக உள்ளவரை 'ஐயர்' என்று அழைப்பது மரபு. அதனை நமக்கு எடுத்துக் காட்டியவர் போப் ஐயர். எந்தத் துறையிலும் தலைவராக இருப்பவரைத் தமிழர் 'ஐயர்' எனப் போற்றிப் பெருமை கொண்டனர்.

மேலை நாட்டிலிருந்து வந்து நம் நாட்டிற்கு இறவாத் தொண்டு செய்த வீரமாமுனிவர், கால்டுவெல் இவர்களுடன் போப்பையரும்' வைத்து எண்ணத் தக்கவர். லத்தீன் ஐரோப்பிய நாட்டின் செம்மொழி; உயர்ந்தோரெல்லாம் போற்றிப் புகழும் மொழி. வீரமாமுனிவர் திருக்குறளை அம்மொழியில் பெயர்த்தளித்த பெரியார். போப் ஐயர் திருக்குறளை ஆங்கிலத்தில் ஆக்கி உலகிற்களித்த பெருந்தொண்டர்.

அவர் பேராசை பிடித்தவர். "தமிழ் நாட்டை அறிவுக்களஞ்சியமாக்க வேண்டும்; மேனாட்டுக் கலைச் செல்வத்தை யெல்லாம் தமிழர் கற்க வேண்டும்; அவையெல்லாம் தமிழிலே சிறக்கக் காண வேண்டும்" என்பது அவர் பேராசை. அதற்கெனத் தம் மாணவர்க்கு இரவில் நெடு நேரம் வரை லத்தீன், கிரீக், இவற்றை ஆர்வத்துடன் கற்பித்தவர். ஆராய்ச்சியாளர் எங்குச் சென்றாலும் அங்குள்ளவற்றைப் பற்றி ஆராயாமல் இருக்க மாட்டார். போப்பையர் உதக மண்டலம் போந்தார். அங்குள்ள தோடர் வாழ்க்கையை ஆராய்ந்தார். அவர்கள் பழந் தமிழ்க் குடிகள். அவர்கள் வைத்த பெயர் 'ஒற்றைக்கல் மந்தை' என்பது. அதுவே 'ஒடகமண்டு' ஆகி இன்று ஊட்டி (Ooty) ஆயிற்று. மாந்தர் குடியிருந்து வாழுமிடத்தை அவர்கள், மந்தையென்றனர். அவ்விடத்தே குத்துக் கல்லாக ஒன்று இருந்திருக்கும். அதைக் கொண்டு 'ஒற்றைக் கல் மந்தை' என்ற பெயர் வந்தது போலும்! கிறித்துவ சமயத்தில் சாதியில்லை. அன்று தமிழகத்திலிருந்த கிறித்துவர் தமக்குள் சாதி வேற்றுமை பாராட்டினர். இதனைப் போப்பையர் வன்மையாக எதிர்த்தார். அதனால் இவர் பாதிரி வேலையிலிருந்து விலகி விட நேர்ந்தது.

பின்னர் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் தமிழாசிரியராக அமர்ந்து பணியாற்றினார். அங்கு பயிலும் I. C. S. மாணவர்க்கு தமிழும் தெலுங்கும் கற்பித்தார். அத்துடன் அவர்களுக்கு நல்ல தமிழுணர்ச்சியையும் ஊட்டினார்.

"தமிழ்நாடு உலகில் சிறந்த நாடு; தேனினும் இனிக்கும் திருவாசகத்தைத் தந்த நாடு; சிறந்த திருக்குறளைப் படைத்த நாடு. தமிழர் அறிவில் உயர்ந்தவர்; பண்பிற் சிறந்தவர்; அவர்களை அடக்கியாள நினையாமல், அவர்களுடன் அளவளாவி மகிழுங்கள்," என அவர்கட்கு அறிவுரை கூறுவார்.

அவருடைய அறிவும் உணர்ச்சியும், ஆங்கில அரசியல் அதிகாரிகட்கு இருக்கவில்லை. அதிகாரிகளிடை செருக்கையும், தருக்கையுமே வெள்ளையர் ஆட்சி வளர்த்து வந்தது.

அதனை எதிர்த்தவர் போப்பையர். திருவாசகம் சிறந்த நூலாகும். போப்பையர் அதைப் பற்றிச் சிறந்த கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். "தமிழர் அறிவிலே பூத்தது தனிப் பெருஞ் சைவம்" என்கிறார். ஒரு முறை, இவரினும் வயதினும் அறிவினும் பெரியார் ஒருவர் இவரிடம் வந்தார். அப்போது இவர் படித்துக் கொண்டிருந்தார். என்ன படிக்கின்றீர்கள் என்று கேட்டார் அவர். "இது திருவாசகம்; இந்தியாவில் தமிழ் நாடு என்றதோர் சிறந்த நாடுண்டு அந்நாட்டு மொழியில் இஃதோர் அருமையான நூல்" என்றார் போப்பையர். அப்படியானால், சில பாடங்களைச் சொல்லுங்களென்று கேட்டு இன்புற்றார். இவ்வளவு சிறந்த நூலை நீங்களே 'மொழி பெயர்த்துக் கொடுங்கள்' என்றார்.

இனி, எனக்கு வயதில்லையே யென்று வருந்தினார் போப்பையர். அப்போது தான், வந்த பெரியவர் ஒரு மாபெரும் உண்மையைப் புலப்படுத்தினார். "நீங்கள் நீண்ட காலம் இருக்க வேண்டுமானால், ஒரு நல்ல வேலையை எடுத்துக் கொள்ளுங்கள்; அது முடியும் வரை ஆண்டவன் உங்கட்கு ஆயுளைத் தருவான்" என்பதே அவர் தம் அருள் மொழி. அப்படியே போப்பையர் அதனைத் தமது 80 வது ஆண்டில் மொழி பெயர்த்து முடித்தார். ஆனால், அதற்குள் அதனைக் கூறிய பெரியவர் இறந்து போனார்!

தமிழ்ச் செல்வங்களை (நூல்கள்) பிற நாடுகட்குக் காட்டியவர் போப்பையர்; உலகிற்கறிவித்தவர் போப்பையர்.

ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி யென்ற தமிழ் நாட்டுப் பழமொழிகளே நாலடியார் (நாலு) திருக்குறள் (இரண்டு-அடிகள்) இவற்றின் பெருமைகளை வெளிப்படுத்துவன. இவ்விரண்டு நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகறியச் செய்து உயர்ந்தவர் போப்பையர்.

ஆலையும் வேலையும் மறந்த மாதிரியே தமிழ் நாடு குறளையும் நாலடியாரையும் மறந்து விட்டது; வேற்று நாட்டையும்; மொழியையும் பின்பற்றத் தொடங்கி விட்டது. திருக்குறளை டாக்டர் கிரால் என்பவர் ஜெர்மன் மொழியில் பெயர்த்தார். குறள் இன்று உலகில் பல மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளது.

புறநானூற்றின் பல பாடல்களைப் போப்பையர் ஆங்கிலத்தில் ஆக்கினார். சீமையில் வாழ்ந்தாலும் அவர் சிந்தை தமிழகத்தை மறக்கவில்லை. தான் இறக்கும் போது 'இங்கு ஒரு தமிழ்

காதல் நோய்

சீ.வே

"காதல் என்பது வாழ்க்கை மலரில் தளும்பும் தேன்" என்றார், விக்டர் ஹ்யூகோ என்னும் மேனாட்டு அறிஞர். வாழ்வுக்கும் காதலுக்கும் உள்ள உறவைப் பற்றி இது ஒருவகையான கண்ணோட்டம். இதற்கு முற்றிலும் மாறான கருத்துக்களைச் சொன்னவர்களும், சொல்கின்றவர்களும் இல்லாமல் இல்லை. அவரவர்களின் அனுபவம், ஆற்றல், கற்பனை, லட்சியம் ஆகியவைகளையொட்டி, இக்கருத்துக்கள் அமைவது இயல்பு.

'விலங்குகளிலிருந்து மனிதனைப் பிரித்து வளர்த்தது, பகுத்தறிவு என்கின்றனர் விஞ்ஞானிகள். அந்தப் பகுத்தறிவு, உயிர்களுக்கு இயற்கையா, செயற்கையா என்பது தத்துவ வாதிகள் பல காலமாக ஆராய்ந்து வருகின்ற விஷயம். இந்த இரு கூட்டத்தாரும் மறுக்க முடியாத ஒன்றை, கவிஞர்கள் உணர்த்துகிறார்கள். உயிர்களுடன் ஒன்றி நிற்கும் உணர்வின் தன்மையைப் பலபடக் கண்டு உணர்த்துப் பெருமை, அவர்களுடைய தனியுடைமையாகும். பொருளாதாரத் துறையில் பொதுவுடைமையை வற்புறுத்தும் கவிஞர்களும், இந்த இலக்கணத்துக்கு விலக்கல்ல.

நாடு, நிறம், சாதி, மொழி, பண்பாடு முதலிய எல்லாவற்றையும் கடந்து நிற்பது மனித உணர்வு. அந்த உணர்வு, விலங்குகளுக்கும் பொதுவானதேயாகும். ஆனால், அந்த உணர்வின் வளர்ச்சியிலே தான், உலக சமுதாயத்தின் மலர்ச்சியைக் காண்கின்றோம். விஞ்ஞான முகிழ்ப்புக்கும், தத்துவ ஞான விரிவுக்கும் தாயாக இருந்தது, இன்றும் இருப்பது,

---

மாணவன் இருக்கின்றான்' எனத் தனது கல்லறையில் எழுதுமாறு கேட்டுக் கொண்டார். அவரன்றோ உண்மைத் தமிழர்!

மூச்சுப்போகும் வரையில் தமிழையே நினைத்து, தமிழ் நாட்டிற்கே தொண்டு செய்தவர் போப்பையர். மேலை நாட்டார் தமிழரைத் தாழ்த்தலாகாது என்ற உயர்ந்த கொள்கையுடையவர் அவர்.

மேனாட்டிலிருந்து வந்த ஒருவர்க்கு இவ்வளவு தமிழுணர்ச்சியிருக்குமாயின், இந் நாட்டிலேயே பிறந்து வாழும் நமக்கு எவ்வளவு இருக்கவேண்டும் என்பதையல்லவா அவர் வாழ்வு எடுத்துக் காட்டிக் கொண்டேயிருக்கிறது.

உணர்வு என்பதை மறக்கக் கூடாது.

இந்த உணர்வின் பல்வேறு இயல்புகளை, உலகில் பிறந்து வாழும் ஒவ்வொருவரும் அனுபவித்து வருகின்றனர். அவற்றுள் மிகச் சிறப்பானது காதல் உணர்வு. ஏனெனில், அது உலக வளர்ச்சிக்கே வித்தாக அமைந்துள்ளது.

வாழ்க்கைக் கலையை ஆராயப் புகுந்த பேரறிஞர்கள், காதலுக்கு மிக முக்கிய இடம் அளித்துள்ளனர். உணர்வின் ஆழத்தை, காதலில் எளிதாகக் காணலாம். ஆகவே உலக இலக்கியங்கள் பெரும்பாலும் காதல் உணர்வைச் சித்தரிக்கின்றன. சிறப்பாக, நம் நாட்டுக் கவிஞர்கள் அதை மிக நுட்பமாக எடுத்துரைப்பதில் வல்லவர்கள். சங்க கால அகப்பொருள் நூல்கள் இதற்குச் சரியான சான்றுகளாகும். குறிப்பிட்ட ஒருவரின் பெயரைக் கூறாமல், பொதுவாக மனித உணர்வின் ஆழத்தை மட்டும் நயம்பட உரைப்பதில் நம் அகப்பொருள் நூல்கள் இணையற்று விளங்குகின்றன. அகப்பொருளைப்பற்றி பேசும் போது, தலைவன், தலைவி முதலியோரின் இயற்பெயரைக் குறிப்பிடக்கூடாது என்ற இலக்கணமும் இதற்காகவே வகுக்கப்பட்டது.

'காதலிப்பது என்றால் என்ன?' என்பதை, 'லீப்னிட்ஜ்' என்ற அறிஞர் வெகு சுலபமாக விளக்குகிறார். "மற்றொருவர் சுகத்தில் நம்முடைய சுகத்தை அர்ப்பணிப்பதே காதலிப்பதாகும்" என்பது அவர் கூறும் விளக்கம். உண்மையில் காதல் என்பது ஒருவருக்கொருவர் மனத்தைப் பறிகொடுக்கும் விந்தையேயாகும். ஒருவரின் சொந்த சுகதுக்கங்கள் மற்றவரின் இன்பதுன்பங்களையொட்டி உருவாகத் தொடங்குகின்றன. இதுவே காதல் அரும்பும் படலம். இந்த நிலையைத்தான் "இருவரும் மாறிப்புக்கு இதயம் வைகினர்" என்று கம்பர் போன்ற கவிஞர்கள் வருணிக்கின்றனர்.

காதல் வளர வளர, உணர்வின் தன்மை நுட்பமாகிக் கொண்டே செல்கிறது. காதலன், காதலி ஆகிய இருவர் உள்ளங்களும் நெகிழ்ச்சியடைந்து வருகின்றன. இன்பதுன்ப அனுபவங்கள் புதுக்கண்ணோட்டம் பெறுகின்றன. ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர் ஆகின்றனர். எனவே, ஒருவரை ஒருவர் பிரியும்போது சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாகின்றனர். ஆனால், அந்தத் துன்பமும் இன்பம் கூட்டும் சாதனமாக அமைகின்றது. முதலில் உடலளவாகத் தோன்றி வளரும் காதல், படிப்படியே வளர்ந்து செல்லும் முறையை நம் திருவள்ளுவர் மிக அழகாக விளக்கியிருக்கிறார். ஆரம்பத்தில் இன்பவெறி யூட்டும் தீந்தேனாக (அதாவது, கள்ளாக), காதலைக் கூறுகிறார். ஆனால் தேனோ, உண்டால்தான் உள்ளக்களிப்பை உண்டாக்குகிறது. அதைப் பருகினாலன்றி, தன்னை மறக்கச் செய்யாது. ஆனால், காதலைப்பற்றி எண்ணும் போதும், காதலரை தூரத்தி

விருந்தபடியே காணும்போதும் இன்பம் பெற முடிகின்றது.

"உள்ளக் களித்தலும்,
காண மகிழ்தலும்
கள்ளுக்கு இல் ; காமத்திற்கு
உண்டு"

(உள்ள = நினைந்த அளவி லேயே ; மகிழ்தல் = உணர்வழி யாத இன்பநிலை ; களித்தல் = உணர்வழிந்த மகிழ்ச்சி நிலை)

என்று காதல், தேனினும் சிறந்து விளங்குவதை எடுத்துக் காட்டுகிறார். அந்த வகையில், காதல், பயில்தோறும் நயம் சுரந்து இன்பம் பயக்கும் காவிய மாகிறது.

ஐம்புலன்களால் அனுபவிக்கும் இன்பத்திலிருந்து தொடங்கிய காதல் உணர்வு, சிறந்தோங்கி வளர வளர அறிவு நிலை மேம்படக் காண்கிறோம். காதலைப்பற்றி எண்ணி மகிழ்வதில் இன்பம் பெற இயலும் என்பதை வள்ளுவர் வற்புறுத்துகிறார். காதலர் பிரிந்து வாழும் போது, இந்தக் காதல் உணர்வு பன்மடங்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கக் காண்கிறோம். ஏனெனில், அப்போதுதான் காதலின் வேகமும் தாகமும் கரை புரண்டு ஓடுகின்றன. பிரிவினால் காதலரிடையே ஏற்படும் துன்ப அனுபவம் உச்சநிலை அடைகின்றது. அப்போது காதலை நோய் என்று சொல்லத் தோன்றுகிறது.

ஆனால், அது உடலைப்பற்றிய நோய் அல்ல ; உள்ளத்தைப் பற்றிய விசித்திர நோய். அதைத் தீர்க்கும் மருந்தை நாம் தேடியலைய வேண்டியதில்லை. நோய்க்குக் காரணமாக எது இருந்ததோ, அதுவே இந்த நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கின்றது. ஆகவே தான் இது சாதாரணமான மற்ற நோய்களிலிருந்தும் வேறான அற்புத நோய் என்கிறார் வள்ளுவர்.

"பிணிக்கு மருந்து பிறமன் ;
அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து"

என்பது அவர் வாக்கு.

இந்தத் தன்மை, ஐம்புலன்களால் காதல் இன்பத்தை நுகரும் போது மட்டுமன்றி, அதற்குமேல், பிரிவின்போது அறிவால் காதல் உணர்வை சுவைத்து மகிழும் போதும் பொருந்தும்.

விலங்கினத்திலிருந்து பிறந்த காதல் உணர்வு, மனித அறிவோடு கலந்து வளர்ச்சி பெற்று நுட்பமடைந்துள்ளது. அதை மேலும் மலர்ந்து, தெய்வீக மணம் வீசச் செய்யவும் இயலும். அந்த முயற்சியில் நம் நாட்டுப் பெரியோர்கள் பலர் ஈடுபட்டுச் சிறந்த பயன் கண்டுள்ளனர். ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோர் இதில் நிபுணர்கள். மற்ற நாடுகளிலும் இந்தக் கருத்தை வற்புறுத்தும் பேரறிஞர்கள் இல்லாமல் இல்லை. உதாரணமாக, பிளேட்டோ என்னும் கிரேக்க அரசியல் ஞானி, "எல்லா வகையான அன்பும், ஆண்டவன் அன்பைப் பெறுவதற்கான படிகளாகவே இருக்க வேண்டும்"

என்று கூறியிருப்பதை எடுத்துக் காட்டலாம்.

மக்களிடம் தோன்றி வளர்ந்த காதல் உணர்வு, தெய்வத்தினிடம் திரும்பும்போது, அதன் தரம் மேலோங்குகிறது. அறிவின் முதிர்ச்சியும், கற்பனைத் திறனும், லட்சியப் பெருமையும் அதில் மிளிர்கின்றன. ஓர் உதாரணம் பார்ப்போம்.

எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஓரிடத்தில் தனியாக தூங்கா விளக்கு ஒன்று எற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அகலிலிருந்த எண்ணெய் கொஞ்சங் கொஞ்சமாக எரிந்து புகையாகி வெளிவருகிறது. இத்தகைய விளக்கை நாம் எத்தனையோ தரம் பார்த்திருப்போம். அதைப் பற்றி பெரும்பாலோர் கவனிக்கவும் மாட்டார்கள். ஏதோ ஒரு சாதாரண நிகழ்ச்சியாக அது தோன்றும். ஆனால் காதலனைப் பிரிந்த ஒருத்தி, அந்த விளக்கைக் காண்கின்றாள். அவள் காதல் நோயை அது உணர்த்துகிறது. காதலன் நினைவால் மனம் நொந்து, உடல் ஆற்றல் கொஞ்சம் கொஞ்சமாக வெந்து, பெருமூச்சு வெளிவர, நிலை குலைந்து ஏங்கும் தனக்கும், அந்த விளக்குக்கும் ஒற்றுமை இருப்பதாகக் காண்கிறாள். தன்னைப் போலவே மற்றவரை நினைப்பது உலக இயல்பல்லவா? அதையொட்டி தான் தன் காதலனைப் பிரிந்து ஏங்குவது போன்றே அந்த நந்தா விளக்கும் காதல் நோயால் வெந்து வாடுவதாக முடிவு கட்டுகிறாள். உடனே அதனிடம் அவளுக்கு ஓர் இரக்க உணர்ச்சி தோன்றுகிறது. அது உயிரற்ற விளக்கு என்பதையும் மறந்து, "ஐயோ, பாவம்! என்னைப்போல் காதல் நோய்க்கு இரையாகி வருந்தும் துரதிருஷ்டசாலியா?" என்று அவள் பரிவோடு பேசுகிறாள். மற்றவர் துன்பத்தைக் கண்டு இரங்குவதன்றோ உண்மையான அன்புக்கு அடையாளம்]

இத்தகைய காதல் சித்திரம் ஒன்றை நம்மாழ்வார் காட்டுகிறார் :

வெந்தாராக் காதல் நோய்
மெல்லாவி உள்ளுவலர்த்த
நந்தா விளக்கமே
நீயும் அளியத்தாய்
செந்தாமரைக் கண்
செங்கனிவாய்த் திருமால்
அந்தாமத் தண்துழாய்
ஆசையால் நோவாயோ !"

ஏக்கத்தின் உருவமாக அந்த விளக்கு காட்சியளிக்கிறது. அதே சமயத்தில் 'நந்தா விளக்கமே' என்று கூறுவதன் மூலம் அதன் ஒளி எப்போதும் அழியக்கூடாது என வாழ்த்துகிறார். ஆம்; காதல் என்றும் அணையா ஜீவஒளி. மானிடக் காதல் தெய்வீகக் காதலாகக் கனியும் பக்தி நிலையிலும், காதல் நோயின் தன்மை மாறாமல் இருப்பது, அறிந்து இன்புறத்தக்கதாகும்.

காதல் ஒரு விசித்திர நோய். காதலர் பிரிவின்போது துன்பக் கனல் வீசினாலும், அதன் இன்ப ஒளி எப்போதும் மங்காது. காதலைப்பற்றி எண்ண எண்ண பழைய காதல் அனுபவங்களை நினைக்க நினைக்க, பிரிவின்

தமிழ் மாகாணம் வருக!

(பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்)

★

தமிழ்ப் பொங்கல் பொங்குக. தமிழன் உள்ளம் பொங்கும் நாளே தமிழ்த் திருநாள். ஆனால் தமிழன் உள்ளம் பொங்க இடம் இல்லையே. இந்திய நாடு உரிமை பெற்று விட்டது. ஆனால் அந்த உரிமைக் காற்று தமிழ் நாட்டில் வீச வேண்டாமா? உரிமைக் காற்று எப்போது வீசும்? தம் நாட்டு அரசு தம்முடைய அரசே என மக்கள் உணரும் போதன்றோ?

மக்கள் எப்போது அவ்வாறு உணருகின்றனர்? தங்களவர் ஆளும் போது. தங்களவர் என்று யாரை மக்கள் கருதுகின்றனர்? தமது மொழி பேசுபவரையே மக்கள் தங்களவர் என்று கருதுகின்றனர். தாய் மொழியில் பிறந்து, தாய் மடியில்-தாய் மொழியோடு-தாய்ப் பால் உண்டு-தாய் மொழியில் வளர்ந்து வருகிறோம். தாய் மொழி கூடப் பிறந்தது அன்று; ஆனால் கூடப் பிறந்தது போல ஆகி விடுகிறது. வேற்று நாடு சென்றிருக்கும் போது வேறு வேறு இருப்பாரையும் வலிய காந்தம் போல இழுப்பது எது? தாய் மொழி ஒலி கேட்டதும் உள்ளம் பொங்குகிறது; ஒன்றாகி விடுகின்றோம். நமது நாடும் அப்படித்தானே? நம்முடைய மொழியில் அரசு நடக்கும் போதன்றோ அத்தகைய உரிமை உணர்வு பொங்கும்?

மதத்தின் பேரால் நாட்டைத் துண்டாடினர். மனிதன் தன் வாழ் நாளில் பல முறை மதம் மாறக் கூடும். ஆனால் ஒரு பிறப்பில் ஒரு தாய்தான் ஒருவனுக்கு இருக்கக் கூடும்; ஆதலின் ஒரு தாய் மொழி தான் ஒருவனுக்கு இருக்கக் கூடும். மறு பிறப்பில்

போதும் ஒரு வகையான இன்பம் பிறப்பது திண்ணம். அது அறிவு கலந்த இன்பம்; துன்பத்தை மறக்கச் செய்யும் நல் மருந்து.

அதுமட்டுமல்ல. மனிதனிடம் அடிப்படையாக உள்ள விலங்குணர்வை, அறிவின் துணையால் பண்படுத்தி, தெய்வநிலைக்குக் கொண்டு செல்லும் ஏணியும் அதுதான். ஆகவே, அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்துள்ள இந்த நோய், மானிட வர்க்கத்தின் வளர்ச்சிக்குரிய தொத்து நோய் என்றும் சொல்லத் தோன்றுகிறது.

எனவே காதல், தேன்மட்டுமல்ல; அதனினும் இனிய காவியம்.

காதல் மனித சமுகத்துக்கு நன்மை பயக்கும் பிறவி நோய். இன்பம் கூட்டும் இயற்கை சாதனம்; துன்பம் ஓட்டும் இன்பக் கருவி.

விலங்கை மனிதனுக்கியது பகுத்தறிவு என்றால், மனிதனை தெய்வமாக்குவது காதல் என்று கூறிவிடலாம்.

தான் மற்றொரு தாய்; மற்றொரு தாய் மொழி.

தாய் மொழி வழியே நாட்டினைப் பிரிப்பது நாட்டினை சிதைப்பதாகும் எனச் சிலர் மன்றாடுகின்றனர். உண்மை என்ன? நாட்டினைத் துண்டாட வேண்டும் என எவரும் கூறவில்லை. இந்திய அரசியல் ஒரு நாடன்று; பலநாடுகளின் கூட்டு நாடு. ஒரே அரசியலன்று; ஒற்றித்த அரசியல் வியஷ்டி அன்று; சமஷ்டி. இதன் அடிப்படை என்ன? நாடுபெரியது; பலவகையானது. பலவகை நாடுகளின் தனிச் சிறப்புகளோடு ஒற்றுமை பட்டு இந்திய நாடு உயர வேண்டும் என்பதன்றோ ஒற்றித்த அரசியலின் நோக்கம். எந்த வகையால் இந்திய நாடு பல வகையாகத் தோன்றுகிறது? மொழி வகையால் அல்லவா? வேற்றுமைகள் எல்லாம் பலபல பண்பாடுகளாக வளர்ந்து ஓங்கி உள்ளது மொழிகளின் வழியே அன்றோ? இந்தச் சிறப்பியல்களை நாட்டின் ஒற்றுமை பேரால் குலைக்க வேண்டுமா? குலைந்தால் ஒற்றித்த அரசியல் என்பது உண்மை ஆகுமா?

மொழி வழியே மாகாணங்கள் பிரியாமலன்றோ செயற்கைப் பிரிவினைகள் எழுந்து பேய்க் கூத்தாடி நாட்டினைச் சிதைக்கப் பார்க்கின்றன. மொழி வழியே சென்னையைப் பிரித்தபின் பிரகாசம் பூசல் இருக்குமா? பம்பாய் பூசல் இருக்குமா? நாட்டின் உரிமையை வளர விடாதபடி தடுக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்த சூழலன்றோ பல மொழி நாடுகளை ஒரே மாகாணமாக்கியது.

ஹிந்தியினைத் தாய் மொழியாய்க் கொண்டவர்கள் மட்டுமே இன்று உரிமை வாழ்வு வாழ்கின்றனர். இதனால் பிறருக்கு மன எரிவு வாராமல் இருக்குமா? இந்த மன எரிவினை வளரவிட்டால் என்ன நேரிடும்? ஹிந்தி பொதுமொழியாவது என்றும் இல்லையாம். நாட்டின் ஒற்றுமையை நாடுவோர் மொழிவழி மாகாணங்களை நிலை நாட்டவேண்டும். தங்கள் நாட்டில் தங்கள் தாய் மொழி அரசாளுவது கண்டு மகிழ்வர்; அரசாட்சியில் ஊக்கம் கொள்ளுவர். தமக்கும் விளங்காத நிலையில் ஏதோ நடக்கிறது எனத் தொலைவில் நில்லார்.

இதனைன்றோ காங்கிரஸ் மொழிவழி மாகாணத்தைப் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்தது. காந்தியடிகளை நினைக்கின்றோமா? நினைத்தால் அவர் விரும்பி அடிகோலிய மொழி வழிமாகாணங்களை அமைத்திருக்க மாட்டோமா; வீர பட்டேலும் மறைந்தார். இந்திய ஒற்றுமையை நிலைநாட்டிய அந்தப் பெருமகன் நினைவை நிலை நாட்டுவது எப்படி? அவர் நிலை நாட்டிய ஒற்றுமையைக் குலையாதபடி காப்பதால் மட்டுமே: ஒற்றுமை குலைவது செயற்கை வேறுபாடுகளால். இயற்கை மொழிவழி மாகாணம் வந்தால் இந்தச் செயற்கைப் பகைமைகள் ஒழியும். ஆதலின் இறந்தவர் ஆவி குளிரவேண்டியேனும் இந்தச் சிறந்த தொண்டில் ஈடுபட வேண்டாமா?

யார் வேண்டா என்கின்றனர்? தமிழர் வேண்டா என்கின்றனரா? மலையாளிகள் வேண்டா என்கின்றனரா? கன்னடர் வேண்டா என்கின்றனரா? ஆந்திரர் வேண்டா என்கின்றனரா? நம் மாகாண அரசியல் வேண்டாஎன்கின்றதா? இல்லை. நடுவிட அரசியலும் ஒப்புக் கொண்ட உண்மைதானே. எல்லாரும் ஒப்புக்கொண்ட பின்னரும் இயற்கை உரிமை வருவதற்கு என்ன தடை? ஊக்கமில்லாமை, உறுதி இல்லாமை, சிறுமை நோக்கம், இவை எல்லாம் இந்தப் பொங்கலோடு ஒழிக. நம் சென்னை மாகாணம் இதனையே வற்புறுத்தி இதற்கென்றே வாழ முயன்றால் தமிழ்ப் பொங்கல் பொங்கும்!

விடிவெள்ளி வெளியீடு!

விரைவில் வருகிறது!!

கவிஞர் வானம்பாடியின்

கருத்தோவியம்

" தமிழ் முழக்கம் "

(கவிதைகள்)

தனியாட்சி கண்டு -

தமிழ் நாடு உயர

அரிய விளக்கமாய்

அமைந்தது இந்நூல்

தமிழரசுக் கழகத் தலைவர் -

ம. பொ. சிவஞானம்

அவர்களின் முன்னுரை.

இந்தியக் குடியரசு தினத்தில்

எங்கும் கிடைக்கும்

மார்னிங் ஸ்டார் பப்ளிகேஷன்ஸ்

60, முக்தாருன்னிஸா

பேகம் தெரு, மதராஸ்-2.

" செங்கோல் "

திரு. ஆ. கொ. வேங்கட ராமானுஜம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் " செங்கோல் " முதல் மூன்று இதழ்களைப் பார்வையிட்டோம். தமிழரசுக் கழக குறிக்கோளைப் பரப்ப இவ்வார இதழ் வெளி வந்துள்ளதாக ஆசிரியப் பகுதி அறிவிக்கிறது. மகிழ்ச்சியோடு நாமும் வரவேற்கிறோம். தமிழ் நாட்டுப் பிரிவினைக்கு முட்டுக் கட்டையிட்டு வரும் திராவிடஸ்தானிகளின் விபரீதப் போக்கையும் அச்சமின்றிக் கண்டிக்கிறது 'செங்கோல்'. "குத்தீட்டி" என்ற பெயரில் வரும் பகுதி, திராவிடத்தார்களைக் கண்டிப்பதாக மட்டுமல்லாமல், அவர்களில் சிந்தனை சக்தியுடையவர்களின் கருத்தைத் திருத்துவதற்கும்பயன்படுவதாக இருக்கிறது.

முதல் மூன்று இதழ்களில் வெளிவந்திருக்கும் 'கார்ட்டூன்'களும் உயர்தரமானவை. திராவிடத்தார்களைக் கண்டிக்கும் அதே சமயத்தில், தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளும் இன்னும் அதிக அளவுக்கு இடம்பெற வேண்டும். 'செங்கோல்' அவ்வழியில் பணியாற்றும் என்ற நம்பிக்கையுடன் களிப்போடு வரவேற்கிறோம்.

'தமிழ் முரசு' திங்கள் வெளியீடாக மாறிய பிறகு தமிழரசு இயக்கத்திற்கு வார வெளியீடு இல்லாதிருந்த குறையை "செங்கோல்" தோன்றிப் போக்கி விட்டது. சாதி, சமய, கட்சிப் பெயர்களில் நடந்து வரும் கொடுங்கோல் வெறியாட்டங்களை ஒழிப்பதற்கு 'செங்கோல்' தளராது பாடுபடுமாக!

புள்ளி விவரம் பேசுகிறது!

★

புதிய குடியரசுச் சட்டப்படி சென்னை மாகாணத்திற்கு நடைபெற இருக்கும் தேர்தலில், வாக்காளர் தொகை - தேர்தலில் அரசாங்கத்தாருக்கு ஆகும் உத்தேச செலவு ஆகிய விபரம் வருமாறு—

சென்னை மாகாண வாக்காளர் எண்ணிக்கை 25749356.

மாகாண மக்கள் தொகையில் வாக்காளர்கள் எண்ணிக்கை 48 சதவிகிதம்.

வாக்காளர் பட்டியல் தயாரிக்க உததேச செலவு 5733150.

புதிய தேர்தல் உத்தேச செலவு 1957000.

இந்திய மக்களின் கல்வி நிலை

(1949-ம் ஆண்டு கணக்குப்படி)

கமிஷனர் மாகாணகள்

டெல்லி	31·9
குடகு	30·5
ஆஜ்மீர்	20·4

கவர்னர் மாகாணங்கள்

பம்பாய்	28.5
மே. வங்கம்	22·5
சென்னை	21·0
அசாம்	17·9
பஞ்சாப்	17·0
மத்திய பிரதேசம் (ம.மா.)	14·7
ஒரிசா	14·1
உ. பிரதேசம் (ஐ. மா.)	11·1
பீகார்	11·0

அரசப் பிரமுகர் மாகாணங்கள்

(1941 - கணக்குப்படி)

திருவிதாங்கூர்	56·1
கொச்சி	41·7
பரோடா	27.1

1941-ல் இந்தியாவில் படித்தவர் தொகை. 14·6 சத விகிதம் (ஆண்கள் 22·6, பெண்கள் 6 சத விகிதம்)

தமிழகத்தில் மொழிவாரி மக்கள்

1941-ம் ஆண்டு குடிமதிப்புக் கணக்குப்படி சென்னை மாகாண தமிழ் ஜில்லாக்களின் (சித்தூர் தமிழ்ப் பகுதிகள் நீங்கலாக) மொழிவாரி மக்கள் தொகை வருமாறு:—

தமிழ்	18066926
தெலுங்கு	2943597
கன்னடம்	735630
மலையாளம்	64448
இந்துஸ்தானி	381401
ஆங்கிலம்	31601
இந்தி	9813
சௌராஷ்டிரம்	101975
மராத்தி	46920
குசராத்தி	5309
மார்வாரி	1260
லிபியில்லா மொழியினர்	756
ஒரிசா	3068
இதர மொழியாளர்கள்	——

மதிப்புரை

தமிழா ஏமாறாதே: எழுதியவர் தி. சி. சுப்பையா; ஊழியர் பண்ணை. 12, சிங்கார தோட்டம் 7-வது தெரு, வண்ணையம்பதி - சென்னை. விலை அணா நான்கு.

திராவிட இயக்கத்தவரின் தவறான போக்குகளை விளக்கிக் கண்டிக்கிறார் ஆசிரியர். இது வேண்டியதே. ஆனால், அரசியல் - பெருளாதாரம் - மொழி ஆகிய துறைகளில் இந்திய தேசீயத்திற்கு மாறுபாடல்லாத வகையில் தமிழகம் முன்னேறுவதற்கான வழிவகைகளைக் கூறவில்லை ஆசிரியர்.

"திங்கள்"—(வாரவெளியீடு) உரிமையாளர்: எ. நேசமணி; ஆசிரியர்: எம். கே. பாவா. கோட்டாறு, திருவிதாங்கூர் தமிழகம்.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் பிளவுபட்டதன் எதிரொலி இப்பத்திரிகையின் தோற்றம். திருவிதாங்கூர் தமிழகத்தை, தாய்த் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கிளர்ச்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராயிருந்தவர், இந்தப் பத்திரிகையின் உரிமையாளரான திரு. நேசமணி. ஆகவே, பிளவைப் பெரிதாகக் கருதாது மலையாளிகளின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கான பணியில் பத்திரிகையை ஈடுபடுத்துவார் என நம்புகிறோம்.

'நல்லாயன்': (கிருஸ்துமஸ் பொன் மலர்) ஆசிரியர்: ரெவரண்ட் எ. ஜே. அடைக்கலம். 5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1. விலை 12-அணா.

கிருஸ்துவ மதத்தின் செந்நெறிகளைப் பரப்பும் இப்பத்திரிகையின் பொன் மலர், சிறந்த முறையில் வெளியிடப்பட்டிருக்கிறது. சமய வழிப் பத்திரிகையாயினும், சமூக - அரசியல் சம்பந்தமான கட்டுரைகளும் நிறைந்திருக்கின்றன. கட்டபொம்மனும், கப்பலோட்டிய தமிழரும், தேம்பாவணிச் சித்திரம், இதய பீடம் போன்றவை படித்துப் பயன் பெறத் தக்கவையாகும்.

(வாழ்க்கையில் வெற்றி: (How to Win Fortune)
இயற்றியவர்: லார்டு பீவர்புருக். மொழிபெயர்த்து வெளியிட்டவர்: ஜேம்ஸ் ஜே. மோசஸ், நாகர்கோவில். பக்கங்கள் 150. விலை குறிப்பிடவில்லை.]

இந்நூலாசிரியர் கோவணாண்டியாக இருந்து தமது முயற்சியால் முன்னேறிக் குபேரரானவர். ஆகவே, மனிதன் வாழ்க்கையில் முயன்று முன்னேறுவதற்கான மார்க்கங்களைத் தெளிவாகக் கூறுகிறார். சூழ்ச்சியும், சுயநலமும், சுரண்டலும் நிறைந்த உலகில் சொந்த முயற்சியும் சிந்தனைசக்தியும் தன்னலமற்ற உள்ளமும் படைத்தவர்கள் முயற்சியால் மட்டுமே முன்னேறுவதென்பது குதிரைக்குக் கொம்பு முளைத்த கதையை யொக்கும். இந்த நிலையில் லார்டு பீவர் புருக்கின் அனுபவம் எல்லோருக்கும் பொருத்தமானதென்று துணிவதற்கில்லை. எனினும் வாழ்க்கையில் முன்னேற, விரும்புபவன் கடைப்பிடிக்க வேண்டிய சகிப்புத்தன்மை, கட்டுப்பாடு, திடசித்தம ஆகியவற்றைப் பற்றி ஆசிரியரின் அனுபவம் படிப்போருக்குப் பயன் படுவதாகும்.

உபநிஷதங்களும் பௌத்தநூல்களும்

—எஸ். வையாபுரிப் பிள்ளை

நம் நாட்டிலே தோன்றிய உபநிஷதங்கள் மிகப் பிரசித்தமானவை. இவைகளெல்லாம் நம் தேசத்துப் பூர்வ மக்கள் இகவாழ்வு பற்றியும் பரவாழ்வு பற்றியும் ஆராய்ந்து தெளிந்த தத்துவங்கள் பலவற்றையும் நன்கு விளக்குகின்றன. பாரத மக்கள் யாவராலும் விள்ளுதற்கரிய பெருங் கேள்வியாகிய இறைவனைக் குறித்து விசாரணை செய்வதையே தமது வாழ்வின் பெருநோக்கமாக ஆதிகாலத்தில் கொண்டிருந்தார்கள். இந்நூல்களெல்லாம் புனிதமான நூல்களென்று இவர்களால் கொள்ளப்பட்டன. இவற்றை மீண்டும் மீண்டும் கற்று, மீண்டும் மீண்டும் சிந்தித்து, மீண்டும் மீண்டும் விசாரணை செய்து வந்திருந்தார்கள். இவை பற்றிப் பலவகையான கொள்கைகளும் ஏற்பட்டுள்ளன. இக்கொள்கையின் காரணமாக, பாரத மக்களும் பல்வாறு பிரிவுபட்டுப் போயினர்.

வேதத்தில் கூறப்படும் தெய்வங்களெல்லாம் பிரமத்தின் பலவேறு தோற்றங்களே என்பது கொள்கை வேறுபாட்டிற்கு ஒரு காரணமாக அமைந்தது. அந்தணர்கள் மற்றையோரைக் காட்டிலும் இறைவனோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்களாகக் கருதப்பட்டார்கள். இதன் காரணமாக ஜாதிப் பிரிவினை ஏற்பட்டு, வரவர வலிமைபெற்று வந்தது. பின்னொரு காலத்தில் தாழ்ந்த ஜாதியார்களுடைய நிழல்கூட இவர்கள் மீது படுதல் கூடாது என்ற அளவிற்கு ஜாதியின் இயல்பு இறுகிவிட்டது. அந்தணர்கள் மோட்சத்தை எளிதில் அடைதல் கூடும். பிற வகுப்பினர் எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும், மோட்ச நிலையை அடைவது எளிதன்று என்ற கொள்கையும் பரவலாயிற்று. இதனால் ஆத்மா பல்வேறு பிறப்புக்களை எடுக்கும் என்ற கொள்கையும் வலிமை பெற்றது.

புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத்
தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்து இளைத்தேன்.

(திருவாசகம்-1)

என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியது இங்கே அறியத்தக்கது. பிதாக்கொரஸ் என்ற கிரேக்க தத்துவஞானி இப்பல் பிறப்புக் கொள்கையைப் பாரத மக்களிடமிருந்து தெரிந்து கொண்டனர் என்று கூறுவார்கள்.

பாரத மக்களுடைய தத்துவ ஞானத் தெளிவை உபநிஷதங்களில் காணலாகும். இவற்றின் தேர்ந்த பொருள் யாது? இப்பொருள் 'உலகத்தில் வருந்தி உழலும் மக்களுக்கு நிரந்தரமான இன்பத்தை கொடுக்கும் வழி யாது?' என்ற கேள்விக்குரிய விடையேயாகும். உலகத்தில் பிரம்மத்தைத் தவிர வேறொன்றும் இல்லை என்ற கொள்கையையே உபநிஷதங்கள் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மற்றவையெல்லாம் மாயத் தோற்றங்கள். இம்மாயத் தோற்றங்களைப் பொருட்படுத்தாது உண்மைப் பொருளாகிய பிரம்மத்தினிடத்தில் ஐக்கியமாவது தான் பேரின்பமாகும். இவ்வின்பத்திற்குரிய வழி யாது? அவாவை அறுத்தல் என்பதுவே வழியாகும்.

நீண்டகால அனுபவத்தால் சேர்த்து வைத்த ஞானக் களஞ்சியமென்று உபநிஷதங்களைக் கூறுகின்றனர். காலம் செல்லச் செல்ல, இந்த ஞானம் கூறும் சமயத்தின் உள்ளொளியானது மழுங்குவதாயிற்று. இறைவனை நோக்கிச் சென்று அவனோடு ஐக்கியமாவது என்ற கொள்கையிலும் மாசு ஏறுவதாயிற்று. மனிதனைப்போல அவன் மேற்கொண்ட சமயதத்துவத்தை அழித்துவிடும் கருவிவேறொன்றும் இல்லையல்லவா? வெளிப்படையில் வைதீக சமயம் மிகவும் ஒழுங்குள்ளதாகவும் கட்டுப்பாடுள்ளதாகவும் விளங்கியது. ஆனால், அதன் அடியிலே மலினங்களால் சீர்கேடுற்றது. இதன் காரணமாக, எதிர்ப்புண்டாகத் தலைப்பட்டது. கி. மு. 6-வது நூற்றுண்டில் தோன்றிய புத்த பெருமான்தான் இந்த எதிர்ப்புக்குத் தலைவராக விளங்கியவர்.

புத்தரது வாழ்க்கை வரலாறு உலகப் பிரசித்தமானதே. அவர் உபதேசித்த தத்துவமும், ஒழுக்க நியதியும், சமய நெறியும் மிகச் சிறந்தவைகளாம். ஜாதியைக் கண்டித்தார். மக்களனைவரும் சகோதரர்கள் என்ற உண்மையைப் போதித்தார். நேர்மையான சிந்தனையும், நேர்மையான ஒழுக்கமும், சடங்கு, கிரியை முதலியவைகளைக் காட்டிலும் மிக மேம்பட்டன என்று வற்புறுத்தினர். வள்ளுவரும்,

ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

என்று கூறியது இங்கே அறிதற்குரியது. தன்னை அடக்கி வெல்லுதலே மனம் சாந்தியடைவதற்குரிய வழி என்பதனையும் விளக்கினர்.

ஆனல், சமய வாதிகள் எவ்வளவு உயர்ந்த சமயத்தையும் சீர்கேடுறச் செய்து விடுவார்கள் என்பது திண்ணம். புத்தர் தாமாக ஒன்றும் எழுதி வைக்கவில்லை. அவருடைய சிஷ்யர்கள் அவரது வாழ்க்கை வரலாற்றையும், அவரது அற்புதச் செயல்களையும், அவரது தர்மோபதேசங்களையும் எழுதி வைத்தனர். அவருடைய சிஷ்யர்களுடைய சிஷ்யர்கள் பௌத்தக் கொள்கைக்குரிய மூலக் கருத்துக்கள், அவை பற்றிய விவாதங்கள், புராண வரலாறுகள், தோத்திரங்கள்,

நீதி வாக்கியங்கள், தெய்வம் முதலியன பற்றிய விவரங்கள் இவற்றையெல்லாம் சேர்த்து வைத்தனர். இவற்ருல் தெளிவான உண்மை மறைக்கப்பட்டு, மயக்கம் மிகுதியாய் விளைந்தது. பல சபைகள் பல காலத்திலும் கூடிப் புத்தரது கொள்கைகளை வரையறுக்க முயன்றன. கி. மு. 250-ல் பாடலிபுத்திரத்தில் கூடிய சங்கம் மிக முக்கியமானது.

பௌத்த நூல்களுள் தம்மபதமும், திரிபிடகமும் உலகப் பிரசித்தி பெற்றவை. தம்மபதத்தில் புற்பல நீதிகளும் மிக அழகாகச் சுருக்கமாக உணர்த்தப்படுகின்றன. திரிபிடகங்களாவன சூத்த பிடகம், விநய பிடகம், அபிதம்ம பிடகம் என்பன. சூத்த பிடகத்தில் உலகம் முழுவதும் வியாபித்துள்ள கதைகள் பல காணப்படுகின்றன. இக்கதைகளில் ஒரு சில ஈசாப் (Aesop) கதைகளிலும, லாப் வாண்டேன் (Lofontaign) கதைகளிலும், சேமுஸ் (Remus) கூறிய நாடோடிக்கதைகளிலும், பொக்காஷியோ (Boccacio) ஷேக்ஸ்பியர் (Shakespeare) கூறியுள்ள கதைகளிலும் காணப்படுகின்றன. விநய பிடகத்தில் பிக்ஷுக்கள் கையாளவேண்டும் ஒழுக்க நியதிகள் கூறப்படுகின்றன. அபிதம்ம பிடகத்தில் பௌத்தர்கள் கொண்டுள்ள அபௌதிகக் கொள்கைகள், அவர்களது உளநூல்-கொள்கைகள், அவர்களது பிற்காலத் தத்துவக் கொள்கைகள் முதலியன வெளியிடப்படுகின்றன. ஆனல், இலக்கிய நெறியில் சூத்தபிடகம் ஒன்றே நம்மால் என்றும் பாராட்டுதற்குரியது. இப்பிடகத்தில் ஜாதகக் கதைகள் உள்ளன. புத்தர் 550 முறை பிறந்தார் என்றும் ஒவ்வொரு பிறப்பிலும் ஒரு சில உண்மைகளை நிகழ்த்திக் காட்டினரென்றும். அந்நிகழ்ச்சிகளின் வரலாறுகளே இக்கதைகளில் கூறப்படுவன என்றும் பௌத்தர்கள் கொள்வர்.

பெற்ற தாயும், மாற்ருந் தாயும் ஒரு குழந்தையைத் தன் தனக்கே உரியதென்று வாதாடி முடிவில் தங்கள் அரசனிடம் சென்று முறையிட்டு அவ்வரசன் தீர்ப்புக் கூறிய கதையை அனைவரும் அறிவோம். இக்கதையின் மூலம் பௌத்த ஜாதகக் கதைகளில் உள்ளதென முன்பே கூறினேம். இது போன்று பலபல கதைகள் உள்ளன; இக்கதைகளைப் புத்தர் தாமே சொன்னதாக நாம் நம்பவேண்டிய அவசியமில்லை. எத்தனையோ தலைமுறைகளாக வழங்கிவந்த கதைகள் இந்த ஜாதகக் கதைகளில் தொகுக்கப்பட்டுள்ளன என்பதுதான் உண்மையாகலாம். ஒவ்வொரு பிறப்பிற்கு ஒவ்வொரு கதையாக 550 கதைகள் இந்நூலிலுள்ளன. இந்நூல்களையெல்லாம் தமிழ் மக்களாகிய நாம் கற்பது இன்றியமையாததாகும்.

பல பூசாரிகள் நம்மிடம் தெய்வாம்சம் இருப்பதுபோல நடித்து மக்களை வஞ்சித்து பணம் பறிக்கிருர்கள்.

—பாரதியார்.

அன்புள்ள எழில்,

அறிஞர் பெர்னார்ட் ஷா சாவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு பிரிட்டனுக்குக் கூறிய அறிவுரை நினைவிலிருக்கிறதா? அது தமிழர் போற்ற வேண்டிய அறிவுரையாகவும் விளங்குகிறது.

பிரிட்டன் எவ்வளவோ நல்ல அரசியல் சீர்திருத்தங்களைச் செய்துள்ளது. ஆனாலும் சில கட்சிகள் அதை எதிர்த்துப் போராடிக் கெடுக்க முயல்கின்றன. அதற்காகத்தான் பெர்னார்ட் ஷா அந்த அறிவுரையைக் கூறினார். பிரிட்டன் செய்துள்ள சீர்திருத்தங்களையும் செய்ய எண்ணியுள்ள முற்போக்குத் திட்டங்களையும் உள்நாட்டாரும் வெளிநாட்டாரும் அறியும்படி விளம்பரப்படுத்த வேண்டும் என்றும், அதுவே எதிர்க்கும் பகையை வெல்வதற்கு வழி என்றும் கூறினார். ஒன்றுபடுத்தல், ஒழுங்குபடுத்தல், உணர்ச்சியூட்டுதல் இவை மட்டும் போதா என்றும், விளம்பரப்படுத்துவதே சிறந்த கடமை என்றும் கூறினார். விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக என்று மூன்றுமுறை அடுக்கிக் கூறி வற்புறுத்தினார்.

தமிழ்நாட்டுக்கு இந்த அறிவுரை வேண்டாமா? இன்றுள்ள நிலையில் தமிழ் நாட்டுக்குத்தான் சிறப்பாக வேண்டும் என்று சொல்வேன். ஏன்? தமிழரின் அரசியல் தேவைகளை இன்று மற்ற மாகாணங்கள் அறியச்செய்ய வேண்டும்; உலகறியச் செய்ய வேண்டும். ஆனால் அந்தத் தேவைகளைப் பற்றித் தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கே நன்றாகத் தெரியாதே! மொழிவாரி மாகாணம் என்பது என்ன, அது அமைந்தால் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன, தமிழ் மாகாணத்தின் எல்லைகளாக வரையறுக்க வேண்டியவை எவை, சென்னை நகரம் தமிழ் நாட்டின் தலைநகரமாக அமையவேண்டிய பொருத்தம் என்ன, என்பவை எல்லாம் தமிழ் மக்களுக்கே நன்றாகத் தெரியாதே! மற்ற நாட்டு மக்களுக்கு விளம்பரப்படுத்துவது எங்கே?

ஏன் இவ்வளவு பிற்போக்கான நிலையில் இருக்கிறோம் தெரியுமா? நான் கண்ட காரணம் இதுதான். வளர்ச்சியிலேயே நாம் பிற்போக்கானவர்கள் என்று சொல்வேன். மோட்டார் லாரிகள் பெருகிய இந்தக் காலத்தில் சென்னையில் பெரிய நெடுந்தெருக்களில் கட்டை வண்டிகளில் மூட்டை ஏற்றி முன்னும் பின்னுமாகத் தமிழ்க்

கூலியாட்கள் இழுத்துக் கொண்டு போவதைப் பார்த்திருக்கிறாயே, அது போன்றது இது. யந்திரக் கருவிகள் அமைந்து பெருகிய பிறகும், மனிதன் மிருகம்போல் யந்திரம் போல் உழைத்தால் முன்னேற முடியுமா? உணவு விடுதிகள் (ஓட்டல்கள்) மூலை முடுக்கெல்லாம் பெருகிவிட்ட பிறகும், பழங்காலத்து விருந்தோம்பும் அறத்தை நாள்தோறும் போற்றிக்கொண்டு சிலர் வாழ்கிறார்களே, அது போன்றது இது. படித்து அறிவை வளர்க்கவும் எண்ணிக் கடமையைச் செய்யவும் நேரமே இல்லாமல், பொழுதெல்லாம் சமையல் அறையிலேயே கழித்து நாளுக்கு நான்கு உலை வைத்துக்கொண்டிருந்தால், கட்டிய மனைவி வாழ்க்கைத்துணை ஆகாமல் சமையல்காரியாக நின்று விட்டால் முன்னேற முடியுமா? சமுதாயத்திலிருந்து ஒன்றும், குடும்பத்திலிருந்து ஒன்றுமாக எடுத்துக்காட்டினேன். அரசியலிலும் தமிழன் அதே பிற்போக்கில் இருக்கிறான். பத்திரிகைகளும் வானொலியும் பெருகிக் கருத்துப் பரப்பும் கருவிகளாகச் செல்வாக்குப் பெற்றுவிட்ட பிறகும், தமிழன் மேடை ஏறி ஐந்நூறு ஆயிரம் பேர்க்கு இடையில் பேசிவிட்டால் போதும் என்று எண்ணுகிறான். அதனால் எதிரிகள் பேசாமல் பெரிய பெரிய பத்திரிகைகளை வைத்துக் கொண்டு, தமிழ் நாட்டின் சிறப்பியல்புகளும் தேவைகளும் வெளிநாடுகளுக்குத் தெரியாதபடி தமிழ்மக்களை மண்டைமேல் அடித்து அடக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் "விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக" என்று ஷா கூறிய அறிவுரையின்படி நடப்பதற்கு வழி எது? நெடுங்காலமாகச் செய்து வந்த குற்றம்; இன்று பயன் விளைகிறது. இது அரசியல் துறையில் உள்ள குறை.

கலைத்துறையிலும் இந்தக் குறை இருந்து வருகிறது. காரணம், நாம் மட்டும் அல்ல; நம் முன்னோர்களும் காரணமே. யாழ், தமிழரின் தனிச் சிறப்பான இசைக் கருவி என்று கூறுவோர், உணர்வோர் எத்தனை பேர்? நூற்றுக்கு ஐந்து பேருக்குமேல் இல்லை. போதுமா விளம்பரம்? நெடுங்காலத்திற்கு முன்பே யாழ் செத்துவிட்டது. விளம்பரம் இல்லாத குறையால்தான் செத்தது. அது பத்திரிகை இல்லாத காலம் அல்லவா என்றும் விளம்பரத்திற்கு இடமே இல்லையே என்றும் கேட்கலாம். அந்தக் காலத்தில் பெரும்பாலான மக்கள் அறியும்படியாக அந்த யாழின் இசையைப் பரப்பவில்லை. மூவேந்தர்களின் அரண்மனையில் யாழ்ப்பாணர்கள் பாடினார்கள்; வள்ளல்களின் வீடுகளில் பாடினார்கள்; செல்வர்களின் வாயிலில் நின்று பாடினார்கள். போதுமா? தமிழ் மக்கள் என்றால் இந்த மூன்று வகையார் மட்டுமா? இவர்கள் தொகை நூற்றுக்கு ஒரு பங்கும் ஆகாதே. நூற்றுக்கு ஒரு பங்காகிய இவர்களை மட்டும் நம்பி வாழ்ந்த காரணத்தால்தான் யாழ் செத்தது. பெரும்பான்மையோராகிய மற்றத்

தமிழ் மக்களுடைய வாழ்விலும் யாழ் தொடர்புகொண் டிருந்தால், அந்த அருமையான இசைக்கருவி செத்திருக்க முடியுமா? யாழின் இசை இல்லாமல் திருமணம் நடப்பதில்லை என்ருவது வேறு வகையிலாவது ஏற்பாடு செய்து, பொதுவாக எல்லோருடைய வாழ்விலும் கலந்திருந்தால், யாழ் வாழ்ந்திருக்கும்; யாரும் அதை அழித்திருக்க முடியாது. மின்சார விளக்கு மிளிர்கின்ற காலம் வந்த பிறகும் குத்து விளக்கு அழியா வாழ்வு பெற்று விளங்குகிறது. மரத்தால் மட்டும் அல்ல, பித்தளையால் மட்டும் அல்ல, வெள்ளியாலும் பொன்ஞலும் குத்துவிளக்கு அழியா வாழ்வு பெற்று விடுதோறும் விளங்குகிறது! திருமணப் பந்தலில் அதற்கு எவ்வளவு மதிப்பு! இந்தக் குத்து விளக்குக்குப் பிழைக்கத் தெரிந்தது; தெரிகிறது. யாழுக்குப் பிழைக்கத் தெரியவில்லை; அது செத்தது. காரணம் விளம்பரம் இல்லை; அதாவது பலர் அறிந்த பெரு வாழ்வு இல்லை; சிலரிடம் மட்டும் ஒண்டி ஒதுங்கி வாழ்ந்தால் போதும் என்ற சிற்றறிவு அதை அழித்தது.

இலக்கியத் துறையிலும் இந்த உண்மைதான். இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரின் பெயர் தெரியாத குடும்பம் இருக்க முடியாது. ஆனல் தமிழ நாட்டில் கபிலர், நக்கீரர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் முதலான பெரும் புலவர்களின் பெயர்கள் தெரியாத குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரைப் படிக்க முடியாதவர்களும் அவரைப்பற்றி அறிந்து கொள்ளும்படியாக விளம்பரப் படுத்துகிருர்கள்; எல்லோரும் படிக்கக் கூடிய வகையில் மிக எளிய சிறு நூல்கள் எழுதிப் பரப்புகிருர்கள். ஆனல் நம் நாட்டில், யார் அப்படிச் செய்கிருர்கள்? பரிமேலழகரும் அவருக்கு அடுத்தபடியாக இன்னும் ஒரு சிலருமே திருக்குறளைப் படிக்க முடியும் என்றும், அடியார்க்கு நல்லாரும் வேறு ஏழெட்டுப் பேரும் தவிர மற்றவர்களுக்குச் சிலப்பதிகாரம் எட்டாது என்றும் சொல்லிச் சொல்லி, பெரும்பான்மையான தமிழ் மக்கள் மறந்து போகும்படியான தொண்டு தான் நடைபெற்றது. அதனல்தான் சிலப்பதிகாரம் தமிழர் பலர் அறியாத நூலாக ஒதுங்கிவிட்டது. எல்லோருடைய வீட்டையும் தேடிக் கொண்டு விளம்பரத்துடன் வந்த வெளிநாட்டுக் கதைகள் செல்வாக்குப் பெற்றுவிட்டன. வெளி நாட்டுக்கதைகள் வேண்டாம் என்று சொல்லவில்லை. உலகம் ஒரு குடும்பமாகும் காலத்தில் அவ்வாறு பேச முடியுமா? ஆனல் தன் நாட்டுக் காவியங்களை மறந்துவிட்டு வெளிநாட்டுக் கதைகளைப் போற்றுவது அறமாகுமா? பரந்த அரசியல் நோக்கம் உடைய தலைவர் நேருவும் காஷ்மீரத்தை மறப்பதில்லையே. ஷேக் அப்துல்லா சென்னைக்கு வந்து தமிழ் மக்களிடையே பேசிய போதும் காஷ்மீரத்தின் இயற்கையழகைப் பற்றி ஓயாமல் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தாரே! முதலில் என் தாய்,

என் குழந்தை! அடுத்தபடி ஊராரின் அன்னையர், ஊராரின் மக்கள்; அதுதான் உலக ஒருமை போற்றும் வழி!

தமிழ்மக்கள் கலைவகையில் குறைபட நடந்தது மட்டும் அல்ல; தங்கள் தாய்மொழியிடத்திலும் அவ்வாறே நடந்தார்கள். தமிழ்மொழி இப்படிப் பட்டது, அப்படிப்பட்டது, ஈடற்றது, எடுப்பற்றது என்றெல்லாம் தமிழறிஞர் ஒருவர் மற்றொருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர, மற்றவர்களுக்கு விளங்கும்படியாக ஏதாவது செய்தார்களா? புலவர்கள் புலவர்களுக்காகவே நூல்களை எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தமிழ் மொழியைப் பரப்பவேண்டும் என்று நானூறு ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டில் தொண்டு செய்திருந்தால், மலையாளம் என்று ஒரு மொழி தோன்றியிருக்காது. அங்கெல்லாம் தமிழே இருந்திருக்கும். நாஞ்சில் நாடு மட்டும் அல்ல, கேரளம் முழுதுமே தமிழ்நாட்டின் பகுதியாயிருக்கும். அதே தொண்டை ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் மைசூர்ப் பகுதியிலும் நெல்லூர் கடப்பை முதலிய வட்டாரங்களிலும் செய்திருந்தால், கன்னடம், தெலுங்கு என்ற மொழிகள் தோன்றியிருக்காமல், அங்கெல்லாம் தமிழே பரவியிருக்கும். மைசூர்ப் பகுதியில் அக்காலத்தில் பேசிய கன்னடம் முக்கால் பகுதி தமிழோடு ஒத்திருந்தது. முயற்சி செய்து தமிழைப்பரப்பியிருந்தால், மற்ற கால் பகுதியையும் அப்போது மாற்றியிருக்கலாம்; முழுதும் தமிழாகிவிட்டிருக்கும். அந்தக் காலத்துத் தமிழரசர்களும் தமிழறிஞர்களும் தூங்கிய தூக்கத்தால் கடமையை மறந்த காரணத்தால், இன்று கன்னடம் முக்காலே அரைக்கால் பகுதி மாறிவிட்டது. பாம்பு என்பது 'பாமு' ஆகி 'பாவு' ஆகி 'ஹாவு' ஆகி விட்டது. தெலுங்கும் அப்படியே. மரம் என்பதைப் பழங்காலத்தில் மரன் என்று எழுதியிருக்கிறார்கள். மரனு, மரானு என்று பல நூற்றாண்டுகளுக்கு முன் நெல்லூர் கடப்பைப் பகுதிகளில் சொல்லிவந்தார்கள். அப்போது தமிழறிஞர்கள் அங்கே போய்த் தொண்டு செய்யவில்லை. மரானு என்பது ம்ரானு ஆகி மானு ஆகிறவரையில் விட்டு விட்டார்கள். தெலுங்கும் முக்கால் பகுதிக்கு மேல் வேறுபட்டுவிட்டது. அந்த நிலையில் வடமொழி படித்தவர்கள் வந்து, கன்னடத்திற்கும் தெலுங்கிற்கும் தொண்டு செய்து இலக்கணமும் எழுதிவிட்டார்கள். இப்படித் தங்கள் மொழி இருந்த இடத்திலேயே போய்த் தொண்டு செய்யத் தவறினர்கள்; மெல்ல மெல்ல மாறி மாறி வேறு மொழிகளாகத் திரிந்து போகும்படியாக விட்டு விட்டார்கள். தமிழுக்கே பகை தேடிக்கொண்டார்கள். இல்லையானல் இன்று தமிழ்மொழி விந்தியமலை வரையில் தென்னிந்தியா முழுதும் பரவிய மொழியாக இருந்திருக்கும்; இந்தியாவில் பெரும்பாலோர் பேசும் மொழியாகவும் இருந்திருக்கும்; அந்தக் காரணத்தால் இந்தியாவின் பொது

மார்கழித் திங்களின் மாண்பு

"ஞானம்"

தமிழருக்குரிய திருநாட்களில், பொங்கல் திருநாள் சிறப்பு வாய்ந்ததென்பது அனைவரும் ஒப்பமுடிந்த உண்மை. பொங்கல் திருநாளைப் போன்றே அதற்கு முன்னாள் வரும் போக்கித் திருநாளும் மற்றொரு வகையில் சிறப்பு வாய்ந்ததாகும். பொங்கலுக்கு முன் நாளை 'போகி'த் திருநாள் என்கின்றனர், மக்கள். இது பிழையாகும். **போக்கித் திருநாள்** என்பதே பொருத்தமுடையதாகும். ஏனெனில், நாம் வாழும் இல்லங்களில் - கையாளும் பாத்திரங்களில் ஆண்டு முழுவதும் படிந்த அழுக்கைப் போக்கும் நாளே போக்கித் திருநாள்.

உண்மை இதுவாக, 'போகி' என்பது வடமொழிச் சொல்லாகவும், 'போகி'த் திருநாள் அசுரன் ஒருவன் அழிக்கப்பட்ட நாளாகவும், பிற்கால மக்களிடையே கற்பனை செய்யப் பட்டுவிட்டது.

போக்கித் திருநாளை இறுதி நாளாகக் கொண்ட மார்கழி மாதத்தை 'பீடை மாதம்' என்கின்றனர் மக்கள். 'பீடை' என்றசொல், அழுக்கு, வறுமை, என்ற பொருள்களில் வழங்கி வருவதாகும். மார்கழி மாதத்தில் அவரவர்கட்கு வசதியான நாட்களில் இல்லச்சுவர்களில் படிந்த அழுக்கைப் போக்க சுண்ணாம்பு (வெள்ளை) பூசுகின்றனர். தைமாதம் முதல் நாளாகிய பொங்கலன்று வீடுகள் தோறும் புது அரிசி பொங்கப் படுகிறது. புத்தாடைகளும், புதுப்புது பொருள்களும் வாங்

மொழியாக வடநாட்டாரும் ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் இருந்திருக்கும். மொழியையும் கலையையும் மற்றவற்றையும் சிலருடைய தனிச்சொத்தாக வைத்திருந்து பலர்க்கும் பரப்பாத குற்றம் இன்று இப்படி விளைந்திருக்கிறது. பலர்க்கும் தெரியப் பரப்ப வேண்டும். தம்பி ! மொழிவழி அரசியலிலாவது அதை இனிமேல் செய்தால்தான் வாழமுடியும் ! விளம்பரப்படுத்தினால் தான் உய்யும் வழி உண்டு! இல்லையானால் இன்னும் ஒரு நூற்றாண்டில் தமிழ் தமிழர் தமிழகம் இந்த மூன்றும் யாருக்கும் தெரியாத சொற்களாகிவிடும்.

தம்பி! என்னவோ எழுதினேன்! எண்ணிப் பார்க்கிறேன். என் மனநிலை எனக்கே தெரிகிறது. பிறரிடம் குறை காணும் வழக்கம் எனக்கு மிகுதியாக இல்லை. என்னிடம் ஏதாவது குறை அதற்குக் காரணமாக இருக்கும் என்று எண்ணுவதே அடிக்கடி வழக்கமாகிவிட்டது. ஆமாம்! கடிக்கும் கொசுவின் மேல் சீறிவிழுந்தால் போதுமா? வீட்டின் தோட்டத்தில் சாய்க்கடை நீரைத் தேங்கவிட்ட என் குற்றத்தை மறந்துவிட எனக்கு உரிமை உண்டா?

அன்புள்ள,

வளவன்.

கப்பட்டு, புது வாழ்வு தொடங் கப்படுகிறது. ஆம்; அழுக்கும் வறுமையும் மார்கழி மாதத் தோடு தீர்ந்து போகிறது. ஆகவே, அம்மாதத்தை 'பீடை மாதம்' எனக் கூறுவது ஒரு வகையில் பொருத்தமுடைத்தே யாகும்.

போக்கித் திருநாளை இறுதி நாளாகக் கொண்ட மார்கழித் திங்களில், இல்லச் சுவர்களில் சுண்ணும்பு பூசித் தூய்மைப் படுத்துகிறோம். மரப்பொருள்க ளில் படிந்த அழுக்கைப்போக்கி புதுப்புது வர்ணங்கள் பூசி அழகு செய்கிறோம். பழைய பொருள்களில், புதுப்பிக்க வேண்டியவற்றை யெல்லாம் புதுப்பித்தபிறகு புதுப்பிக்க முடியாதவாறு பழுதுபட்ட வற்றை தீயில் போட்டுப் பொசுக்கி விடுகிறோம்.

மறுநாள் பொங்கலன்று, புது வாழ்வு துவக்குகின்றோம். அன்று பொங்கும் பானை புதிது; அகப்பை புதிது; உடுத்தும் ஆடையும் புதிது. ஆகவே, நம் உள்ளத்தே எழும் உணர்ச்சியும் புதிது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

மார்கழித் திங்கள் புறத் தூய்மை பெறும் மாதம்மட்டு மன்று. அகத்தூய்மை பெறும் மாதமுமாகும். மார்கழித் திங்களில், விடியற்காலை தோறும் - வீடுகள் தோறும் இசையொலியெழும்பும். சைவர் வீடுகளில், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும், வைணவர் இல்லங்களில் ஆண்டாள் திருப் பாவையும் முழங்கக் கேட்க லாம். அந்தப் பாடல்களில் கலந்த பண் பாடுவோரின் - பாடக் கேட்போரின் இதயங் களைப் பண்படுத்தும். பாடலில் உள்ள பொருள் அவர் தம் எண் ணங்களைத் தூய்மையாக்கும்.

மார்கழி மாதத்தில், தமிழ்ப் பெண்களின் கைகள் வீடுகளைத் தூய்மைப் படுத்துவதோடு, வீதிகளையும் தூய்மை படுத்து கின்றன. 'கோலம்' என்ற பெய ரிலே வீதிகளில் பெண்கள் வரையும் விதவிதமான சித்திரங்கள் தமிழ் இனத் துக்கே பெருமை தருவதாகும்.

பண்டைத் தமிழர் சித்திரை மாதம் முழுவதிலும் இந்திர விழா கொண்டாடியதாக சிலப் பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களால் அறிகிறோம். அந்த விழா இன்றைய தமிழகத் தில் நடைபெறுவதில்லை. ஆயி னும், இந்திர விழாவைப் போன்றே மாதம் முழுவதும் ஆலயங்களிலெல்லாம் உற்சவங் கள் - வீதிகளிலெல்லாம் பஜனை கள் பவனி - வீடுகளிலெல்லாம் இசையொலி முழக்கம் என்ற சிறப்புகளை கொண்டிருக்கிறது மார்கழி மாதம்.

சுருக்கமாகச் சொன்னல், போக்கித் திருநாளை இறுதி நாளாகக் கொண்ட மார்கழி மாதத்தை, அழகுக் கலைவளர்க் கும் மாதம்-ஆத்ம நெறி வளர்க் கும் மாதம் - இசை ஒலி எழுப் பும் மாதம் எனலாம்.

★

கடைசிக் கடிதம்

சென்னை, 22—12—50

அன்புள்ள விசாலாட்சிக்கு,

ஆசி பல.

என் கண்ணே! கடிதம் கிடைத்தது. உன் விருப்பம் போல் "ஒரு முறைக்குப் பல முறை" திருப்பித் திருப்பிப் படித்தேன்.........

இன்றுதான் என் கல்லூரிக்குக் கடைசி நாள் - நாளையிலிருந்து விடுமுறை. ஆம், என் சென்னை வாழ்க்கைக்கும் இன்றுதான் கடைசி நாள் - நாளையிலிருந்து எனக்கும் 'விடுமுறை'தான்! ஆனல், ஒரு சிறு வேறுபாடு. இந்தக் கல்லூரியை நாளைக்குப் பார்த்தால் கூத்தாட்டம் இல்லாத அவைக்கூடத்தைப் போல் உயிரற்றுக் கிடக்கும். இன்னும் இருபது இருபத்தைந்து நாட்கள் கழித்துப் பார்த்தால் ஆடிப் பதினெட்டு வெள்ளம்போல் காட்சி அளிக்கும். மகிழ்ச்சியோடு ஊருக்கு ஓடும் குழந்தைகளெல்லாம் - 'பொங்கலோ பொங்கல்' - என்று முழங்கிவிட்டு பெட்டியும் புத்தகமுமாக - பேனவும் கையுமாக வந்து விடுமல்லவா? ஆனல், நான் மட்டும் திரும்பி வரமாட்டேன். விசாலாட்சி! இந்த முடிவிற்கு எப்படியோ நான் வந்து விட்டேன் - திடீர் என்றல்ல - திட்டமிட்டு எண்ணிப் பார்த்தே இம்முடிவிற்கு வந்து விட்டேன். இன்று காலையில் என்னிடம் இருந்த புத்தகங்களை எல்லாம் என் மாணவிகட்கு - எனக்குப் பிடித்தமான சூது வாதற்ற பெண்களுக்குக் கொடுத்து விட்டேன். என் ஷேக்ஸ்பியர்-மில்டன்- ஷெல்லி - கீட்ஸ் - ஷா - எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன். என் அருமைத் திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும்கூடக் கொடுத்து விட்டேன். மீதியாக ஒரு பெரும் காகிதக் கட்டு இருந்தது. அதைத் தீயிலிட்டு சாம்பலாக்குவதே சரி என்று உணர்ந்தேன். விசாலாட்சி! என் உடல் எரிந்து சாம்பலாவதை நான் பார்க்க முடியாது. ஆனல் என் உள்ளம், அந்த உள்ளத்தே வளர்ந்த உணர்வு, அந்த உணர்வால் வந்த வாழ்க்கை ஆகியவற்றின் வரலாற்றுச் சுவடிகள் அல்லவா இந்தக் கடிதங்கள். எனவே, இந்தக் கடிதங்களை எரிப்பதன் மூலம் என் வாழ்க்கையை - பட்டுப்போன பாழ் மரத்தை - நாற்றம் எடுத்துவிட்ட நச்சுக் குப்பையை - நானே எரித்து விட்ட ஆறுதலாவது எனக்குக் கிடைக்கும் அல்லவா? அதனல் அந்தப் பெரிய காகிதக் கட்டை அப்படியே எரித்தேன்-தீ எரிந்தது - எழுநாவிட்டு எரிந்தது. அறைக்கதவு - சன்னல்கள் -

அத்தனையும் சாத்திவிட்டு எரித்தேன். ஆத்திரத்தோடு விம்மி விம்மி எரிந்தது. அந்தத் தீயின் நா சுழன்று சுழன்று வந்த போது கூர்ந்து கவனித்தேன். அந்தத் தீயில், "அன்பு" - "பொறுமை" - "தவம்" - "தியாகம்"—என்? - கடைசியாகக் "காதல்" இந்தச் சொற்கள் எல்லாம் புழுப்போல் நெளிந்து நெளிந்து எரிந்து சாம்பலாயிற்று. கடிதத்திலுள்ள ஒவ்வொரு சொல்லிலும் என்னை, கலை - கண், கண்ணின் இமை - நெற்றி, நெற்றியிலிட்ட திலகம் - வாய், வாயிலிருக்கும் முத்துபோன்ற பல் - இப்படி அங்கம் அங்கமாக - எரிந்து சாம்பலாவதைப் பார்த்தேன். முடிவில்? - அறை முழுவதும் கரித்தூள்கள் நிரம்பி இருக்கக் கண்டேன். கூட்டிக் குப்பையில் எரிந்தேன்.

என் அருமை விசாலாட்சி! நான் படித்துப் படித்து அலுத்துப்போன புத்தகங்களையும் - நான் பார்த்துப் பார்த்து சலித்துப்போன காகிதங்களையும் கொளுத்தி விட்டேன். கடைசியாக வந்த உன் கடித மட்டும் இதோ என் எதிரே இருக்கிறது. அதையும் உனக்கு எழுதும் இந்தக் கடிதத்துடனேயே வைத்து அனுப்பிவிடப் போகிறேன். அன்பே,

உன்னைப்பற்றி - உனக்காக எழுத ஆரம்பித்தேன். ஆனால், என்னைப் பற்றியே எழுதிவிட்டேன். என் குறை அது. ஆனால் இனி நான யாருக்குக் கடிதம் எழுதப் போகிறேன்?

இரண்டு நாட்கட்கு முன் செல்வநாயகம் என்னிடம் வந்திருந்தார். இன்று உன்கடிதம் வரும் என்றும் சொன்னர். அப்படியே வந்தது. இன்று காலையிலேயே என் அறையைக் காலி செய்துவிட்டு சற்று நேரம் படுத்துக் கிடந்தேன் உன்னை பற்றியும் என்னைப் பற்றியுமே மாறி மாறி எண்ணிக்கொண்டிருந்தேன். நன்றாக எண்ணிப் பார்த்து - செல்வ நாயகம் சொன்னதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து முடிவாக உனக்கு இன்று கடிதம் எழுதி விடுவது என்று தீர்மானித்தேன். இனிமேல் நீதான் எனக்கு எழுதப் போகிறாயா! அல்லது நான் தான் உனக்கு எழுதப்போகிறேனா?

என்னிடம் நீ அறிவுரை கேட்பதை - நம்பிக்கையோடும் துயரக் கண்ணீரோடும் "ஒரு வார்த்தை சொல்ல அக்கா," என்று கேட்பதை - நினைக்கும் போது மரக்கட்டையாகிவிட்ட என் நெஞ்சிலும் கடமை உணர்ச்சி பீறிடுகிறது. உனக்கு நான் இக்கடிதம் எழுதுவதன் மூலம் உனக்கும் உன்னைப் போன்ற எத்தனையோ தமிழ்ப் பெண்கட்கும் நான் உண்மையான தொண்டு செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

விசாலாட்சி, என் அறிவுரையில் தேன் இருக்காது; தீ தான் இருக்கும். தேனில் ஊறிய பழமாக இருப்பதை விட தீயிலே சுட்ட தங்கமாகத்தான் காதல் வாழ்க்கை அமைய வேண்டும் என்பது என் கருத்து. இது கற்பனை அல்ல; கசப்பான அனுபவம்.

செல்வநாயகத்தின் மீது எனக்கு சந்தேகம் கிடையாது.

உன் தூய அன்பைப்பற்றியும் எனக்கு ஒரு குறையும் கிடையாது. "ஆறு ஆண்டுகளாக என் உயிர் அவர்" என்று நீ எழுதியிருக்கிறாய்; - "உண்மைதான். "ஆறு ஆண்டுகளாக அவள்தான் என் இதயம்" என்கிறார். செல்வநாயகம், இருக்கலாம். "அவரைத் தவிர இன்னொரு ஆளை நினைக்க மாட்டேன் - இது சத்தியம்" என்று நீ எழுதுகிறாய் - வியப்பில்லை "எங்கட்குத் திருமணம் ஆகவில்லை என்றால் வாழ் நாள் எல்லாம் நான் துறவிதான்" என்கிறார் செல்வநாயகம், தவறில்லை. காதல் புரிவது 'எளிது; ஆனால் காதலைக் காப்பாற்றி வாழ்விப்பது கடினம். உனக்கு போதிக்கும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள எனக்கு 27 ஆண்டுகள் ஆயின. என்னை நீ பார்த்து எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன. உன்னைப் போல் நானும் காதல் செய்த பருவத்தில் என்னை நீ பார்த்திருப்பாய். அப்போது - செயின்ட் மேரி பள்ளியில் நீயும் நானும் படித்தபோது உன்னை அந்தப் பூ அரசு மரத்தடிக்கு அழைத்துச் சென்று விளையாடும் போதெல்லாம் உன்னைக் கட்டி அணைத்துக்கொள்வேன் - நினைப்பிருக்கிறதா? அந்தப் பருவத்தில் என்னைப்பற்றி நீ என்னவெல்லாம் சொன்னாய்? "அழகி அக்கா நீ" "பலசாலி அக்கா நீ" என்றெல்லாம் சொல்வாய் அல்லவா? இப்போது நீ என்னைப் பார்க்க வேண்டுமே, என் அழகு எல்லாம் இலவம் பஞ்சாய் பறந்துவிட்டது; உடல் பலமோ கானல் நீராகிவிட்டது. உன்னைக் கட்டிப் பிடிக்கும் போது வளையல் குலுங்கிய என் அழகிய வலிமை பொருந்திய கைகள் மூங்கில் பிளாச்சுகள் போல் பொலிவிழந்து மெலிந்துவிட்டன. நீ பார்த்துப் பார்த்து அதிசயித்த அதே கண்கள் மஞ்சள் நிறம் கண்டு ஒளி மங்கிவிட்டன. "நீ கொஞ்சம் தடிதான் அக்கா" என்பாயே, அந்தப் பருமனான உடல் உளுத்துப் போன மூங்கிலினும் கேடாகிவிட்டது.

விசாலாட்சி! கொடிய க்ஷய ரோகம் - என்னைப் பற்றிக் கொண்டது. இருமல் ஓயவில்லை. இரும இரும இரத்தம் வெளியாகிறது. இரத்தப் பெருக்கு நாளுக்குநாள் அதிகம். இந்த அரசாங்கப் பெண்கள் கல்லூரியில் - நூற்றுக் கணக்கான நோட்டுகளை இரவு பகலாய் வார்த்தை வார்த்தையாகப் பார்த்துத் திருத்திக்கொண்டு இன்னும் இந்த நிலையில் நடைப்பிணமாய் எத்தனை நாள் நான் வாழ்வது? என்னிடம் பேச - என் பக்கத்தில் நிற்கவும் கூட மாணவிகள் அஞ்சுகிறார்கள். நான் அன்பாகக் கூப்பிட்டாலும் அஞ்சி ஓடுகிறார்கள். இதைவிட நரக வாழ்க்கை வேறு உண்டா? விசாலாட்சி! நான் ஒரு முடிவிற்கு வந்து விட்டேன். இந்த நிலையில்தான் என்னிடம் "ஒரு வார்த்தை சொல் அக்கா" என்று நீ கேட்கிறாய். என் காதல் வாழ்வு முறிந்து போன கதையெல்லாம் உனக்குத் தெரியும். ஊரெல்லாம் உறவெல்லாம் என் கற்பைச் சந்தேகித்து "ஓடுகாலி" என்று தூற்றுவதெல்லாம் உனக்குத் தெரியும். எனக்காக உயிரையும் தர சித்தம்

என்று எத்தனையோ நண்பர் கட்கு முன்னிலையில் சொன்ன வர் - இன்று என் நினைப்புகூட இல்லாமல் தன் நினைப்பையும் மறந்து எவர் மடியிலோ அடங்கி ஒடுங்கிக் கிடப்பதும் நீ அறி வாய் "நீயே என் தெய்வம்" - என்று காலில் விழுந்து அவரை நான் வணங்கிய காலத்தில் "இதெல்லாம் மூடநம்பிக்கை - நீ என் துணைவி" என்று கட்டி அணைத்தவர் நான்கு ஆண்டு கட்கு முன்னர் - யாருமில்லா இடத்தில் - அவர் மாளிகை லேயே சந்தித்து அழுத கண்ணீ ரோடு - அலரும் - குரலோடு - "ஐயா! உன் துணைவி அல்ல நான்; உன் வீட்டு நாய் - நன்றியுள்ள நாய். கருணை கூர்ந்து என்னை ஏற்றுக் கொள் ளுங்கள்." என்று நான் கெஞ் சிய நேரத்தில் காலால் என் வயிற்றில் உதைத்து, - கையிலே கத்தியை எடுத்து என் நெஞ் செதிரே காட்டிய "கருணை"யும் உனக்குத் தெரியும். அன்பே! ஆறுதலற்ற அபலையாகிய என் னிடம் நீ அறிவுரை கேட்கிருய்!

செல்வநாயகத்திடம் எல்லாம் விசாரித்தேன். உன் உறுதியை யும் அவர் நம்பிக்கையையும் தெளிவாகக் கூறினர். உன்னை மணம் செய்து கொள்வதை அவர் உறவினர்கள் - ஆதரிக்க மாட்டார்கள். ஆனல் எதிர்க்க வும் மாட்டார்கள் என்று கூறி ஞர். அவரிடம் நான் சில செய் திகளை வற்புறுத்திச் சொன் னேன்:

"நீங்கள் இனியும் கற்பனை யில் வாழ்வது அறியாமை. வாழ்க்கை கற்பனையில் இல்லை. ஆண்டுக் கணக்காக - மாதக் கணக்காக - இரவு பகலாக - துன்பத்திற்கும் துயரத்திற் கும், கொடுமைக்கும், பழிக் கும், வஞ்சனைக்கும் வேத னைக்கும் மத்தியில் வாழ்வதில் தான் வாழ்க்கை இருக்கிறது. எனவே, இன்று காதல் ஒளி வீசும் அந்த அபலையின் கண் களில் இன்னும் சில ஆண்டு களில் கண்ணீர்த் துளிகள் சிந்தும்படிச் செய்து விடா தீர்கள். காதல் வெறியில் கைகோர்த்துத் திரிய ஆரம் பித்த தமிழ்ப் பெண்கள் சில ஆண்டுகளில் காலணு காசிற் கும கதியற்று கண் கலங்கு வதை நான் அறிவேன். காதல் மாளிகையில் கை கோர்த்துத் திரியலாம் என்ற வெறியில் நான்கூட நாடறிய சீர்திருத்த மணம் செய்து கொண்டவள் தான். எட்டு ஆண்டுகட்கு முன் என் காதலை சந்தேகித்த என் அண்ணனிடம் "என் இதயத் தைப் பிளந்து பார்! அங்கே இருப்பது அவர்" என்று சொன்னவள்தான்நான். இப் போது என் இதயத்தை நானே திறந்து பார்த்தால் இருப்பது அவர் அல்ல - காத லும் அல்ல - கொடிய க்ஷய ரோகப் பூச்சிகள் என்பது தெரியும்.

செல்வநாயகம்! உங்கள் வாழ்க்கையின் வசதிகளைப் பற்றி, பொருள் வளத்தைப் பற்றிச் சிந்தியுங்கள் - ஆழமா கச் சிந்தியுங்கள். அதுமட்டும் அல்ல; உங்கள் வாழ்க்கை யினை உருவாக்கும் அவசரத் தில் மற்றவர்கள் வாழ்க்

(51-ம் பக்கம் பார்க்க)

கண்கள்

கு.மா.பா.

காட்சி 1.

இடம் :—ராமையன் வீடு.

[தங்கம் கவலையுடன் தலை குனிந்து உட்கார்ந்திருக்கிறாள். வெளியிலிருந்து வரும் ராமையன், அவள் முகத்தைத் தூக்கிப் பார்க்கிறான்.]

ராமையன் :—என்னுடைய ரோஜா மலர் ஏன் கொஞ்சம் வாடியிருக்கிறது?

தங்கம் : ....! (மௌனம்)

ராமையன் : தங்கம், தங்கம்! உன் முகத்தைப் பற்றித்தான் கேட்கிறேன். ஏன் இந்த வாட்டம்?

தங்கம் : (மெல்லச் சிரித்து) ஓகோ! என்னைத்தானும் ஏதோ ரோஜா புஷ்பத்திடம் பேசுகிறீர்களென்றல்லவா நினைத்தேன்!......நான் ஒன்றும் வாடவில்லையே!

ராமையன் : இதோ பார் தங்கம்! மின்மினிப் பூச்சியினால் இருளை விழுங்கிவிட முடியாது. நீ சிரித்துப் பேசுவதனால், உன் மனதிற்குள் கனியும் துன்பத்தை மறைத்து விடலாம் என்றெண்ணாதே.

தங்கம் : இல்லை! நீங்கள் தான் ஏதேதோ எண்ணுகிறீர்கள். எனக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லை. அவ்வளவுதான்!

ராமையன் : கர்ப்பிணிகளுக்கு உடலில் சிறிது கோளாறுகள் உண்டாவது இயற்கைதான். ஆனால் - அதற்காகவா முகம் சோருவது? பிறக்கப் போகும் குழந்தையின் நினைவினால் நீ மகிழ்ச்சியல்லவா அடைய வேண்டும்!

தங்கம் : (நாணத்துடன்) இப்படியெல்லாம் என்னைக் கேலி செய்தால் - அப்புறம்!......

ராமையன் : கேலியில்லை தங்கம்; உண்மைதான்! இன்னும் சில மாதங்களில் எனக்குக் கிடைக்கப் போகும் அந்தக் குழந்தையின் முகத்தைக் காண்பதற்காக என் விழிகள் எவ்வளவு ஆவலாய்த் துடிக்கின்றன தெரியுமா?......ஆகா! தங்கம், உனக்கு மட்டும் அந்த ஆசை கிடையாதா?

தங்கம் : (வேடிக்கையாக) ஊ...ஹ-ம்! எனக்கு ஆசையே இல்லை (சிரிக்கிறாள்)

ராமையன் : பொய், சுத்தப் பொய்! ஆனால் இந்தப் பொய் சொல்லும் "கலை"யை உன் கண்களுக்கும் கற்றுக் கொடுக்க மறந்து விட்டாய் நீ! நெஞ்சுக்குள் குமுறும் ஆவல்-அதோ... உன் கரிய விழிகளில் மின்னுகின்றதே!

தங்கம் : (குறும்புடன்) இல்லவே இல்லை! உங்கள் கண்

களுக்குத்தான் இப்படிப் பொய் சொல்லக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள்!......

ராமையன்: தங்கம்! நீ எவ்வளவு தான் மறைக்க முயன்றாலும் சரி; உன் இதயத்திற்குள் ஒளிந்து கொண்டிருக்கும் துன்பத்திற்குக் காரணம் எனக்குத் தெரியும். அதுதான் வறுமை!

தங்கம்: (அலட்சிய பாவத்தில்) ப்பூ! இதுதானா? அதற்காகக் கவலைப்படுவதற்கு நீங்கள் தான் இருக்கிறீர்களே! நானும் எதற்காக......

ராமையன்: தங்கம்! தரித்திரத்தை ஒழிப்பதற்கு ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன். இவ்வளவு நேரமும் அதைப் பற்றித் தான் பேசி முடிவு செய்தேன்...

தங்கம்: (ஆவலோடு) என்ன?

ராமையன்: வடக்கே-கல்கத்தாவில் ஒரு பெரிய தொழிற்சாலைக்கு ஏராளமாக ஆள் சேர்க்கிறார்கள். நானும் அங்கு போய் வேலை செய்யப் போகிறேன்......

தங்கம்: அடியம்மா! கல்கத்தாவுக்கா?......ரொம்ப தூரம் இருக்குமே!

ராமையன்: விலையுயர்ந்த முத்தை எடுக்கவேண்டுமானால், சமுத்திரத்திற்குள்தான் போக வேண்டும் தங்கம்! குடத்திலுள்ள நீருக்குள் தேடினால் கிடைக்காது!...சாப்பாட்டு செலவெல்லாம் போக மாதம் ஐம்பது ரூபாய் - இங்கே யார் தருவார்கள்?

தங்கம்: (துயரத்துடன்) அதெல்லாம் சரிதான். இங்கு நான் தனியாக இருக்க வேண்டுமே.

ராமையன்: வேண்டாம்! நான் திரும்பி வரும் வரையில் உன் தாயார் வீட்டில் போய் இரு. அடிக்கடி பணம் அனுப்புகிறேன், தங்கம்! நீ சந்தோஷமாக இருக்க வேண்டும்.

தங்கம்: அதெப்படி முடியும்? இந்த நிலைமையில் நான் தங்களைப் பிரிந்து.. (குரல் கம்முகிறது)

ராமையன்: அடி பைத்தியமே! நான்தான் உன் உள்ளத்திலேயே குடியிருக்கிறேனே... பிரிவது எங்கே! தமிழிலிருந்து இனிமை பிரியுமா?

தங்கம்: திடீரென்று இப்படி முடிவு செய்து விட்டீர்களே!... (நாணத்துடன்) உங்கள் குழந்தை பிறந்தவுடன் நீங்கள் பார்க்க வேண்டாமா?

ராமையன்: அதைப் பார்க்காமல் என் கண்கள் வேறெதற்கு? நல்ல கதை! அந்த நிமிஷமே இங்கு பறந்து வர மாட்டேனா! தங்கம்...உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். மறந்துவிடாதே கண்ணே!

காட்சி 2.

இடம்:—கல்கத்தா தொழிற்சாலை.

[ராமையனும் மற்றும் சில தொழிலாளர்களும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

ஒரு தொழிலாளி: என்ன மிஸ்டர் ராமையன்! எங்கள் கல்கத்தாவை உங்களுக்குப் பிடிக்கவில்லையோ? வருத்தமாக இருககிறீர்களே.

ராமையன்: (துயரத்துடன்) விதி விபரீதமாக விளையாடும் போது வருத்தம் கூடப் படாமல் நான் என்ன செய்வது?

மற்ளெருருவன் : குஷியா இரு பிரதர். வேலை செய்து வயிறு வளர்க்கப் பிறந்த நாமெல்லாம் எங்கே இருந்தாலென்ன ? கவலைப் படாதே ராமு !

ராமையன் : வயிற்றுக்காக உழைப்பதோடு மட்டும் இருந்தால் தேவலையே! வாழ்க்கையையே அடகு வைக்கவும் வேண்டிருக்கிறதய்யா. இதை எப்படிச் சகிப்பது ?

ஒருவன் : அப்படீன்னு அர்த்தம் ?

ராமையன் : யாருக்காக இங்கு நான் பணம் சம்பாதிக்க வந்தேனே, அந்த உயிர் அங்கே ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில், உலக மக்களின் தேவைக்காக நான் இங்கே கட்டாயமாய் உழைக்க வேண்டியிருக்கிறது !......

மற்றவன் : புரியாமல் பேசுகிறீர்களே ! விஷயத்தை விளங்கும்படியா சொல்லு மிஸ்டர்.

ராமையன் : காலையில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. என் மனைவி தங்கம் பிரசவ வேதனைப் படுகிருளாம். நிலைமை மிகவும் கடுமையாய் இருப்பதாக எழுதியிருக்கிருர்கள்......

ஒருவன் : (அனுதாபத்துடன்) ச்சு ; ச்சு! அப்படியா சங்கதி. இரண்டு வாரம் லீவு வாங்கிக் கொண்டு போய்ப் பாருங்களேன் !

ராமையன் : (வெறுப்பாக நகைத்து) உங்களுக்கும் எனக்கும் உள்ள இந்த மனித உளளம் நமது மேலதிகாரிகளுக்குக் கிடையாதே; என்ன செய்வது! இவ்வளவு நேரம் கெஞ்சிப் பார்த்து விட்டேன்; ஒரு வாரம் லீவு கூடக் கிடையாதென்று சொல்லி விட்டார்கள்!

மற்றவன் : மனைவி ஆபத்தான நிலைமையில் இருப்பதைச் சொல்லிக் கேட்டீர்களா? ஏன் லீவு கிடையாதாம் ?

ராமையன் : சொன்னேன். ஆனால் என் மனைவியின் ஆபத்தைப் பற்றி இந்தத் தொழிற்சாலை நிபந்தனைகளில் எதுவும் எழுதப்படவில்லையாம்! "வேலையில் சேர்ந்து ஆறு மாதத்திற்குப் பிறகே லீவு அனுமதிக்கப்படும்" என்று தான் விதிக்கப்பட்டிருக்கிறதாம் !

ஒருவன் : (மனம் புழுங்கி) நல்ல நிபந்தனையப்பா இது ! தப்பித்தவறி ரிப்பேராகி விட்டால், யந்திரத்துக்குக் கூட கணக்கில்லாமல் லீவு கிடைத்து விடுகிறதே !

ராமையன் : ஆம்: ஆனால் மனிதன் எப்படி ரிப்பேராக முடியும்?

(தூரத்தில் மானேஜர் வருகிருர்.)

மற்றவன்: சரி, மிஸ்டர் ராமு. அதோ பூட்ஸ் சப்தம் கேட்கிறது. மானேஜர் வந்து பார்த்தால் சீறி விழுவான். போய் வேலையைப் பார்ப்போம்.

(எல்லோரும் பிரிந்து போய் வேலை செய்கின்றனர். மனம் குழம்பிய ராமு, கை தவறுதலாக ஒரு யந்திரத்தைக் கையாண்டு விபத்துக்குள்ளாகிருன்.)

ராமையன் : ஹா !...அம்மா ! (வேதனையால் அலறல்)

(திடுதிடுவென்று எல்லோரும் ஓடி வருகின்றனர்)

ஒருவன் : அடடா ! நம்ம ராமையன் தான் விபத்தில் சிக்கிக் கொண்டார் !

வேறொருவன்: காலையி லிருந்தே அவருக்கு மனம் சரி யில்லை. அந்தக் கலக்கத்தினால் தான், தடுமாறிப் போய் என் னமோ செய்து விட்டார் போலிருக்கு!

மற்றொருவன்: நல்ல வேளை! உயிருக்கு ஆபத்து இல்லை. முகத்தில்தான் ஆவி பொசுக்கி விட்டது.

ஓர் அதிகாரி: சரி, சரி! ஆஸ் பத்திரிக்குக் கொண்டு போங் கள்! இங்கே கலாட்டா வேண் டாம். எல்லோரும் போய் வேலை யைப் பாருங்கள்!

ராமையன்: ஐயோ! அப்பா! கண் எரிச்சல் தாங்க முடிய லியே! ஆ! அம்மா!

அதிகாரி: டேய், டிரைவர்! இந்த ராமையனைக் கொண்டு போய் நம்ம ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணு!

காட்சி 3.

இடம்:—(தங்கத்தின் தாய் வீடு)

[தங்கமும் சில சிநேகிதிகளும் பேசிக் கொண்டிருக்கின்றனர். தங்கத்தின் குழந்தை கத்து கிறது.]

கமலா: அடி தங்கம், உன் மகன் குரலைக் கேட்டாயா? எட்டு வீதிக்குக் கேட்கும் போலிருக்கிறது. அடேயப்பா! இவன் ஒரு சங்கீத வித்வா னாகப் போகிறானடி!

தங்கம்: (சிரித்து) ஆமாம், இவனுடைய சங்கீதத்துக்கு இவன் அப்பா வந்துதான் முது கிலே தாளம் போடணும்!

மங்களம்: அடியே, இவன் அப்பாவைப் போலவே இருக் கிறானடி. இதோ பார், கண் களை! குண்டு குண்டா...ரசமணி மாதிரி......

கமலா: அப்படிச் சொல் லாதே மங்களம். தங்கம் வருத் தப்படுவாள்! அவள் உயிரையே பணயம் வைத்துப் பெற் றெடுத்த தங்கக் கட்டியடி இவன!

தங்கம்: (பெருமையுடன்) இப்போ இவன் அப்பா மட்டும் இங்கேயிருந்தால், பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போவாரடி. ஹூம்! 'அவர்' அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாரோ!

மங்களம்: ஏண்டி தங்கம்! குழந்தை பிறந்த செய்தியை 'அவருக்கு'த் தெரிவித்து விட் டாயோ?

கமலா: (குறும்புச் சிரிப் புடன்) ஓ! நேற்றே தந்தி கொடுத்தாய் விட்டதே! உழவ னுக்குத் தானேடி முதல் மரக் கால் நெல்!

தங்கம்: அநேகமாக அவர் நாளைக்கே இங்கு வந்து விடு வார். அவருக்கு எவ்வளவு ஆசை தெரியுமாடி மங்களம்?

மங்களம்: (கேலியாக) அதென்னமோம்மா! உன் புருஷ னுடைய ஆசையும் வெறுப்பும் உனக்குத்தான் தெரியும்! வேப் பம் பழத்தின் ருசி, வெள்ளைக் கொக்குக்குத் தெரியுமா? (சிரிப்பு)

தங்கம்: பார்த்தியாடி கமலா! நான் கொஞ்சம் கறுப்பாக இருக்கிறேனம். அதற்காக மங் களம் என்னைக் காக்கையென்று ஜாடை சொல்லுகிறாள்!

கமலா: (நகைத்து) அவள் என்ன சொன்னால்தான் என் னடி தங்கம். உன் புருஷ

னுடைய கண்களுக்கு மட்டும் நீ தங்கமாகவே மின்னுகிறாய். பிறகு ஏன் கவலை?

காட்சி 4.

இடம் :—கல்கத்தா ஆஸ்பத்திரி.

[ராமையன் கட்டிலில் கிடக்கிறான். டாக்டர் வருகிறார்.]

ராமையன் : டாக்டர் சார்! இன்றைக்காவது என் கண்களின் கட்டை அவிழ்த்து விடுங்கள் சார்! வெளிச்சத்தைப் பார்த்து எத்தனை நாட்களாகி விட்டன! என் வாழ்க்கையே இருண்டு விட்டது போலிருக்கிறது டாக்டர்.

டாக்டர் : உங்கள் 'பாண்டேஜை' இதோ அவிழ்த்து விடத்தான் போகிறேன். ஆனால்...ஆனால் மிஸ்டர் ராமு! தைரியமாக இருங்கள்...

ராமையன் : (பதைபதைப்புடன்) ஏன் டாக்டர்? ஆனால் என்ன? எதற்காகத் தைரியம்? சொல்லுங்கள் ஸார்!

டாக்டர் : (அமைதியாக ஒன்றுமில்லை. மனம் தளராதீர்கள்.' இன்னும் கொஞ்ச காலத்திற்கு......உங்கள் கண்கள்...... சரியாகத் தெரியாது! கொஞ்சம் தான்......

ராமையன் : (துக்கத்துடன்) ஐயோ, டாக்டர்! என் கண்கள் அவிந்து விட்டனவா? இனி நான் குருடனா? எங்கே...(அவசரப்பட்டுக் கண்ணின் கட்டுகளைப் பிய்த்தெறிகிறான்.)

டாக்டர் : பொறு, பொறு! நானே அவிழ்த்து விடுகிறேன். கட்டை அலங்கோலமாக அறுத்தெறியாதே! இன்னும் ஏதாவது தொல்லை...

ராமையன் : டாக்டர், கட்டைக் களைந்து விட்டேன். ஆனால் ஒன்றும் தெரியவில்லையே! ஒரே இருளாக இருக்கிறதே! நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் ஸார்? ஐயோ, என் பார்வை போய்விட்டதே! (அழுகிறான்)

டாக்டர் : வருத்தப் படாதே மிஸ்டர். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகச் சரியாகி விடும்.

ராமையன் : (ஆத்திரமும் அழுகையும் குமுற) என்ன சரியாகி விடும்? குருடனாக இருந்து பழகிப் போய் விடும் என்கிறீர்களா? டாக்டர்! இந்த உலகமே அழிந்து போய் விட்டதா? ஐயோ, எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே! பயமாயிருக்கிறதே!

(கையில் தந்திக் காகிதத்துடன் ஒரு நர்ஸ் வருகிறாள்.)

நர்ஸ் : டாக்டர் ஸார்! மிஸ்டர் ராமையன் என்பவருக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது.

டாக்டர் : ஆம், இவருக்குத்தான்! இங்கே கொடு அதை! (நர்ஸ் கொடுக்கிறாள்)

ராமையன் : (துடிப்புடன்) யார், எனக்கா தந்தி? எங்கே? என்னிடம் கொடுங்கள!

(தந்திக் கவரை வாங்கி ஆவலோடு பிரிக்கிறான். காகிதம் சடசடக்கிறது.)

ராமையன் : இதில் என்ன எழுதியிருக்கிறது? தெரிய

[58-ம் பக்கம் பார்க்க]

(45-ம் பக்கத் தொடர்ச்சி)

கையை மண்ணாக்கி விடாதீர்கள். அழுகிப்போன இந்த சமுதாயம் உங்கள் ஆசை வெறிமேல் கொண்ட ஆத்திரத்தால் பழி தீர்க்காமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்''

என்றுவேண்டிக்கொண்டேன். இன்னும் ஏதேதோ சொன்னேன். அவற்றை யெல்லாம் செல்வநாயகமே உன்னிடம் சொல்வார். உன் வாயிலாகத் தமிழ்ப் பெண்கட்கு - சூதுவாது அறியாத அன்புச் செல்வங்கட்கு நான் சொல்ல விரும்புவது இதுதான்:

சமிழ் நாட்டுப் பெண்கள் நல்லவர்கள்; அதனால் தான் அழிந்து போகிறார்கள். தமிழ்ப் பெண்கள் இரக்கமும் நன்றியும் நிறைந்தவர்கள்; அதனால் தான் ஏமாற்றப்படுகிறார்கள். தமிழ்ப் பெண்கள் கற்பை உயிராக மதிக்கிறவர்கள்; அதனால்தான் கொடுமைக்கு ஆளாகிறார்கள். தமிழ்ப் பெண்கள் சூதுவாது இல்லாத சகிப்புத் தன்மையுடையவர்கள்; அதனால்தான் சூறையாடப்படுகிறார்கள்.

இதை மறவாதே! உலகத்தில் கற்பனையை சுவைத்து - ஆனால், காரியத்தில் கண்ணாக இருந்து; கற்பைப் பாராட்டி ஆனால் கற்போடு வறுமையற்ற வாழ்வை விரும்பும் சாதிகளும் இனங்களும் முன்னேறுவதை உலகெங்கும் காண்கிறோம். ஆனால், பாவம்! அடுப்பங்கரையில் வாழும் தமிழ்ப் பெண்கட்கு இதெல்லாம் தெரியாது. நீயும் அதற்கு விதிவிலக்கு அல்ல. அதனால்தான் உனக்கு நான் கூறும் அறிவுரையில் தேனைச் சொரியாமல் தீயை வைக்கிறேன்.

நண்பர் செல்வநாயகத்தின் அன்பில் உனக்குச் சந்தேகம் இல்லாமல் இருக்கலாம். அவர் உன்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் இருக்கலாம். அந்த நம்பிக்கையும் - உறுதியும் மட்டும் போதுமா? தன்மானத்தோடு வாழ தற்காப்பு வேண்டாமா? நீயே எழுதுகிறாய்! எப்படியோ செய்தி வீட்டுக்குத் தெரிந்து விட்டது - அடிக்கிறார்கள் - திட்டுகிறார்கள்-குத்துகிறார்கள் - கொடுமை புரிகிறார்கள் என்று. இந்தத் துன்பம் எல்லாம் எனக்கும் புதிது அல்ல. பாழ்பட்ட என் வாழ்வின் பழங்கால வரலாறு. ஆனால், உனக்காக அவர் என்னென்ன துன்பங்களை ஏற்றார்? என்னென்ன கொடுமைகட்கு இரையானார்? தமிழ் நாட்டுப் பெண் தன்னை வதைத்துக் கொள்வதில் பெருமை காண்கிறாள். ஆனால், தன் துணைவனைப் பற்றிய ஆராய்ச்சியில் அவள் இறங்குவதில்லை. ''காதல் உலகில் ஆராய்ச்சியே கூடாது.'' என்கிறார்கள், உலகம் தெரியாத அல்லது தெரிந்தும், தீமைக்குத் துணை புரியும் கருத்துடைய சில எழுத்தாளர்கள். பொருளுக்குப் பெருமையும் தலைமையும் நல்கியிருக்கும் உலகில் ஒரு பெண் ஆணிடம் உள்ள எந்தக் குறையைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டாம். ஆனால் அந்தக் காதலனோடு கடைசி நாள் வரை கவலையின்றி வாழ்வதற்குரிய தற்காப்பையேனும் தேடிக் கொள்ளலாம் அல்லவா?

நீயே நினைத்துப் பார். செல்வ நாயகத்தை விட சொத்துடைய வரைத்தான் நான் மணந்தேன். நம்பி மணந்தேன். காதல் கொண்டு மணந்தேன். என் அருமைத் தங்கை கோமதி, "அக்கா! அவர் சொத்தில்......" என்று வாய் எடுத்தபோது சினங்கொண்டு அவளைச் சீறி னேன்; வெறுத்தேன். "காத லுக்கு முன் காசு நிற்குமா?" என்று கேட்டேன். உன் அன்பரிடம் தெளிவாகக் கேள். உன் பெயருக்கு அவ ருக்குரிய சொத்தை எல்லாம் எழுதி வைக்கட்டும். உனக்குக் குழந்தை பிறந்தால் அவர்கள் அடையட்டும். இல்லாவிட்டால் செல்வநாயகமும் அவர் உறவி னருமே அடையட்டும். இப்படி நீ விரும்புவதும் கேட்பதும் தவருன வழியல்ல. "சாதி மணம்' வேண்டும் என்பவர் களே பெண்ணுக்கு சொத் துரிமையின் அவசியத்தை வற் புறுத்தும் காலம் இது. அதுவும் "சீர்திருத்த மணம்" என்ற நெருப்பாற்றை நம்பிக்கை என்ற நூலிழைமேல் நடந்து சென்று கடக்க விரும்புகிறவர் கட்கு இந்தத் தற்காப்பு தேவை யில்லையா? உன்மீது செல்வ நாயகத்திற்கு உயிர் - உண்மை யான அன்பு இருக்குமானால் போதும். நீ உன் வாயால் இந்த வேண்டுகோளைக் கேட்ட மறு தினமே அவர் சட்டத்தின் துணைகொண்டு இதைச் சாதிக்க வேண்டும். இல்லை என்று மழுப்பினால் - விசாலாட்சி! என்னை நினைத்துக் கொள். கண் ணாடி போன்று இருந்த உடம் பைக் கருவேலமுள் போல் ஆக்கி கடைசி பயணத்திற்கு தயாராகும் என் காலடிச் சுவட் தத்தை நினைத்துக் கொள். விசாலாட்சி! காதலைக் கற்பனை யில் மட்டும் பார்க்காதே. காசு - பணம் - என்ற தற்காப்பின் வடிவத்திலும் பார். காசின் வல்லமையை உணராமல் கற் பனையில் - காதலில் இறங்குகிற வர்கள் ஆழம் அறியாமல் ஆற் றில் காலை இடுபவர்கள்.

விரிவாகக் கடிதம் எழுதிவிட் டேன். மணி 12 அடிக்கப் போகிறது. எங்கும் இருள், ஓரே பனி - எதிரே இருக்கும் சென்னைக் கடல் என்னைப் பழி வாங்கப் பாய்கிறது. ஆம். எழுந்து எழுந்து மோதி மோதி விழும் அந்த அலைகள் - பாம் பைப் போல் நாவைச் சுழற்றிச் சுழற்றிச் சீறும் அந்த அலை களில் - இந்த உலகில் ஆண் அரக்கர்களின் நெஞ்சில் நெளி யும் பாம்பும் பூரானும் வஞ்சனை யும் கொடுமையும் - காமமும் பணவெறியும் - என்னை நோக்கி எஞ்சியிருக்கும் இந்த எலும்புக் கூண்டையும் சுவை பார்க்கச் சீறுகிறது.

கடலே! கருணையற்ற கடலே! நல்லவரைப் பாராட்டாமல் - அல்லவரை அழிக்காமல் வேடிக்கை பார்க்கும் கோரக் கடலே! உனக்கு நான் இரை யாகமாட்டேன். உன் வயிற் றில் விழுந்தால் உன் அலைக் கரங்கள், அடைக்கலம் புகுந்த எனக்கே துரோகம் செய்து விடும். எங்கேனும் கரையோ ரத்தில் என்னைச் சேர்த்து விடும். ஆண் உலகம் பருந்துவ உலகம் என்னை மீண்டும் பழி வாங்கும். என் நெஞ்சை அறுத்தது போதாது என்று என் சதை

யைத் துண்டு துண்டாக்கிச் சோதனை செய்யும்.

விசாலாட்சி! கடிதம் நீண்டு விட்டது. நேரமாகிறது; புறப்பட வேண்டும். ஆமாம் - கடைசிப் பயணத்திற்கு காலை 5 மணிக்கெல்லாம் புறப்பட வேண்டும். மனித சஞ்சாரமற்ற அந்த மலைக் காட்டிற்குப் போக வேண்டும். பலபேர் சொல்லக் கேட்டிருக்கிறேன். தற்கொலை புரிந்து கொள்வது கோழைத்தனம் என்று. இருக்கலாம்; உலகில் வாழவேண்டும் என்ற ஆசை வைத்திருப்பவர்கட்கு 'தற்கொலை' முடியாத காரியம் தான். ஆனால் வாழவே ஆசை வைக்க வழியில்லாத என்னைப் போன்றவர்கட்கு......? இதோ ஒரு சிறு காகிதம் சுற்றிய கட்டி. எந்த மார்பின் உட்சட்டையால் என் காதல் கடிதங்களை ஒளித்து வைத்துப் பாதுகாத்தேனே அங்கு தான் நாளை. என்னைக் கொல்லும் நஞ்சையும் வைத்திருக்கிறேன். இச்சிறு கட்டி போதும் - போதும் - இது என் நாவில் பட்டால் போதும். நான் பிணமாவேன். ஆகா! அதை நினைத்து விட்டாலே எனக்குள்ளே ஒரு இன்பம் பொங்குகின்றது. ஆம் வாழ்வு கசந்து விட்டால் அப்புறம் இன்பம் தருவது சாவு ஒன்று தானே!

இப்படி ஒரு கடிதத்தை - கோர கற்பனையை நீ என்னிடமிருந்து எதிர்பார்த்திருக்க மாட்டாய். ஆனால் என் ஆருயிரே - இன்பம் சொல்லும் கதைகளை விட துன்பம் சொல்லும் வரலாறுகள் பயனுடையவை அல்லவா? துன்பம் என்ற ஆசிரியன் உலகம் என்ற பள்ளியில் இருபத்து ஏழு ஆண்டுகட்குப் பின் எனக்குக் கற்றுத் தந்த ஒரு வார்த்தையை - ஞான மொழியை - உனக்குச் சொல்லி விட்டுப் போகிறேன். **வாழ்க்கைக்காகக் காதலே தவிர காதலுக்காக வாழ்க்கை இல்லை** இந்த உயிரனைய - உன்னதமான உண்மையை அறியாதவர்கள் - அறிந்தும் புரியாதவர்கள் - புரிந்தும் பின்பற்ற முடியாதவர்கள் - அழிவுப் பாதாளத்தைத் நோக்கி ஆதிரத்தோடு நடப்பவர்கள் தான்.

அன்புள்ள விசாலாட்சி! மாணிக்கப் பெட்டிக்குப் பூட்டுத் தேவை; மாளிகை வாசலுக்குத் தாழ்ப்பாள் தேவை. மானமுடைய வாழ்க்கைக்கு தற்காப்புத் தேவை. இவை அழியாத உண்மைகள். விசாலாட்சி! போகிறேன்; போகிறேன். மார்பிலே நஞ்சை வைத்து - மனதிலே தெளிவை வைத்துப் போகிறேன்.

எந்தத் தாய் என் பிரிவைச் சகியாமல் பித்துப் பிடித்து அலைந்தாளோ - என் வாழ்வின் சீர்கேட்டைக் கேட்கவும் சகியாது மாண்டாளோ அவள் அன்புருவத்தைக் கடைசியாகக் கண்டு - கண்ணிலே ஒற்றி கையால் கும்பிட்டு - விடைபெற அவள் திரு உருவத்தை எலும்புக் கரங்களில் ஏந்திச் சொல்கிறேன். காதலர் உலகத்துக்கு எனது கடைசி வார்த்தை இது தான்:

காசு என்ற வேலி கட்டி காதல் என்ற பயிரை வளருங்கள். பொருள் என்ற மதிலை எழுப்பி அருள் என்ற நகரை அமையுங்கள்.

(மறுபக்கம் பார்க்க)

கவிதையில் காமரசம்

'விளக்கு'

இலக்கியத்தைச் சுவைப்பதற்காகப் பயிலும் குணம், படித்த மக்களிலேயும் பெரும்பாலோர்க்கு இல்லை.

கம்பன் இயற்றிய காவியத்தைப் படிக்கின்றனர். ஏன்? கவிதையின் வளத்தை - காவியத்தின் நயத்தை அனுபவிப்பதற்காகவா? இல்லை. முத்தி தரும் கடவுள் (ராமபிரான்) கதை என்பதற்காகத்தான்!

சேக்கிழாரின் பெரிய புராணத்தைப் படிப்போர் அவரது புதுமையைப் பாராட்டுவதில்லை. அறுபத்து மூன்று நாயன்மார்களின் பக்தியையே போற்றுகின்றனர்.

புரவலரின் கொடைக் குணத்தைப் போற்ற - புலவர்களின் புலமையைப் புகழ - வீரனின் வெற்றியை வாழ்த்த கவிதை ஒரு கருவியாக அமைந்தது சங்க காலத்தில். இடைக்காலப் புலவர்கள், இலக்கியக் கண் கொண்டு காவியத்தின் இனிமையைக் கண்டு களித்தார்களில்லை. பக்தி - மதக் கொள்கைகளைப் பரப்புவதற்கே பாட்டு இயற்றினர் இடைக் காலப் புலவர்கள். ஆனால், சங்க காலப் புலவர்கள் அப்படிச் செய்யவில்லை. செய்திருப்பின் தண்டியையும் காரிகையையும் தமிழகம் கண்டிருக்க முடியாது.

இலக்கியப் பூஞ்சோலையில் வண்ண வண்ணப் புதுமலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அவற்றில் தீஞ்சுவைத் தேன் சொட்டுகின்றது. என்றாலும் அம்மலர்களின் அழகை அனுபவிக்கிறோமேயன்றி, மலர் இதழ்களின் அடுக்கடுக்கான அமைப்பை அறியவில்லை. ஆம்! இலக்கியமென்றால் என்ன, என்பதை அறிந்து கொண்டிருக்கிறோம். ஆனால், இலக்கியம் எப்படி இருக்கிறது, என்பதைத் தெரிந்துகொண்டோமில்லை. இந்த அறியாமையின் எதிரொலிதான் கவிதையில் 'காமரசம்' இடம் பெறலாமா என்ற கேள்வி - இடம் பெற்ற முறையைப்பற்றி அர்த்தமற்ற - ஆபாசமான ஆராய்ச்சி!

'மாத்யூ ஆர்னல்ட்' என்பவர் கூறியுள்ளபடி, வாழ்க்கையின் விமர்சனம் தான் கவிதை. தனிப்பட்ட மனிதர்களின் - அம்மனிதர்கள் அடங்கிய சமுதாயத்தின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொகுப்புதான் கவிதை. வாழாத அல்லது வாழ்ந்தார்கள் என்று வரையறுத்துக் கூற முடியாத பாத்திரங்களைக் கொண்டு காவியம் இயற்றப்படலாம். என்றாலும் வாழ்ந்து மறைந்தவர்களின் - இன்று கண்ணெதிரே வாழ்பவர்களின் வாழ்க்கையில் விளையும் சிறப்புகளையும், சீர்கேடுகளையும் சேர்த்தே காவியம் செய்கிறான் கவிஞன். 'அகநானூறு' என்

அன்பே! நீண்ட கடிதம் எழுதிவிட்டேன். ஆனால், இது என் நினைவின் சின்னம். வஞ்சகர்கள் வாழாத உலகத்தைத் தேடிப்போகிறேன்.

அன்புள்ள,
ஆனந்தி

பது என்ன? காதலரைப் பிரிந்து துன்புற்ற காதலிகளின் உள்ளத்துடிப்பேயாகும். பிரிந்த காதலரை மீண்டும் பெற்ற போது காதலிகள் அடைந்த இன்பத்தைப் பற்றிய செய்திகளாகும் இந்தக் காதல் வழிப்பட்ட இன்ப துன்ப சம்பவங்களை கிராமங்களிலும் நகரங்களிலும் இன்றும் நாம் பார்க்கிறோம் அல்லவா?

பத்தினியைப் பிரிந்து - பரத்தையை அடைந்து இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி அனுபவிக்கும் இருபதாம் நூற்றாண்டின் 'கோவலர்'களின் பிரதிநிதிதான் இளங்கோ இயற்றிய காவியத்தின் தலைவன்.

உலகம் முழுவதையும் தங்கள் காலடிக் கீழ் வைத்து ஆள வேண்டுமென நினைத்த நெப்போலியன் - ஹிட்லர் வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான் சர்வலோக சக்ரவர்த்தியாக விரும்பிய ராவணன்.

ஆம்! தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையிலுள்ள சிறப்புகள் சீர்கேடுகள் இன்ப - துன்பங்கள் ஆகியவையே கவிஞனால் சித்தரிக்கப்படுகின்றன.

'காமரசம்' என்பது கவிஞனின் கற்பனைச் சரக்கன்று. மக்கள் வாழ்க்கையில் துய்க்கும் இன்பங்களில் ஒன்றாகும். காமரசம் கம்பராமாயணத்தில் மட்டுமா இடம் பெற்றிருக்கிறது. அதிவீரராமபாண்டியனுடைய நைடதத்திலும், ஜெயங்கொண்டாரின் 'கலிங்கத்துப்பரணி'யிலும் காமரசம் கலந்தே இருக்கின்றது.

தமிழ்க் காவியங்களில் மட்டுமல்ல; உலக இலக்கியங்கள் அனைத்திலும் அதற்கு உரிய இடங்களில் எல்லாம் காமரசம் காட்சி அளிக்கிறது ஆங்கில நாட்டுக் கம்பரான ஷேக்ஸ்பியர் **(Rape of lucrese)** என்ற பாடலில்,

> "ஆஹா! என்ன அழகு, என்ன அழகு! அந்த வனிதையின் நீலரேகைபடர்ந்தோடும் மார்புக் கோளங்கள் - தந்தச் சிற்பங்களன்றோ! இரண்டு 'உலகங்களை'யும் அணைத்துப் பிடித்து ஆளத்தான் இயலுமா! அவை காதலன் கையில் சுழன்று சுழன்று புரளுகின்ற தந்தக் கோளங்கள். அவனை வீரச் செயலுக்குத் தூண்டும் விந்தை உலகங்கள்......"

எனக் குறிப்பிட்டுள்ளார். காமரச ஆராய்ச்சியாளர்களே! ஷேக்ஸ்பியரைக் காமப்பித்தன் எனக் குற்றம் சாட்டி கைதிக் கூண்டில் ஏற்றலாமா? கூடாது. ஏற்றியதுண்டா? இல்லை. கலிங்கத்துப் பரணியைப் பார்ப்போம்:

போர்முனை புகுந்த காதலர் வாராமை குறித்து வருந்துகின்றனர் காதலிகள். அந்நிலையில் வீரப்போரில் வெற்றி கண்ட காதலர்கள் வீடு நோக்கி விரைகின்றனர். காதலிகளின் கவலை அறிந்த புலவர், வீரர்களின் வருகையை அறிவித்து கதவைத் திறக்கும்படி பாடுகிறார்.

...வருவார் கொழுநர்
எனத் திறந்தும்
அவர்தம் வரவு காணாது
வாரார் கொழுநர்
என அடைத்தும்

தாழும் மனமும் புறம்பாய
சாத்தும் கபாடம்
திறமினோ!

எனக் கதவைத் திறக்கும்படி வேண்டுகிற இடத்தில் ஜெயங் கொண்டார் தரும் காமரசத் தைப் பாருங்கள் :

" இத்துயின் மெய்த்துயி
லென்று
குறித்து இளைஞோர்
இது புலவிக்கு மருந்தென
மனவைத்தடியில்
கைத்தலம் வைத்தலுமே
பொய்த்துயில் நயனக்
கடை திறவா மடவீர்
கடைதிறமின்! திறமின்!

இந்த இடத்தில், புலவன் தனது காம உணர்ச்சியை வெளியிடு கிறனென்று கூறலாமா? அப் படி கூறுவது மடமை. உண் மைக் கருத்தென்ன? குறித்த காலத்தில் காதலர் வரவில்லையே என்று சீற்றங்கொண்ட காதலி யருக்கு அந்தச் சீற்றந் தணிய காதல் உணர்ச்சியை யும் தூண்டிவிடுகிறார். ஆம். காதலனுக்கும் காதலிக்கும் உணர்ச்சியூட்டி அவர்களை ஒன்றுபடுத்தும் தென்றலின் பிரதிநிதியாகி விடுகிறன் கவிஞன்!

* * *

பெண்ணொருத்தி குளித்து விட்டு, வெள்ளை நிற ஈரச் சேலை உடுத்திக்கொண்டு வருகிறள்! ஆடை நனைந்திருந்த காரணத் தால், அந்நங்கையின் அங்கங் கள் வெளியே தெரிகின்றன. எனவே, அவளைக் காணும் காத லன் கண்களுக்கு, ஆடை மறைந்து விடுகிறது; அங்கங்கள் மட்டுமே தெரிகின்றன.

"தூய்மை படைத்த அவள் உடலைக் கண்டான்" என் கிறன் ஒரு கவிஞன்.

இதோ பாருங்கள்! எவ்வளவு நாசூக்காக, காமரசம் வெளிப் படாமல் காதலைச் சித்தரிக் கிறன் கவிஞன் என்று கூற லாம். ஆனல், இது வெறுங் காட்சியாகுமே யொழிய உணர்ச்சி தரும் கவிதையா காது. காதலனும் காதலியும் உள்ளத்தோடு உள்ளம் ஒன்று பட்டுக் கூடுவதற்கு உணர்ச்சி மிகமிக அவசியம்.

கதவடைத்து உள்ளிருக்கும் காதலர்களை, தனது கவிதை என்னும் மந்திரக் கோலால், ஆட்டிப் படைக்கும் ஜெயங் கொண்டாரை நோக்கும்போது, மேற்சொன்ன கவிஞன், எங்கோ ஒரு மூலையில் ஒதுக்கப் பட்டு விடுகிறன். மலையேற நினைத்தவனுக்கு மலை உச்சி யின் மீது நிற்கும்பொழுதுதான் உள்ளம் குளிருகிறது. அது போல, ஜெயங்கொண்டான், சிங்கார ரசத்தின் சிகரத்தில் நின்று காட்சி யளிக்கிறன். அவனது பாடலைச் செவியுற்ற பெண்கள், தம்மை யறியாமலே சீற்றந் தணிந்து சிரித்திருக்க வேண்டுமல்லவா?

ஒரு பொருளை, அப்படியே கூருமல் அழகுபெறக் கூறுவது தான் கவிதை. 'மரக்கொம்பு ஒடிந்தது' என்று சொன்னலே போதும். என்றாலும், படிப் பறியா பாமரமக்கள் கூட அப்படிச் சொல்வதில்லை. "மட மடன்னு முறிஞ்சி சடார்னு விழுந்தது" என்று நயம்படக் கூறுவது, நம் நாட்டு வழக்கம்.

'வீரமாகப் பேசினான்' என்பது அப்பட்டமான உண்மை. ஆனால் அதையே, 'சிங்கம்போல் கர்ஜித்தான்' என்று சொல்வது அழகோடு கூடிய உண்மை!

மங்கையருக்கு அழகு தருவது கொங்கைகளேயாம். அவை அழகின் உறைவிடம் என்று கூட சொல்லலாம். ஒரு பெண்ணை வருணிக்கப் புகும் எழுத்தாளர்கள், "எடுப்பான தேகம், மனதை மயக்கும் மார்பு" என்று கூறுவது இயல்பு. 'மூவருலா' என்ற நூலில், இளம் பெண்ணின் வளர்ச்சியைப் பற்றிக் கூறுமிடத்தில்,

"ஞாலத்தை விட்டு தம்
தொழில் முடிக்கும்
வெங்காலத் தூதுவர்கள்
கூட்டியிருக்கும்
குவிமுலையோ?

எனப்பாடுகிறார் ஒட்டக்கூத்தர்.

"புடைபட இளமுலைவளர்
தொறும்
பொறையற்றி வுடைய
நிலை தளர்ந்து
இடைபடுவது பட
அருளுவீர்!"

என, பைந்தொடியைப் பாராட்டுகிறார் பரணி பாடிய ஜெயங்கொண்டார். ஆம்; மங்கையரின் கொங்கைகள் அழகின் உறைவிடம் மட்டுமன்று. எழில் தாங்கிய மலைகள்; இனிமையின் ஊற்று!

பெண்டிருக்கு, அழகு எப்படி முக்கியமோ, அப்படியே ஆடவருக்கு ஆண்மை (வீரம்) முக்கியமாகும். பெண்களுக்கு அழகின் உறைவிடம் கொங்கைகளாவது போல, ஆண்களுக்கு வீரத்தின் உறைவிடம் தோள்களாகும். போர்முனை போகவாய்ப்பற்ற காலங்களில், தங்கள் தினவெடுத்த தோள்களை கல்லோடு மோதி 'கடும் போர்' புரிவர் வீரர்கள் என்கின்றனர் சங்கப் புலவர்கள். கம்பர் இராமனின் புயவலிமை பற்றிக் கூறுமிடத்தில், "மேருமலை நாணும் தோளையுடையவன்" எனப் புகழ்கிறார். இராமனுடன் செய்த முதல் நாள் போரில் தோல்வியுற்ற இராவணன் சங்கரன் கொடுத்த வாளையும் பிறவற்றையும் போர்க்களத்தே போட்டுவிட்டதோடு, இமய மலையைப் பெயர்த்தெடுத்த, தனது தோளையும் (வலிமையையும்) போட்டுவிட்டு இல்லம் திரும்புவதாகக் கூறுகிறார் கம்பர். இராவணன் தோளைத் துண்டித்துப் போட்டு விட்டான் என்பது இதன் பொருளன்று. தோளோடு பொருந்தியிருந்த வலிமையை இழந்து திரும்பினான் என்பதே கம்பர் பாடலின் பொருள்.

போர்க்களத்தில் கண்ணீரை இடையறாது பெருக்கிக் கொண்டே, தனது காதலனின் உடலைத் தேடுகிறாள் ஒரு காதலி. தலைமட்டும் கிடைத்தது. உடல் கிடைக்கவில்லை. களத்தே கிடக்கும் பிணங்கள் அனைத்தையும் சோதித்து விட்டாள். தான் கையாரத் தழுவி மகிழ்ந்த, அந்த உடலைக் காணவில்லை. உள்ளத்தில் வேதனை மிகுந்தவளாய்,

"போர் முகத்தில் எவர் வரினும்
புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே?"

என, வீரங்கலந்த வேதனை

(61-ம் பக்கம் பார்க்க)

(50-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமையன் : இதில் என்ன எழுதியிருக்கிறது? தெரியவில்லையே. என் தங்கம் இறந்து விட்டாளா? என் கண்கள் தொலைந்ததைப் போல் அவளும் போய் விட்டாளா? ஐயோ, டாக்டர்! நீங்களாவது படித்துச் சொல்லுங்களேன்.

(டாக்டர் வாங்கிப் படிக்கிறார்)

டாக்டர் : மிஸ்டர் ராமு! சந்தோஷச் செய்தி தான்! அங்கே உனக்கு மகன் பிறந்திருக்கிறானாம். அழகான குழந்தை என்று எழுதியிருக்கிறது.

ராமையன் :—(பரவசத்துடன்) நிஜந்தானா டாக்டர்? ஆண் குழந்தையா? அழகான குழந்தையா? ஆஹா! என் மகன்... ஆனால் - டாக்டர்! அவனை இனி நான் எப்படிப் பார்ப்பேன்? ஐயோ! இந்தச் சமயத்தில் தானா என் கண்கள் இப்படி...... அட பாழும் விதியே! (தலையில் அடித்துக் கொள்ளுகிறான்.)

டாக்டர் : கவலைப்படாதே ராமு, கண்களை இழந்ததற்கு ஈடாக, தொழிற்சாலை நிர்வாகிகள் உமக்கு நாலாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். நீர் நாளைக்கே புறப்பட்டு ஊருக்குப் போகலாம்.

ராமையன் : என் கண்களுக்கு விலை நாலாயிரம் ரூபாய்!...... டாக்டர்! நான் பணம் சம்பாதிப்பதற்காகத் தான் இங்கு வந்தேன். அது இப்பொழுது கிடைக்கிறது! ஆனால் என் பார்வை? டாக்டர்! என் குருட்டு விழிகளால் உலகத்தைப் பார்ப்பதற்கு, இந்தப் பணம் கண்ணாடியாக உதவுமா? அப்படி ஏதாவது வழியிருந்தால் சொல்லுங்களேன்! என் மகனை ஒரே ஒரு தடவை நான் பார்த்தாலும் போதும்.........

டாக்டர் : (மெல்ல நகைத்து) ஹும்! நல்ல கேள்வி. பணம் கண்களாக உதவுவதா? மிஸ்டர் ராமு! கள் எங்காவது அமிர்தமாக மாறியதுண்டா? பூமியில் சிரிக்கும் முல்லை மலர், வானத்தின் நட்சத்திரமாகியதென்று எப்பொழுதாவது கேள்விப் பட்டதுண்டா? வீண் கனவு காணாதீர்கள் ராமு! அதனால் கவலைதான் அதிகமாகும்...

ராமையன் : (ஆழ்ந்த சிந்தனையுடன்) ஆமாம் டாக்டர்! முல்லை மலரை விட நட்சத்திரம் அற்புதமானது தான்! ஆயினும் முல்லை மலர் தன் மணத்தினால் மனிதனை மயக்கி விடுகிறதே!... அடடா! அந்தக் காட்சியையெல்லாம் இனி நான் காண முடியாதே! அதைவிட அழகான என் மகனின் முகத்தை நான் பார்க்க முடியாதே! ஒரு தடவை கூட அதை நான் காண முடியாமல் போய் விட்டதே!.... ஐயோ, என் கண்கள்!...

காட்சி 5.

இடம் :—தங்கத்தின் வீடு.

[தங்கத்தின் குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கிறது. அதனிடம் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள் தங்கம்.]

தங்கம் : அட என் கண்ணே! தூங்கும் போதே மெதுவாகச் சிரிக்கிறாயே - ஏனடா? உன் அப்பா வந்து கனவில் உனக்கு விளையாட்டுக் காட்டுகிறாரா? கன்னம் குழியச் சிரிக்காதேடா

ராஜா - கண் திருஷ்டி பட்டு விடும்! (கொஞ்சல்)

(வாசலில் வண்டி வந்து நிற்கிறது. குருடன் ராமையன் தட்டித் தடவிக் கொண்டு இறங்குகிறான்)

கமலா: (ஓடிவந்து) தங்கம், தங்கம்! உன் வீட்டுக்காரர் வந்து விட்டாரடி!

தங்கம்: (குழந்தையிடம்) அடே, உன் அப்பா வந்து விட்டார்......வாடா கண்ணு!

(தூங்கிய குழந்தையைத் தூக்கிக் கொண்டு வாசலுக்கு மகிழ்ச்சியுடன் ஓடுகிறாள். குழந்தை சத்தம் போடுகிறது)

தங்கம்: (திகைப்புடன்) என்ன இது! ஏன் இப்படி தட்டித் தடவிக் கொண்டு நடக்கிறீர்களே! என்ன உங்களுக்கு? (குழந்தை பலமாக அழுகிறது)

ராமையன்: (துக்கம் பொங்க) தங்கம்! என் கண்கள் தொலைந்துவிட்டன. உலகம் என் முன்னால் ஒளிந்து விட்டது! தங்கம்! எங்கே குழந்தையை என்னிடம் கொடு. எங்கே என் கண்மணி? (ஆவலோடு குழந்தையை வாங்கி அணைத்துக் கொள்கிறான்)

தங்கம்: ஐயோ, அம்மாடி! உங்கள் கண்களுக்கு என்ன? ஏன்; என்ன விதி இது!

(ராமையனின் காலடியில் விழுந்து கதறுகிறாள்.)

ராமையன்: அழாதே தங்கம்! என் கால்களை விட்டுவிடு; எழுந்திரு! வீணாக அழாதே! இத்தனை நாளும் அழுது அழுது என் குருட்டு விழிகளிலும் நீர் வரண்டு விட்டது. பயனில்லை தங்கம் எழுந்திரு. (குழந்தை கத்துகிறது. தங்கம் விம்முகிறாள்.)

ராமையன்: இதோ பார்! இனி நான் குருடனல்ல - இதோ இவனும் நீயும் தான் எனக்கு இரு கண்கள்! தங்கம்! எங்கே, சொல்! என் ராஜா அழகாக இருக்கிறானா? சிவப்பா கருப்பா? இதென்ன கன்னமா? கொழு கொழுவென்று இருக்கிறதே!... (ஆசையோடு தடவிப் பார்க்கிறான்)

தங்கம்: (துக்கமும் மகிழ்ச்சியும் ஒலிக்க) ஐயோ! அப்படிக் கையால் தடவாதீர்கள்! அவன் கண்களில் விரல் பட்டுவிடப் போகிறது!

—திரை—

ஞானமொழிகள்

- புகழ்பெற வேண்டுமென்ற எண்ணமொன்றுதான், நமது வாழ்க்கையில் எல்லாவிதமான கஷ்டங்களையும் சகித்துக் கொள்ளக்கூடிய ஓர் ஆற்றலை நமக்கு அளிக்கிறது.
- முதலில் தேகாரோக்கியம். அடுத்தது அழகு. அதற்கடுத்தது நல்லவழியில் சம்பாதித்த பணம். கடைசியானது நண்பர்களிடையே காலங்கழித்தல்.
- அழியாப் புகழை நாடுகிறவன், உயிரைத் திரணமாக மதிக்க வேண்டும்.
- சிறிய விஷயங்களில் திருப்தியடையாதவன், எதிலுமே திருப்தியடைய முடியாது.

இந்தியாவின் பெருமையிலே - தமிழகத்தின் முதன்மை

★

இந்தியாவில், பிரிட்டிஷாருக்கு எதிராக முதன் முதல் சுதந்தரப் போர் துவங்கிய இடம், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாஞ்சாலங்குறிச்சியாகும்-துவக்கி வைத்தவன் வீர பாண்டியக் கட்டபொம்மன்.

●

இந்தியாவின் பழங்குடி மக்கள் தமிழர்களே.

●

இந்திய மொழிகளிலேயே மிக மிகத் தொன்மைவாய்ந்தது தமிழ் மொழி.

●

காந்தியடிகள் தலைமை தாங்கி நடத்திய தென்னாப்பிரிக்கா இந்தியரின் உரிமைப் போரிலே முதன் முதல் உயிர்ப்பலியானவர்கள் வள்ளியம்மை, நாராயணசாமி என்ற தமிழர்கள்.

●

இந்தியாவில் முதன் முதல் நடந்த அரசியல் கலப்புடைய வேலை நிறுத்தம் 1908-ல் தூத்துக்குடியில் வ. உ. சி. தலைமை தாங்கி நடத்திய ஹார்வி மில் வேலை நிறுத்தம்.

●

இந்தியாவின் முதல் முதல் துவக்கப்பட்ட தொழிற் சங்கம், சென்னை தொழிலாளர் சங்கம்.

●

இந்தியாவில் தோன்றிய பேரரசுகள் எதற்கும் கட்டுப்படாமல் தனியரசு செலுத்திய மொழி வழி நாடு, தமிழ்நாடே.

ஜாவா, சுமத்ரா முதலிய கீழைத் தேசங்களில் முதன் முதல் குடியேறிய இந்தியர்கள், தமிழ் மக்களே.

●

ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட முதல் இந்திய இலக்கியம், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்.

●

இந்தியாவில் எடுக்கப்படும் தங்கத்தில், தமிழ்ப் பிரதேசமாகிய கோலாரில் கிடைக்கும் தங்கம் மட்டும் 95 சத விகிதம்.

●

பிரிட்டிஷ் இந்தியாவில், முதன் முதலில் கப்பல் கம்பெனி துவங்கிய இந்தியர், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார்.

●

முதல் இந்திய கவர்னர்-ஜெனரலாக வந்தவர், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

●

இந்தியாவில் மிகப் பெரிய நீர்த்தேக்கம், மேட்டூர் அணைக்கட்டு - இதுவே உலகில் இரண்டாவது பெரிய அணைக்கட்டு.

●

இந்தியாவில் முதல்தரமான அழகு வாய்ந்தது, 'சென்னைக் கடற்கரை.

●

இந்திய வரலாற்றிலேயே, குடிப் பழக்கத்தை சட்ட விரோதமாக்கிய முதல் மாகாணம், சென்னை.

(57-ம் பக்கத் தொடர்ச்சி)

யோடு கேட்கின்றாள். ஆம்; தான் கட்டித் தழுவிய மார்பைக் காணோமே, என்று அவள் மனம் வருந்தவில்லை. தொட்டுத் தொழுத திருவடிகளைக் காணோமே என துக்கப் படவில்லை. தான் காதலிக்கக் காரணமாயிருந்த வீரத் தோள்களைக் காணோமே என்று தான் வேதனைப் படுகின்றாள்.

முடிவாக பெண்ணின் அழகு வாய்ந்த மார்புக்கு ஆணின் ஆற்றல் வாய்ந்த தோளை உவமை காட்டும் கம்பன் பாடல் ஒன்றைப் பார்ப்போம். கமலப் பூ ஒன்று கண்கொள்ளாக் காட்சியாக மலர்ந்திருக்கிறது. அப்பூவின்மீது சக்கரவாகப் பறவை இரண்டு அமர்ந்திருக்கின்றன.

சீதை நினைவாக உள்ள ராமனின் கண்களுக்கு அந்தப் பறவைகள் சீதையின் கொங்கைகளைப் போன்று காட்சியளிக்கின்றனவாம்.

அப்படியே ராமனின் நினைவாகவே உள்ள சீதை, மணற்குன்றுகளைக் காண்கின்றாள். அந்தக் குன்றுகள் ராமனின் தோள்களைப் போன்று தோற்றமளிக்கின்றன.

"நாளங்கொள் நளினப்பள்ளி
நயனங்கள் அனைய நேமி
வாளங்கள் உறைவ கண்டு
மங்கை தன் கொங்கை
நோக்க
நீளங் கொள் சிலையோன்
மற்றை
நேரிழை நெடிய நம்பி
தோளின் கண் மனம் வைத்
தன்ன
சுடர்மணித் தடங்கள்
கண்டாள்

"பார்த்தீர்களா! கம்பனின் காமாந்திர நோயை! காதலியைக் காணும் காகுத்தனுக்கு அவளது கரிய கூந்தல், வில்லொத்த புருவங்கள், வேலொத்த விழிகள், அமுதொத்த மொழிகள் நினைவுக்கு வரவோ, அதற்கு உவமானப் பொருள்கள் தேடவோ இல்லை. ஆனால் தெரிந்தது தெரிவையின் கொங்கைகளே." கவியரசனின் காம உணர்ச்சியின் வெளியீடு என்று சொல்லுவது. இலக்கியத்திற்கான இலக்கணம் தெரிந்தவர்கள் ஒருபோதும் அவ்விதம் சொல்லமாட்டார்கள். மேற்சொன்ன கவிதையின் நயம் இதுதான்:

காதலியை நினைக்கும் ராமனுக்கு அவளது பேரழகின் உறைவிடமான கொங்கைகள் நினைவுக்கு வருகின்றன. காதலனை நினைக்கும் சீதைக்கு அவனது பேராற்றலின் சின்னங்களான தோள்கள் நினைவுக்கு வருகின்றன. ஆம், கொங்கை என்பது உணர்ச்சியை எழுப்பும் சின்னமாக மட்டுமே தெரிகிறது, சிற்றின்ப ரசிகர்களுக்கு. ஆனால் அழகின் உறைவிடமாக படுகிறது, காவியப் புலவனுக்கு.

கவிதையில் காமரசம் வெளிப்படலாமா என்ற கேள்வி, கேட்போரின் இலக்கிய ஞானத்தைப் புலப்படுத்துவதல்ல. கவிதையில் காமரசம் இடம் பெறத்தான் செய்யும்-இடம் பெறத்தான் வேண்டும். இன்றேல், இலக்கியம் வாழ்க்கையின் முழு விமர்சனமாக இருக்க முடியாது.

சிலம்பு காட்டும் செந்நெறி

—ம. பொ. சி.

மனித சமுதாயத்தின் வரலாற்றை ஆராய்ந்தால் புரட்சிகளின் வழியாகத்தான் கவிஞர்கள் அறிமுகமாகின்றனர்—காவியங்கள் தோன்றுகின்றன என்பதை அறியலாம்.

இராம - இராவண யுத்தந்தான் வால்மீகியையும், கம்பரையும் அறிமுகப் படுத்தியது.

பாண்டவர்-கௌரவர் யுத்தந்தான், வியாசரையும் வில்லியையும் தோற்றுவித்தது.

புதல்வனைப் போருக்கு அனுப்பிய வீரத்தாயின் மூலந்தான் புறநானூறு புகழ் பெற்று வருகிறது.

இந்திய விடுதலைப் போர்தான், கவியரசர் பாரதியாரை பெற்றுக் கொடுத்தது. அப்படியே, கண்ணகி மதுரையில் நிகழ்த்திய மறப் புரட்சிதான் இளங்கோவடிகளைப் புலவர் உலகம் போற்றச் செய்தது.

கண்ணகி தேவியாரின் இரு காற் சிலம்புகளை வைத்துக் கொண்டு ஒரு அற்புதமான அரசியல் புரட்சியை அறிமுகப் படுத்துகிறார் இளங்கோவடிகள்.

கோவலன், விற்பதற்காகக் கொண்டு சென்ற ஒரு சிலம்பு, கொடுங்கோன்மை இன்னதெனப் புலப்படுத்துகிறது. கண்ணகி வசம் எஞ்சி இருந்த மற்றொரு சிலம்பு, அக் கொடுங் கோன்மையை செங்கோன்மையாக மாற்றுகிறது!

மற்றொருவகையில் பார்த்தால், ஒரு சிலம்பு கோவலனைக் கள்வனாக ஆக்குகிறது; மற்றொரு சிலம்பு அவன் குற்றமற்றவன் என்பதைப் புலப்படுத்த சாட்சி கூறுகிறது.

தவறால் விளைந்த நன்மை

வாணிபத்தை மறந்து, வாய்த்த மனைவியைத் துறந்து மாதவியின் காதலிலேயே கட்டுண்டு கிடந்த காரணத்தால், கோவலன் கைப் பொருளையிழந்து வறியனாகின்றான். மாதவியின் மையல் தீர்ந்து, கண்ணகியாரின் இல்லமடைந்த போது, தனக்குற்ற வறுமையை அவளிடம் கூறி வருந்துகின்றான். காதலனின் கவலைபுணர்ந்த கற்பரசியார், "சிலம்புள கொள்ளுங்கள்" எனக் கூறுகின்றாள். ஆம், தனது காற்சிலம்புகள் இரண்டையும் விற்று அவற்றால் வரும் பொருளைக் கொண்டு கோவலன் வாணிபம் செய்து வாழவேண்டுமென்பதே கண்ணகியின் கருத்து.

ஆனால், கொலைக்களக் காதையில்,

கற்பின் கொழுந்தே
  பொற்பின் செல்வி
சீரடிச் சிலம்பின்
  ஒன்றுகொண்டு யான் போய்
மாறி வருவன்
  மயங்கா தொழி...

எனக் கோவலன் கண்ணகியிடம் கூறுவதால், அவன் ஒற்றைச் சிலம்பையே விற்கச் சென்றான் என்பது வெளிப்படுகிறது. மேலே நிகழும் கதைப் போக்கும் இதையே உறுதிப் படுத்துகின்றது.

வறுமைப்பட்ட மக்கள் காற்சிலம்பை விற்றுப் பிழைப்பது அக்காலத்தில் மட்டுமல்ல; இக்காலத்திலும் உண்டு. ஆனால், எக்காலத்திலும் சரி; மகளிர் காற்சிலம்புகள் இரண்டினுள், ஒன்றை வீட்டில் வைத்து மற்றொன்றை விலை கூறியதை நாம் கேட்டதில்லை. ஒரு காலுக்கு மட்டும் சிலம்பணியும் வழக்கம் திருமணமான தமிழ்ப் பெண்களிடம் இருந்ததாகவும் தெரியவில்லை. ஆகவே கோவலன், தான் எண்ணியபடியே ஒரு சிலம்பை விற்றிருப்பினும், மற்றொரு சிலம்பை கண்ணகி தேவியார் அணிந்துகொள்ள இயலாது.

அப்படி இருந்தும், கோவலன் ஒரு சிலம்பை மட்டும் விற்க சென்றதன் நுட்பம் புலனாகவில்லை. கோவலன் இரண்டு சிலம்பையும் விற்பதற்கு முயன்றிருப்பானாயின், பொற்கொல்லன் அவனைக் கள்வன் எனக் கூறத்துணிந்திருக்க முடியாது. ஒற்றைச் சிலம்பை விற்க முயன்றதே பொற்கொல்லனின் சதிக்கு சாதகமாகிவிட்டது. என்றாலும், கதை நிகழும் போக்கிலிருந்து ஒரு உண்மையை உணர்ந்து கொள்ளுகிறோம். அதாவது கண்ணகிவசமிருந்த ஒற்றைச் சிலம்புதான் கோவலன் நிரபராதி என்பதை நிரூபிக்கிறது. அந்தச் சிலம்பு இல்லையேல், கதையின் போக்கே மாறி இருக்குமல்லவா?

கணவன் பெயர் கூறும் கண்ணகி!

சிலப்பதிகாரத்தில் மற்றொரு சிறந்த நெறியைக் காண்கிறோம். இக்கால தமிழ்ப் பெண்கள் - குறிப்பாக, இந்துப் பெண்கள் கணவன் பெயரைக் கூறுவது வழக்கமில்லை. பிறிதொருவர் துணையின்றி, தாமே கணவன் பெயரைக் கூறவேண்டிய கட்டாயம் ஏற்படும்போது கூட, நம் தமிழ்ப் பெண்கள் கணவன் பெயரைக் கூறுவதில்லை.

ஆனால் சிலப்பதிகார காலத்து தமிழ்ப் பெண்களிடம் இந்த வைதீகம் இருந்ததாகத் தெரியவில்லை.

வழக்குரை காதையில், தன் முன் நிற்கும் கண்ணகி தேவியை நோக்கி, "கண்களில் நீர்பெருக, என் முன் நிற்கும் பெண்ணணங்கே நீ யார்?" எனக் கேட்கின்றான் பாண்டி வேந்தன். அவனுக்குப் பதிலளிக்குமிடத்து,

நின்பால் கொலைக்களப்பட்ட
கோவலன் மனைவி

எனத் தன் காதலன் பெயரைக் கூறி தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளுகிறாள் கண்ணகி.

இதிலிருந்து சிலப்பதிகாரக் காலத்துப் பெண்களிடம் கணவன் பெயரைக் கூறும் வழக்கம் இருந்ததாக அறிகிறோம்.

ஆனால், கொலைக்களக் காதையில், மாதரி இல்லத்தில் தனது கையாலேயே உணவு சமைத்த பின்னர், உண்ண வரும்படி கோவலனை அழைக்குமிடத்து,

அமுதம் உண்க அடிகள்

என, காதலனைப் பெயரிட்டு அழைக்காது 'அடிகள்' எனப்

பெருமைப் படுத்திக் கூப்பிடு கின்றாள் கண்ணகி.

இதனால் கணவன் முன்னிலை யிலேயே அவனைப் பெயரிட்டு அழைக்கும் வழக்கம். முற்காலத் தமிழ்ப் பெண்களிடமும் இருந்ததில்லை எனத் தெரிகிறது.

கூந்தலை விரித்துப் போர்ப் பிரகடனம்!

கற்புடைப் பெண்களின் கூந்தலை அவர்தம் கணவரே யன்றி, பிறிதொரு ஆடவர் கையாலும் தொடக்கூடாதென் பது பாரத நாட்டின் பண்பு. பாண்டவர் தேவியான திரௌ பதியின் கூந்தலை, துர்ச்சாத னன் தொட்டு இழுத்ததுதான் பாரதப்போர் துவங்கக் காரண மாயிற்று. "பாவி துர்ச்சாதன னால் அவிழ்க்கப்பட்ட எனது கூந்தலை, அவனது ரத்தத்தை எண்ணெயாகவும், எலும்பைச் சீப்பாகவும் கொண்டு வாரி முடிக்கும் காலம் வந்தாலன்றி, இடையில் முடிக்க மாட்டேன்" என்று சபதம் கூறினாள் திரௌ பதை.

கண்ணகி தேவியாரும், கோவலன் தன்னைப் பிரிந்து மாதவி இல்லத்தில் வாழ்ந்த காலையில்,

> மைஇரும் கூந்தல்
> நெய்யணி மறப்ப

கருத்து நீண்ட தனது கூந் தலுக்கு நெய் பூசி அழகு செய் யாது கவலையோடு காலங்கழிக் கின்றாள்.

கோவலன் கொலையுண்ட செய்தியறிந்த பின்னர், கோபா வேசங் கொண்ட கண்ணகி தேவியார் கூந்தலை விரித்த கோலத்துடன்,

> காய்சினந் தணிந்தன்றிக்
> கணவனைக் கைகூடேன்

"எனது காதலனைக் கொன்ற கொடுங்கோல் அரசை அழித்தாலன்றி, என் சீற்றந் தணியாது" எனச் சூளுரை கூறுகின்றாள். ஆம், வாளுயர்த்தி சபதம் செய்வது படை வீரர் களின் வழக்கம். அதுபோலவே, கூந்தலை விரித்துக் கொள்கை யைப் பிரகடனம் செய்வது மங் கையர்களின் மரபு போலும்!

இந்தக் காலத்திலும், பெண் கள் கூந்தலை விரித்திருக்கக் கண் டால், "அம்மா கூந்தலை அலைய விடாதே, குடித்தனத்திற்கு ஆகாது" என்று வயதான பெண்கள் எச்சரிக்கை செய்யக் கேட்கிறோம்.

விரித்த கூந்தலுடன் வீரா வேசங் கொண்டு தன் முன் நிற் கும் கண்ணகியைக் கண்ட பாண்டியன் நிலையைக் கூறு மிடத்து,

> "மெய்யிற் பொடியும்
> விரித்த கருங் குழலும்
> கண்டளவே தோற்றான்
>
> ஃ ஃ ஃ
>
> காடெல்லாஞ் சூழ்ந்த
> கருங்குழலும் கண்டஞ்சிக்
> கூடலான் கூடாயினான்

என்கிறார் இளங்கோவடிகள்.

திரு. ம. பொ. சி. எழுதிய நூல்கள்

●

கப்பலோட்டிய தமிழன்	1	12	0
வீரபாண்டியக் கட்டபொம்மன்	1	12	0
வானொலியில் ம. பொ. சி.	1	8	0
கயத்தாற்றில் கட்டபொம்மன்	0	4	0
சிலப்பதிகாரமும் தமிழரும்	0	8	0
சுதந்திரப்போரில் தமிழகம்	0	10	0
தமிழர் கண்ட காந்தி	0	8	0
மேதினப் புரட்சி	0	2	0
பிரிவினை வரலாறு	0	6	0
தமிழன் குரல்	1	4	0
மேடைப் பேச்சு	0	2	0
தளபதி சிதம்பரனர்	0	2	0
திராவிடத்தாரின் திருவிளையாடல்கள்	0	1	0
தமிழகமா? திராவிடமா? (அச்சில்)			

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

Edited, Printed & Published by M. P. Sivagnanam at Kannaki Achagam, Irusappa Garmani St., Triplicane, Madras-5.